www.padippakam.com

# தொழிலாளர் பாதை

DM 1,-

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

★ இதழ் எண் 25 ★ செப்டம்பர், 1989 ★

## உள்ளே...

★ இந்தியா சிறிலங்கா தமிழ் ஈழம் தொழிலாளர்களின் சர்வதேச ஐக்கியத்தை பேணு
பக்கங்கள் 3, 4, 10

★ சோவியத் யூனியனின் தேர்தல்களின் பின்னால்
டேவிட் நாத்
பக்கங்கள் 5, 6, 7, 8

★ இந்திய—இலங்கை ஒப்பந்தம்
—நந்சிங்
பக்கங்கள் 8, 9

★ சோவியத் பத்திரிகையில் டிராட்ஸ்கியின் கடிதங்கள் வெளியீடு !
பக்கம் 10

★ சைதாப்பேட்டை துப்பரவு தொழிலாளர்கள் மீதான பழிவாங்கல்களை முறியடி !
பக்கம் 10

### பி அண்டு சி ஆலையில்

## உடையாரின் 21 கோரிக்கைகளை, கதவடைப்பு திட்டத்தை உடைத்தெறிய

# உள்ளிருப்பு வேலை நிறுத்தத்திற்காகப் போராடு!

## இதற்கு ஆதரவாக், சி.ஐ.டி.யு. ஏ.ஐ.டி.யு.சி. யை நாடுதழுவிய பொது வேலை நிறுத்தத்தில் இறக்கப் போராடு!

கடந்த 70 வருடங்களுக்கு ...லாக B & C தொழிலாளர் ...ர் போராடிப் பெற்று அனைத் ...தயும்முற்றுமுழுதாகஅழித்து ...ிக்க, B & C ஆலையின் நிர் ...கம் B & C தொழிலாளர் ...ருக்கு அதன் 21 கோரிக்கை ...ள சென்னைத் தொழிலாளர் ...கத்தின் ஸ்டாலினிச W. R. ...தராஜன் மூலமாக சமர் ...த்துள்ளது.

...டந்த ஆண்டில் 1½ கோடி ...ட்டம் அடைந்த ஆலை நடப்பு ...ாடில 4 மடங்கு (6 கோடி) ...டம் அடைந்துள்ளது என் ... இந்த இழப்பை தடுத்து ...ந்தாவிட்டால் "B & C ...யின் தொடர்ச்சியான ...கத்துக்கு மிக ஆபத்தான ...வுகள் ஏற்படும்" என்று மீண்டும் 1984 ஐப் போலவும் ஸ்டாண்டர்டுபோட்டார்ஸைப் போலவும் கதவடைப்பு செய்வேன்! என்று மிரட்டுகிறது.

இந்த இழப்பிற்குக் காரணம் 1930களின் பெரும் பொருளாதார வீழ்ச்சிகளின் பின்பு ஏற்பட்ட மிகவும் பிரமாண்டமான பொருளாதார வீழ்ச்சிக்குள் உலக முதலாளித்துவம் மூழ்கிக் கொண்டிருப்பதாகும். ஐக்கிய நாடுகளின் அமைப்பான உங்டாட் (UNCTAD) வெளியிட்டுள்ள அறிக்கையின்படி 1989-90 களில் உலகப் பொருளாதாரம் குன்ற ஆரம்பித்துள்ளது மட்டுமல்லாது, இன்று முன்னேற்றமடைந்த நாடுகளுக்கு அது மிக குறிப்பிடத்தகுந்தவாறு உள்ளது. உலக சந்தையில் முன்னேற்றமடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கு-அமெரிக்கா ஜப்பான், ஐரோப்பாவுக்கு-இடையில் நடக்கும் தீவிர வர்த்தகப் போட்டியில் இந்தியா போன்ற பின்னடைந்த நாடுகள் மேலும் மேலும் ஒதுக்கப்பட்டு வருகின்றன. இந்தியா குறிப்பாக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் 1980 இல் தொடங்கிய வி.பி.சிங்—ராஜீவ்காந்திகளின் புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் தளர்த்தல் கொள்கை, நவீன மயமாக்கல் என்ற கோஷங்களின் கீழ் ஏகாதிபத்திய நாடுகளுக்கு கதவுகளை திறந்து விட்டது, இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி பற்றுக்குறை கூடிக்கொண்டு வந்ததன் விளைவாக இந்தியாவின் அந்நியக் கடன் 5,000 கோடி டாலர்களை எட்டியுள்ளது என உலக நிறுவனமான ஓ.இ.சி.டி, (OECD) அறிவித்துள்ளது மேலும் உலக வர்த்தக சந்தையில் இந்தியாவின் பங்கு ஒரு சதத்திலிருந்து அரை சதமாக வீழ்ச்சிற்றுயுள்ளது

இவ்வாறான நிலைமையில் உலக சந்தையில் தனது துணிகளை விற்கும் பி அண்டு சி ஆலையின "தொடர்ச்சியான இயக்கத்துக்கு நவீனமயமாக்கல் இன்றியமையாதது" (9வது கோரிக்கை) மட்டுமல்லாமல் வேலைப்பளு 88 வீழுக்காடாக உயர்த்தப்பட, வேண்டுமென்றும் நிர்வாகம் கோரியுள்ளது.

ஒரு வருடத்திற்கு முன்னர் 15 செப்டம்பர் 1988ல் சோசலிசத் தொழிலாளர் அணி B&C தொழிலாளர்களுக்கு எழுதிய பகிரங்க கடிதத்தில் "இன்று ஆக 7,000 பேர் அளவில் உள்ள நிலையில் மேலும் 2,000 தொழிலாளர்களை வேலையிலிருந்து எடுத்து 5,000 க்கு உட்பட்ட எண்ணிக்கையுள்ள தொழிலாளர்களுடன் ஆலையை நடத்த சூழ்ச்சிகள் நடந்து வருவதை அநேக தொழிலாளர்கள் அறிந்திருப்பார்கள்". என்று கூறிய எச்சரிக்கையை உறுதிப்படுத்துவது போல, 1518 பேர் ஆள் குறைத்தல் (கோரிக்கை I) மேலும் ஆட்களின் எண்ணிக்கை வல்லுநர்

2ம்பக்கம் பார்க்க

## சிறிலங்கா டிராட்ஸ்கிஸ்டுகளின் மீது கை வைக்காதே !

...ன்காம் அகிலத்தின் ...த்துலக குழுவின் இலங் ... பகுதியான புரட்சிக் ...னிஸ் கழகத்தின் மீது ...ங்காவின் வலதுசாரி ...தாசா ஆட்சியின் ...வம் தொடுத்துள்ளதாக் ...களை. சோசலிசத்தொழி ... கழகம் வன்மையாக ...டனம் செய்கிறது. ...ந் தாக்குதல்களை கண் ...ம்படியும். ராணுவத் ... கைது செய்யப்பட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் ...த்தின் தோழர்களை ...னை விடுதலை செய்ய ...ரும்படியும் சர்வதேச ...ாழிலாள வர்க்கத்தை ... அழைக்கிறோம்.

செப்டம்பர் 6ம்தேதி மாலை 6-30 மணிக்கு ராணுவத்தினர் புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தின் அச்சக கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றனர். அவர்களால் அங்கு யாரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதன்பின்பு.க.க.வின தலைமையகத்திற்குசென்றனர் அங்கே அவர்கள் புகக.வின் வார இதழான 'கம்கறு மாவத்த' (தொழிலாளர்பாதை) பத்திரிக்கையின ஆசிரியர் ஆனந்தவக்கும் புறவை தேடுவதாக கூறினர். அப்போது தலைமையகத்தில் இருந்த பு.க.கவின் அரசியல் குழு உறுப்பினர் தோழர் W. சுனில் மற்றும் தோழர் அஜித்தையும் ராணுவத்தினர் கைது செய்து சென்றனர். இது வரை அவர்கள் எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பது தெரியாது.

மறுநாள் மதியம் 2 மணிக்கு மீண்டும் ராணுவத்தினர் பு. க. கவின் தலைமையகத்திற்குவந்து மேலும மூன்று புகக உறுப்பினர்களை தாம தேடுவதாக கூறினர். அந்தப்பட்டியலில் புகக வின் பொதுச்செயலாளர் தோழர் விஜேடயஸ் பெயரும், உள்ளடக்கப்பட்டிருந்தது அவர்கள் தேடிய 3 பேரையும் அங்கு கண்டுபிடிக்க முடியாதநிலையில் அப்போது அலுவலகத்தில் இருந்த இரண்டு தோழர்களை கோரமாக ராணுவத்தினர் தாக்கிவிட்டுச்சென்றனர்.

புரட்சிக்கப்யூனிஸ்ட் கழகத்தின் மீது பிரேமதாசா ஆட்சி தாக்குதல்களை உக்கிரப்படுத்தியிருக்கும் இந்த வேளையில், அந்நாட்டில்உள்நாட்டுயுத்தம் வளர்ச்சி அடைந்துவரும் சூழ்நிலைமையில் சர்வகட்சிமாநாட்டில் பங்கு பெறும்படி ஜே.விபி பாசிஸ்டுகளுக்கு பிரேமதாசா அழைப்பு விடுத்தது குறிப்பிடத் தக்கது.

சிறிலங்கா அரசின் படைகளுக்கு எதிராகவும் ஜேவிபி பாசிஸ்டுகளுக்கு எதிராகவும் இலங்கைத் தொழிலாள வர்க்கத்தைப்பேண, தொழிலாளர்களின் ஐக்கிய முன்னணி அமைக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தையும், சுதந்திரமான தொழிலாளர் பாதுகாப்பு படைகள் அமைக்கவேண்டும் என்ற பிரச்சாரத்தையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்னெடுத்திருப்பது சிறிலங்கா முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு மரணபீதியை உண்டு பண்ணியதாலேயே இத்தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில் தமிழ் ஈழத்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, தமிழ்ஈழ மற்றும் சிறிலங்காவின் ஐக்கிய சோசலிசக் குடியரசுகளை அமைக்கவே பு.க.க போராடுகிறது.

## ...த்திலிருந்து மாலத்தீவிலிருந்து, இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை வாபஸ் வாங்கப் போராடும்படி ஸ்டாலினிச சி. பி. எம், சி. பி. ஐ. தலைமைகளை நிர்ப்பந்தி!

படிப்பகம்

www.padippakam.com



# B&C மில் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்திற்காகப் போராடு!

குழுவின் மூலம் ஆராயப்படும் (கோரிக்கை 3) என்றும் நிர்வாகம் அறிவித்துள்ளது.

72% இருந்த ருட்டிஎபிசியன்சியும் 70% இருந்த நார்த்ராப் எபிசியன் சியும் முறையே 84%ம் 80%ம் ஆக்கப்பட்டு இப்போது முழு ஆலையிலும் 88% ஆக்கப்பட வேண்டும்என கோரியுள்ளது,

கோரிக்கை 4 : இன்று ஆகஸ்ட் 1989ல் தொழிலாளர்கள் சராசரியாக 1170 ரூபா பெறுகிறார்கள். இதில் 850 ரூபா வெட்டப்பட்டு ஜூன் 1985 பஞ்சப்படி அளவிற்கு ஷீலிங் போடப்பட வேண்டுமாம்

கோரிக்கை 5 : முன்பு சம்பளம் தான் உற்பத்தியுடன் இணைக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது பஞ்சப்படியும் உற்பத்தியுடன் இணைக்கப்பட வேண்டுமென்று கோருவதுடன், தனி ஒரு தொழிலாளி பெறும் பஞ்சப்படி அவர் கொடுக்கும் உற்பத்தியுடன் மட்டுமல்லாது ''டிபார்ட்மெண்டில் பணியாற்றும் எல்லா தொழிலாளர்களுக்கும் அங்கு எட்டப்படும் உற்பத்தித்திறன் விகிதத்தில் சம்பளமும், பஞ்சப்படியும் அளிக்கப்படும்'' என கோரியுள்ளது.

ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மாத முடிவில் சம்பளம் கையில்ஏதும் கிடைக்காது ஆலைக்கு பாக்கியுடன், வெற்றிலையைப் போட்டுக்கொண்டு இருக்கும் சூழ்நிலைமையில், இனிமேல் எத்தனை தொழிலாளர்கள் மாதம் முடிவில் சம்பளத்தை கையில் பெறுவார்கள் என்பது கேள்விக்குறியாகும். அவர்களின் கம்பெனிப் பாக்கிக்காக, கொத்தடிமையாக ஆலையின் பெரும்பான்மையான தொழிலாளர்களைமாற்ற நிர்வாகம் முயற்சிக்கிறது.


கோரிக்கை 6: B&C தொழிலாளர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அந்தோணிப்பிள்ளை டிராட்ஸ்கிச நான்காம் அகிலத்தை விட்டு ஓடுவதற்கு முன்னர் டிராட்ஸ்கிச கொள்கைகளுக்கு B & C தொழிலாளர்களின் தலைமையில் நின்று போராடும் போது வென்றெடுத்த உரிமைகள், பின்பு குசேலரினாலும், ''இந்திரா காங்கிரஸ்' அந்தோணிப் பிள்ளையாலும், இவர்களுடன் கூட்டாக வி. பி. சிந்தனாலும் 1981ல் 6 மாத போராட்டத்திலும் 1984 இல் 11 மாத போராட்டத்திலும் காட்டிக் கொடுக்கப்பட்டு, இன்றும் எஞ்சியிருக்கும் இரவு ஷிப்ட் அலவன்ஸ், வார் புரடக்ஷன் அலவன்ஸ், தூய்மைப்படி, குறுகிய அவசர விடுப்பு, பனிக்கால விழுக்காடு போன்ற சிறப்புப்படிகள் மற்றும் சலுகைகள் ரத்துச் செய்யப்படுகின்றனவாம்.

கோரிக்கை 7 : சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட விடுமுறைகளை தவிர தொழிலாளர்கள் போராடிப்பெற்ற விடுமுறைகள் அனைத்தும் ரத்தாகின்றன என்று நிர்வாகம் தனது கோரிக்கை வைப்பதற்கு முன்னரேயே, ''ஆகஸ்ட் 15 சுதந்திர நாளை'' நிர்வாகம் வேலை நாள் ஆக்கியது. இதற்கு பெயரளவில் கண்டனம் தெரிவித்துவிட்டு நடைமுறையில் சங்கத்தலைமை ஒத்துழைத்தது.

கோரிக்கை 9 : உலக சந்தைக்கான உற்பத்தியில் ஈடுபட்டுள்ள B&C ஆலை, தொழிலாளர்களுக்கு எதிரான நவீனமயமாக்கல் என்ற திட்டத்தின் கீழ் மேலும் நடத்த இருக்கும் ஆட்குறைப்பு பணி ஒதுக்கீடு

கடமைகள்வேலைகள் நிர்ணயம் செய்துகாண்டலை ''அறிவியல்' அடிப்படையில் கூட்டுவதற்கும் முதலாளிகள் பெற்றகடன் திருப்புதலுக்கும் மற்றும் வட்டி கட்டுதலுக்கும் ஏற்படும் நிதிப் பளுவை நிர்வாகம் சமாளிப்பதற்காக 'தொழிலாளர்கள் கூடிய பொருளாதார உதவி' எதையும் கேட்கக்கூடாதாம்.

கோரிக்கை 12: வேலைப் பளுவைக் கூட்ட தேவைக்கேற்ப எந்திரங்களின் வேகத்தை திருத்தல் செய்வதில்'' எந்திரத் தின்வேகத்தை முடுக்கி விடுவதற்கு ''நிர்வாகத்திற்கு உரிமை'' உண்டாம்; தொழிலாளர்களுக்கோ, சங்கத்துக்கோ, அதைத் தட்டிக் கேட்க உரிமைஇல்லையாம். நிர்வாகம் தொழிலாளியை தன் இஷ்டப்படி ஒரு தொழிலிலிருந்து மற்றொரு தொழிலுக்கோ, ஒரு டிபார்ட்மெண்டிலிருந்து மற்றொன்றுக்கோ, அல்லது B&C ஆலையிலிருந்து பங்களூர் மில்லுக்கோ மாற்றம்செய்யப்படுவதற்கு உரியவர்கள் ஆவார்காம்.



பி அண்டு சி ஆலை வாயில் கூட்டத்தில் சோசலிச தொழிலாளர் அணி செயலர் தோழர் மோசஸ் ராஜ்குமார் பேசுகிறார்

காரிக்கை13: நிர்வாகத்தின் கெடுபிடியை கூட்டஒவ்வொரு பிரிவு டிபார்ட்மெண்ட் நுழைவாயிலிலும் கார்டு பஞ்சிங் அமைப்பை அறிமுகப்படுத்தப் போகிறதாம்,

கோரிக்கைகள் 15,16 : நிர்வாகத்திற்கு ஜால்ரா போடுவொர்களுக்கு பதவி உயர்வுக்கும் 'காலியிடங்களை நிரப்பி'வேலை வாய்ப்பு,அளிப்பதற்கும்'தகுதி அடிப்படையில் பதவி உயர்வு' கொடுப்பதற்கும், 'காலிஇடங்களை நிரப்புவதற்கும்'' நிர்வாகத்திற்கு உரிமையாம்,

கேண்டீன்சாப்பாட்டைதொழிலாளியின் தலையில் கட்டி, அதற்குவழங்கவேண்டியமானியத்தை வெட்டி ' இனி அது தொழிலாளர்கள் கூட்டுறவு முறையில் சொசைட்டி முறையில் அமைக்கப்படும் சங்கமாக செயற்படுமாம்

கோரிக்கை 20 : தொழிலாளர்கள் இதுவரையில்வென்றெடுத்த கிரேடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டு நெசவுத் தொழிலாளர்களுக்கு 1) ஆபரேடிவ் 2) ஆபரேட்டிவ் உதவியாளர்கள் என்ற இரு பதவிகளை கொண்டு வரப்போகிறார்களாம். ''ஒருகுறிப்பிட்ட பணிபுரியும் தொழிலாளிஆபரேடிவ் மற்றும் ஆபரேடிவ் உதவியாளர் இனங்களில் எவ்வகையை சார்ந்தவர் என்பதை நிர்வாகமே தீர்மானிக்குமாம்'' இது புராதன காலத்து அடிமை முறையை ஆலைக்குள் அறிமுகபடுத்துவதாகும்.

கோரிக்கை 18: 21-6-89ல் நடந்த ஊர்வலத்தின் போது

சோசலிசத் தொழிலாளர் அணி செயலர் மோசஸ் ராஜ்குமார் தாங்கிய அட்டையை -சிபிஎம், சிபிஐ தலைமைகள் முதலாளித்துவ கட்சிகளுடன் உறவைத் துண்டித்து தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் அமைக்க போராடும்படி கோரும் அட்டையை, ஸ்டாலினிச சிபிஎம்இன் மாவோவாத இந்திய மக்கள் முன்னணியின் சில குண்டர்கள் பறித்து அதைகிழித்துப்போட்டபின் ஊர்வலத்தின் இறுதியில் வரதராஜன் 'வாய்ச்சவாடல்' அடித்து விட்டு நிர்வாகத்திடம் ''உங்களது வேண்டுகோளுக்குப் பதிலளிக்கும் முகமாகத் தொழிலாளர்கள் எபிஸியன்சியை அடைவதோடுஆப்சென்டீசத்தையும்குறைத்துக்கொள்ள முழு முயற்சியும் எடுப்பார்கள் என்று நாம்உடன்படுகிறோம்'' என்று கூறிக்கையெழுத்திட்ட கடிதத்தை சமர்ப்பித்தார்.

இந்தியமக்கள்முன்னணியின் தொழிலாளர் முன்னணியின் செயலர் A. பிரான்சிஸ், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை இழிவான முறையில் நிர்வாகம் பணயக்கைதிகளாக்க உடன்பட்டு ''கடின உழைப்பிற்கும் சம்பள இழப்பிற்கும் ஆளாகி வரும் NB தொழிலாளர்களிடம் ஒட்டு மொத்த தொழிலாளர் நலனுக்காக மேலும் ஒத்துழைப்புகேட்டுள்ளது. ஜனநாயக கோட்பாட்டிற்குப் புறம்பாக இருந்தாலும் சமூகமான பேச்சு வார்த்தைக்கும் பாதிக்கப்பட்ட தோழர்கள், ஆலைக்குள் வரவும் நீதிக்குப் புறம்பாக நீ எதிர்பார்க்கும் ஒத்துழைப்பிலும் இறங்கி விட்டோம்'' என்று4-9-89ல் தட்டிப்போட்டு அவர்களது துரோகத்தை பகிரங்கப் படுத்தியுள்ளார்கள்.

இவ்வாறாக சங்கத்தின்ஸ்டாலினிச, மாவோவாததுரோகத் தலைமைகள்வழங்கிய ஆதரவை அடிப்படையாகக்கொண்டு, நிர்வாகம் ஏற்கனவே வேலைப்பளு அதிகரிப்பினாலும் போதிய சம்பளமின்மையாலும் வெறுப்படைந்துள்ள தொழிலாளர்கள் மீது பொய்க்குற்றச்சாட்டுகளை சுமத்தி மேலும் தாக்குதலை தொடுக்கும் முகமாக பின் வருமாறு கூறுகிறது. 'ஆலையை அழிக்கும் விஷவித்தாக 'அசாதாரண மட்டம்'' இருந்து வருகிறது, அனுமதியின்றி தாமாகவே மட்டம் போடும் புரையோடிய தொழிலாளர்களின் மட்ட நாட்கள் மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்ட மருத்துவச் சான்றிதழ்கள் போன்றவையில் கழித்த விடுப்பு நாட்கள் இரண்டும் சேர்த்து 12 மாதக்காலத்தில் 100 நாட்களோ அதற்கு மேற்பட்டோ காணப்படுமே யானால், அத்தகையோர்இழப்பின்றி பணிவிலக்கம்செய்யப்படுவர் ஒழுக்கத்தைப் பேணுவதிலும், மட்டத்தைகுறைப்பதிலும் தொழிலாளர்கள் ஒத்துழைத்தல் வேண்டும்''.

இன்று நிர்வாகத்தால் வைக்கப்படும் கோரிக்கைகள் அனைத்தும் உலக அளவில் திவால் அடைந்துள்ள லாப உற்பத்தி அமைப்பு முறைக்கு தொழிலாளர்களை பலியிட்டு 'மூச்சுக்கொடுக்க' கோரப்படுபவையாகும். இன்று உலகின் அனைத்துக் கண்டங்களிலும் தொழிலாளர்கள் இந்ததிவாலான முதலாளித்துவ லாப உற்பத்தி முறைக்கு எதிராக கிளர்ச்சி எழுச்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள் பொது எதிரிக்கு எதிராக தொழிலாளர்கள் அனைவரையும் ஒரு பொது வேலைத் திட்டத்தில வேலைகளை பாதுகாக்க, வாழ்க்கைத்தரத்தை பேண, வேலை நிலைமைகளை பேண காலவரையற்ற உள்ளிருப்பு வேலைநிறுத்தம்,பொதுவேலை நிறுத்தம் போன்ற வர்க்கப் போராட்ட முறைகளில் இறக்கி லாப உற்பத்தி முறைக்கு முடிவு கட்டிதேவையை அடிப்படையாகக்கொண்ட திட்டமிடப்பட்ட சோசலச பொருள் உற்பத்தி முறைக்காக போராடவேண்டும். இப்படி முழு உலகத் தொழிலாளர்களை அணி திரட்ட உலக டிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு ஆசியா, ஆஸதிரேலியா, ஐரோப்பா, அமெரிக்கா, கண்டங்களில் போராடி வருகிறது.

ஆனால் இங்கு''கம்யூனிஸ்ட் கட்சி'' என தவறாக பெயர் இட்டு செயற்பட்டு வரும் ஸ்டாலினிச சி.பி.எம்,சி,பிஐ மற்றும் அவற்றின் தொழிற் சங்க அமைப்புகளான சி ஐ. டி,யு. ஏ.ஐ.டி.யு.சி தேசிய அளவில் என்பது ஒரு புறம் இருக்க, மாநில அளவிலும் கூட தொழிலாளர்களைஒன்று பட்ட போராட்டத்தில இறக்க மறுத்து வருகிறார்கள்

முதலாளித்துவ அமைப்புக்கு அபாயம் ஏற்படுத்தாத வகையில் ராஜீவ்காந்திக்கு பதிலாக வி.பி.சிங்குகளை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காக பிரச்சாரங்களும், கூட்டங்களும் நடத்துவதோடு, ''ஒருநாள் பந்த்''ம் ஏற்பாடு செய்து விபிசிங், கருணாநிதி, ராமராவ்,தேவிலால்போன்ற முதலாளி வர்க்க பிரதிநிதிகளின் ஆதரவையும்பெற்றுக் கொள்கிறார்கள்,

பொதுப்போராட்டத்திற்கு தொழிலாளி வரமாட்டான் என்று ஸ்டாலினிசத் தலைமைகள் தமது காட்டிக்கொடுப்புகளை நியாயப்படுத்த முயற்சித்தாலும், ராஜிவ் காந்தியை வெளியேற்றவும் தொழிலாளர்களின், விவசாயிகளின் பல பொருளாதாரக் கோரிக்கைகளை வைத்து சிஐடியு, ஏஐடியுசி தலைமையில் ஏற்பாடு செய்த ஆகஸ்ட் 30 பந்தில் தொழிலாளர்கள் பங்குகொண்டு நாட்டை ஸ்தம்பிக்கச் செய்தது, தொழிலாளர்களின் வர்க்க ஒற்றுமையையும், பட்ட குணத்தையும் மீண்டும ஒருமுறை ஸ்டாலினிஸ்டுகளின் பொய்களுக்கு சவாலாக நிரூபித்துள்ளது.

இவ்வாறுகவே மீனம்பாக்கம் பின்னி என்ஜினியரிங் ஆலையின். மற்றும மேட்டல் பாக்ஸ் ஆலையின் ஒருவருடத்திற்கும் மேலான கதவடைப்புக்கு எதிராகவும், நாடு பரந்தளவில் ஜெக்கும் மேற்போட்டகதவடைப்புகளுக்கு எதிராக தொழிலாளர்களை ஒன்றுபட்டபோராட்டத்தில் அணி திரட்டுவதை நிராகரித்து ஒவ்வொன்றையும் பிரித்து, தனிப் போராட்டங்களாக்கி தனிமைப் படுத்தி, தொழிலாளர்களை சோர்வடையச்செய்து இறுதியில் நிர்வாகத்தின் அடிமை சாசனங்களுக்கு கையெழுத்திடும் நிலைக்கு கொண்டு வரும் ''சாதனைகளையே'' சிஐடியும் ஸ்டாண்டர்டு மோட்டார் போன்ற ஆலைகளில் ஏஐடியுசிம் செய்து வருகின்றன.

1981, 1984களில் B&C தொழிலாளர்களின்போராட்டமும் இவ்வாறுகவே அந்தோணிபபிள்ளையாலும்குசேலராலும், வி பி.சிந்தனாலும், காட்டிக் கொடுக்கப்பட்டது. இத்துரோகத் தலைமைகள், குறைந்தபட்சம் அவர்கள் தலைமையிலுள்ள தொழிற் சங்கங்களை B&C தொழிலாளர்களுக்கு ஆதரவாக அணி திரட்ட மறுத்து அனைத்துக் கட்சி மாநாடு என்றபெயரில் அனைத்து துரோகத் தலைமைகளின் பலத்தையும் அணி திரட்டி, இறுதியில் B&C தொழிலாளர்கள் அடிமை சாசனத்தில் கையெழுத்திட வழி செய்தனர்.

இவ்வாறுக தொழிலாளர்களின் போராட்ட சக்தியை மழுங்கடித்து B&C தொழிலாளி போராட்டத்திற்கு தாளமாட்டான் என்றுவரதராஜன், மாதவராவ் துரோக தலைமைகள் மிக கேவலமாக கிண்டல் செய்தாலும் B&C தொழிலாளர்கள் ஏனைய தொழிலாளர்களுடன் ஒன்றிணைந்து பொதுப் போராட்டத்தில் இறங்கத் தயார் என்பதை ஆகஸ்ட் 30ல் நிருபித்துள்ளனர். ஆகஸ்ட் 30 பந்த் மேலும் நிருபித்திருப்பது சிஐடியு, ஏஐடியுசியினால் நாடு பரந்தளவில் தொழிலாள வர்க்க பலத்தை அணி திரட்ட முடியும் என்பதாகும்.

பி அண்டு சி தொழிலாளர்கள் இத்துரோகத்தலைமைகள் மீண்டும் அவர்களது காட்டிக் கொடுப்புகளை தொடர விடாது தடுக்க வேண்டும். அதற்காக பின்வரும் கோரிக்கைகளுக்காக போராட, பொதுச்சபையை உடனே கூட்டும்படி நிர்ப்பந்திக்க வேண்டும்.

- நிர்வாகத்தின் தொழிலாள விரோத 21 அம்சக்கோரிக்கைகளை முழுமையாக நிராகரி!
- அனைத்து வேலைகளையும் பாதுகாக்கவும் இன்றைய விலைவாசி உயர்வுக்குஏற்ப பஞ்சப்படி உயர்வுக்கும் போராடு!
- உள்ளிருப்பு வேலைநிறுத்தத்திற்கு தயார் செய்!
- உள்ளிருப்பு போராட்டத்தை பாதுகாக்க சிஐடியு, ஏஐடியுசியை காலவரை அற்ற பொதுவேலை நிறுத்தத்தில் இறக்கு!
- தொழிலாளர்கள் விரும்பினால் திரும்பி அழைக்கக் கூடிய ஆலைப்போராட்டக் குழுவின் பிரதிநிதிகளை தேர்ந்தெடு!
- நவீன மயமாக்கலினால் குறையும் மனித நாட்களுக்கு ஏற்ப, சம்பள வெட்டின்றி வாரம்48மணி நேர வேலையை 30 மணி ஆக்கவும் போராடு!
- அனைத்து பதிலி தொழிலாளர்களையும் நிரந்தரம் செய்!
- ஆலைக்கணக்குப்புத்தகங்களை தொழிலாளர் பரிசீலனைக்கு திற!
- B&C ஆலை உட்பட அனைத்து ஆலைகளையும், வங்கிகளையும் முதலாளிகளுக்கு நஷ்டஈடின்றி தொழிலாளர் ஆதிக்கத்

12ம் பக்கம் பார்க்க

www.padippakam.com



# இந்திய, சிறிலங்கா, தமிழ் ஈழத் தொழிலாளர்களின் சர்வதேச வர்க்க ஐக்கியத்தை பேணு!

# இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் பேரினவாத யுத்த வெறிக்கூச்சலை தோற்கடி!

# தமிழ் ஈழ தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்!

# உடனடியாக, நிபந்தனை இன்றி இந்தியப் படைகளை தமிழ ஈழத்திலிருந்து வாபஸ் வாங்க போராடு!

## சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் அறிக்கை 23—7—89

சிறிலங்காவிற்கு எதிராக திவாலான முதலாளித்துவ காங்கிரஸ் அரசாங்கத்தின் யுத்த முஸ்தீபை, இந்தியாவில் உள்ள தொழிலாளர்களின் சுதந்திரமான வர்க்க பலத்தை ஒரு பொதுவேலைநிறுத்தத்தின் மூலம் அணிதிரட்டி தோற்கடிக்கவும், தமிழ் ஈழத்திலிருந்து உடனடியாகவும், நிபந்தனை இன்றியும் இந்திய ஆக்கிரமிப்புப்படைகளைவாபஸ்வாங்கவும், தமிழ் ஈழதேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையைஉறுதி செய்யவும் போராடும்படி நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத்தொழிலாளர்கழகம் அறைகூவுகிறது.

இந்திய தொழிலாள வர்க்கம் ஒருபொழுதும் தனதுநலன்களை தனது வர்க்க எதிரியான இந்தியமுதலாளித்துவவர்க்கத்துடன் ஒன்றுபடுத்தி பார்க்க முடியாது. யார் முதல் சுடுகிறார்கள் என்பதை பொருட்படுத்தாது. யுத்தம் வெடிக்குமாயின் வர்க்க நனவுள்ள தொழிலாளர்களின் புரட்சி கர கடமை. மூர்க்கமாக எமது கௌரவத்தையும், மானத்தையும், பெயரையும், கொடியையும் பேணுவோம் என்றஆளும் வர்க்கத்தின் தேசிய வெறி பிடித்த யுத்த முழக்கத்திற்கு எதிராக வர்க்கப் போராட்ட முறைமூலம் போராடி, தெற்கு ஆசிய பிராந்தியத்தில் உலக ஏகாதிபத்தியத்தின் பிரதான போலீஸ்காரனாக செயற்பட்டு வரும் இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர்களை விரட்டி அடித்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை விவசாயிகளின் கூட்டுடன் நிறுவவேண்டும். உலக சோசலிச குடியரசின் பகுதியாக இந்திய உபகண்டத்தில் ஐக்கிய சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்தை அமைக்க வேண்டும். அது இப்பிராந்தியத்திலுள்ள தமிழ் ஈழம் உட்பட அனைத்து ஒடுக்கப்படும் தேசிய இனங்களின், சுயநிர்ணய உரிமையைஉறுதி செய்யும்.

### என்ன நலன்களுக்காக மோதல்

இது நலன்களின்மோதலினால் அல்ல ஆனால் முதலாளித்துவ ஆட்சியையும் முறை தவறிப் பிறந்த அரசுஅமைப்பு முறையையும் பேணும் ஒத்தநலன் 1987ஆம் ஆண்டு ஜூலை 29ல் ஏகாதிபத்தியத்தால் ஊக்குவிக்கப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை கையெழுத்திட இந்திய உபகண்டத்திலுள்ள இரண்டு ஏகாதிபத்திய அடிவருடிகளையும்முன் தள்ளியது. அதுவே இப்போது ஒரு 'குடும்ப' யுத்தத்திற்கும் உந்துகிறது.

இந்தியா-இலங்கைஇரண்டு அரசாங்கங்களுமே இந்தியா-இலங்கை ஒப்பந்தம் தத்தமது நாடுகளின் தேசியநலன்களைப் பேண என்று கூறினார்கள். இங்கே தொழிலாளர் மற்றும் ஒடுக்கப்படும் மக்களின் நலன் [illegible] த்தின் நலன்களை அசுத்தப்படுத்தும் ஒரு பொதுவான தேசிய நலன்கள் என்ற முழுமையான கருத்துக்கும் இடையில் ஒரு தெளிவான வரையறை செய்யப்பட வேண்டும்.

1987ல் சிறிலங்கா முதலாளித்துவ வர்க்கத்தினால் இந்திய ராணுவம் வரவழைக்கப் பட்டது, இந்திய அரசாங்கமும் ஸ்டாலினிச தலைமைகளும் சிறுமுஞ்சித்தனத்துடன்கூறுகின்றவாறு தமிழ்தேசிய இனத்தை பாதுகாக்க அல்ல. ஆனால மரணவேதனையில் இருந்த கொழும்பு அரசாங்கத்தின் பளுவைக் குறைப்பதற்கு ஆகும்.

தனர். இது இந்திய அரசாங்கத்தின் தலைவனான ராஜிவ் காந்தியினால் தெளிவாக டில்லியில் நடந்த ஒரு பத்திரிக்கையாளர் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது: ''இந்திய அமைதி காக்கும் படையினால் தான் இலங்கை ஐக்கியப்பட்டு ஒரு நாடாக இருக்கிறது, அது இல்லாதிருக்குமாயின் இப்போது இலங்கை உடைந்து போய் இருக்கும் ('இந்து; ஜூலை 18, 1989).

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாகும் முன்னரே இந்திய ராணுவத்தின் பிற்போக்குத் தலையீட்டைப் பற்றி



இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் தமிழ் ஈழமக்களின் வீடுகளை தீயிடும் காட்சி.

சிறிலங்காராணுவம் அன்றைய தமிழ் ஈழ விடுதலை போராளிகளின் கைகளில் அவமானகரமான தோல்வியை எதிர் கொண்டது. சிறிலங்கா ராணுவம் இந்திய ராணுவத்தினால் விடுவிக்கப்பட்ட மறுகணமே அவை தொழிலாளர் போராட்டங்களை நசுக்குவதற்காக தென் இலங்கைக்கு இடமாற்றப்பட்டன.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் வளர்ச்சி இந்திய உபகண்டத்தில்இரண்டாம்உலகப் போரின் பின்பு ஏகாதிபத்தியத்தினால் ஏற்படுத்தப் பட்ட அமைப்பு முறைக்கு சவாலாக இருந்தது. அது ஒன்றுபடுத்தப் பட்ட இனவாத சிறிலங்கா அரசை உடைக்க சபதம் எடுத்தது. அந்த தீவில் வளர்ச்சி அடையும் புரட்சிகர நிலைமைகளைக் கண்டும் அது இந்தியாவிலுள்ள தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கத்தையிட்டும் பீதியுற்ற ஏகாதிபத்தியமும், டில்லியிலும் [illegible] கொழும்பிலும் [illegible], தமிழ்ழ விடுதலைப் [illegible] [illegible]

சோசலிசத் தொழிலாளர் கழகம் ஜூலை 1987ல் வெளியிட்ட அறிக்கையில் அம்பலப்படுத்தியது,

''இலங்கையில்ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினை விடுதலை செய்வது இந்தியா முதலாளித்துவ வர்க்கம் என்று ஸ்டாலினிச கம்யூனிச கட்சிகளினாலும் பரப்பி விடப்படும் பொய்யை சோசலிசத் தொழிலாளர் கழகம் இகழ்ச்சியுடன் நிராகரிக்கிறது.

இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின், ராஜிவ்காந்தியின் காங்கிரஸ் அரசாங்கத்தின் தலையீடானது, இந்திய உபகண்டத்தில் திணிக்கப் பட்ட ஏகாதிபத்திய மற்றும் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் சுரண்டலை பாதுகாக்கும் முழு அரசு அமைப்பு முறையையும்தேசிய விடுதலை போராட்டம் தொழிலாள வர்க்கத்தின் தலைமையின்கீழ் சவால் செய்யாமல் இருப்பதற்கு உறுதி செய்வதற்கும். தேசிய விடுதலைப் போராட்டத்தின் [illegible]

தமிழ்தேசியஇனத்தின்முழுமையான சுதந்திரத்திற்காக ஆயுதப் போராட்டம் செய்யும் எந்த ஒரு தலைமையையும் அழித்து தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தின் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காகும். (தொழிலாளர்பாதை ஜூலை, 1987).

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைப்பகுதியான புரட்சிக்கம்யூனிஸ்ட், கழகம் இந்திய, இலங்கை முதலாளித்துவ வர்க்கங்களின் தயாரிப்புகள் பற்றி ஜூன், 1987ல் வெளியிட்ட அறிக்கையில் ஒரு ஆழமான ஆய்வு செய்தது; ''தேசிய விடுதலைப் போராட்டத்தினால் தமிழ் தேசிய இனத்தின் மிக ஒடுக்கப்படும் பிரிவினரும் விழிப்புணர்ச்சி அடைந்திருப்பதைப் பற்றியும்அது தேசிய ஜனநாயக, கோரிக்கைகளையும் கடந்து சோசலிசப்புரட்சி பற்றிய பிரச்சனையை கிளப்பும் என்பது பற்றியும்முதலாளித்துவ வர்க்கத்தின் அனைத்து பிரிவினரும் உணர்ந்து பீதிஅடைந்துள்ளனர். அதாவது அப்படியான வளர்ச்சி உபகண்டம் முழுமையும் சோசலிசப் புரட்சித்தீயை உண்டு பண்ணும்''. இது இப்போது ஐக்கிய தேசியகட்சி அரசாங்கத்திற்கு மட்டுமல்ல ராஜிவ் காந்தி அரசாங்கத்திற்கும் தெளிவாக உள்ளது.

''தொழிலாள வர்க்கத்தையும், விவசாயிகளையும் அணிதிரட்டுவதற்கான சமூக-பொருளாதார வேலைத்திட்டம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இல்லை என்பது உண்மையாய் இருப்பினும், விடுவிடுதலைப் போராட்டத்தின் நீடிப்பு தொழிலாள வர்க்கத்தை அதன் வரலாற்றுப் பணியை நிறைவேற்ற கொண்டு வரும் சாத்தியத்தை மிக அருகில் கொண்டுவரும். இதுவே தமிழ்ழ விடுதலைபபுலிகளை நசுக்கி விடுதலைப்போராட்டத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வரவேண்டிய தேவையை மிகக்கூர்மையாக இந்திய, இலங்கை ஆளும் வர்க்கங்களுககு உணர்த்தியுள்ளது. ''நான்காம அகிலம். இதழ் 14 நம்பர் 3, செப்டம்பர் 1987).

தமிழ் ஈழத்தில் இந்திய ராணுவத்தின் பங்கு சிறிலங்காவின் முன்னைய, தற்போதைய ஜனாதிபதிகளினால் பாராட்டப்பட்டது. முன்னைய ஜனாதிபதி கூறினார். ''சிறிலங்கா அரசாங்கத்தின் சார்பில் இந்திய படைகள் தமிழ்ழ விடுதலை புலிகளுக்கு எதிராக போராடி அவர்களது ராணுவத்தினரை தியாகம் செய்வதுடன், அவர்களது சொந்த பணத்தையும் செலவழிப்பதை பற்றி நான் [illegible] அடைகிறேன். [illegible] இந்தி[illegible]

பதில் என்ன தவறு இருக்கிறது. (நியூஸ் டுடே, ஜூலை 24, 1989).

அதே சமயம் ராஜீவ்காந்தியுடன் ஒரு போலியான ராஜதந்திரப்போரில் ஈடுபட்டு உள்ள தற்போதைய சிறிலங்கா ஜனாதிபதி ராஜீவ் காந்திக்கு ஜூலை 19, 1989ல் எழுதிய கடிதத்தில் கூறியதாவது: 'இந்த உடன்பாட்டின் குறிக்கோள் சிறிலங்காவின் ஐக்கியத்திற்கும் ஒருமைபாட்டுக்கும் அச்சுறுத்தலாக இருந்த சிறுபான்மையினர் பிரச்சனையை தீர்ப்பதும் (?) வன் முறைக்கு முடிவு கட்டுவதுமாகும். குரோதங்களை இல்லாமல் செய்து உறுதி செய்ய சிறிலங்காவின் வேண்டுகோளின்பேரில் ராணுவ உதவி வழங்கியதற்கு நான்மீண்டும் ஒருமுறை இந்திய படைகள் வழங்கிய ஆதரவுக்கு நன்றி செலுத்துகிறேன். ஒரு ஆயிரம் இந்திய உயிர்கள் இழக்கப்பட்டதைப்பற்றி நாம் கவலைப்படுகிறோம்.'' (இந்து ஜூலை, 24 1989).

### ஜெயவர்த்தனேயிலிருந்து பிரேமதாசா வரை

இந்த வருடம் ஜனவரியில் கடந்த 12 வருடங்களாக ஜனாதிபதியாக ஆட்சி செய்த ஜெயவர்த்தனேக்கு பதிலாக பிரேமதாசாவை கொண்டு வந்தது அரசியலமைப்பு அதிகாரத்தில் வழக்கமான மாற்றத்தைக்கொண்டு வருவது போன்ற சாதாரணமான ஒன்றல்ல. பதிலாக இது யு, என்.பி. ஆட்சியின் தீர்க்க முடியாத நெருக்கடியை வெளிப்படுத்தியது. இது இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் தோல்வியினாலும், வளர்ச்சியடையும் தொழிலாள வர்க்கப் போராட்டங்களினாலும், குட்டிமுதலாளித்துவ வர்க்கம் தொழிலாள வர்க்கத்திடமிருந்து அந்நியமயமாக்கப் படல் பாசிச கிளர்ச்சியினாலும் எடுத்துக் காட்டப்பட்டு உள்ளது.

பிரேமதாசா, அவருக்கு முன்பிருந்த ஜெயவர்த்தனேயைப்போல், ஒருபோனபாட்டிச அரசாங்கத்திற்குதலைமை தாங்குகின்றார். அது ஒரு புறம் தொழிலாள வர்க்கத்தின் துரோகத் தலைமைகளுக்கும் மறுபுறம் பாசிச ஜேவிபிக்கும் இடையில் ஊசலாடுகின்றது. அதன் குட்டி முதலாளித்துவ சமூக அடித்தளத்தை வேகமாக இடித்து வரும் நிலைமைகளின் கீழ் பிரேமதாசா பதவியில் அமர்த்தப் பட்டது, யு.என்.பி அரசாங்கம் பாசிஸ்டுகளில் தங்கியிருக்கும் மாற்றத்தை பிரதிபலித்தது. இந்திய ராணுவம் சம்பந்தப்பட்ட பிரச்சனையில் ஏற்பட்ட மாற்றம் தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக [illegible] வெறிகொண்ட [illegible]

★4ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# இந்தியா-சிறிலங்கா-தமிழ் ஈழத் தொழிலாளர்களின் சர்வதேச வர்க்க ஐக்கியத்தை பேணு!

முதலாளித்துவபகுதியை அரசாங்கத்தின் பின்னால் அணிதிரட்டுவதற்கான நனவான முயற்சியாகும்.

இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர்கள் அவர்களது பிராந்திய 'போலீஸ்காரன்' பங்கை கருத்தில் கொண்டு, தமிழ் ஈழ மக்களின் அக்கறை என்ற சாக்கில் தொடர்ந்து இந்திய துருப்புகளை அங்கு வைத்திருப்பதன் மூலமாக, தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக வெறிபிடித்த சிங்கள இனவாத குட்டி முதலாளித்துவ பகுதியை தூண்டிவிட உதவி செய்கின்றனர். அதற்கு மேலும் துணை செய்வதற்கு, சிறிலங்கா துருப்புகளுடன் ஒரு மோதல் ஏற்படுமாயின், அப்போது அவர்களின் உள்ளூர் கைப்பொம்மைகளின் (ஈபிஆர்எல்எப், ஈரோஸ் ஈஎன்டிஎல்எப், டெலோ, புளொட்(மூலமாகஒரு முறை தவறிய தமிழ் ஈழத்தை உருவாக்கும் திட்டத்தையும் இந்திய முதலாளித்துவ வர்க்கம் வைத்திருக்கிறது.

அவ்வாருக ஒரு அரசு உருவாக்கப்படுமாயின், அது அத்தீவில் நிரந்தரமாக வகுப்புவாதபதட்டநிலையை தூண்டிவிட செயற்படும், அது இந்திய உபகண்டத்தின் சக்திவாய்ந்த பலகோடி பாட்டாளி வர்க்கத்தை பிளவுபடுத்தி அதன் மூலமாக உபகண்டத்தில் முதலாளித்துவ சொத்து உறவுகளுக்கு ஏற்படக்கூடும் அச்சுறுத்தலை தவிர்ப்பதற்கு ஏகாதிபத்தியமும, இந்திய முதலாளித்துவ வர்க்கமும, ஸ்டாலினிசவாதிகளும் சேர்ந்துசெய்தசதியின் விளைவாக பாகிஸ்தான் உருவாக்கப்பட்டதைப் போன்றதாக இருக்கும்.

இந்திய எதிர்ப்பு பாவனையின் மூலமாக ஒரு உடனடியான அரசியல் ஆதாயங்களை பிரேமதாசாவின்போனபாட்டிச ஆட்சி தேட முனைந்ததைப்போலவே,ராஜிவ்காந்தி அரசாங்கமும் அதன்முழுமையாக அம்பலப்படுத்தப்பட்ட ஊழல் மற்றும் அதிகரித்துவரும் வேலைநிறுத்த அலைகள்-பொதுத்துறை,உரம்.சர்க்கரை சணல், சிமெண்ட், ரயில்வே போன்ற பலதொழிற்துறை தொழிலாளர்களின் வேலை நிறுத்த அலைகள் வளர்ச்சி அடைந்துவருகையில்அதற்கு ஒரு திசைதிருப்பலாக ராஜிவ் காந்தி ஆட்சி அதன் பிரச்சார சாதனங்களை "தமிழ் விரோத சிறிலங்கா அரசாங்கத்திற்கு" எதிராக முடுக்கிவிட்டு, இந்திய தொழிலாள வர்க்கத்தின் தாக்குதலை எதிர்கொள்ள அதன் அரச இயந்திரத்தை பலப்படுத்துகிறது.

## முதலாளித்துவ எதிர்க் கட்சிகளின் நிலைப்பாடு

தத்தமது முதலாளித்துவ வர்க்கத்திற்கு விசுவாசமான இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ள பாராளுமன்ற எதிர்க்கட்சிகள், ஆளும் அரசாங்கங்களின் யுத்த இயக்கங்களை 'எதிர்க்கின்றனர்' இது முதலாளித்துவவர்க்கங்களின் சில பிரிவினர் ஒரு நீண்ட தொடர்ச்சியான போர் ஏற்படுத்தக்கூடிய சமூக பிரதிவிளைவுகள் பற்றி அஞ்சுவதையே எடுத்துக்காட்டுகிறது. இது தேசிய முன்னணியைச் சேர்ந்த ஜனதா தளத்தின் ஒரு தலைவரான ஜார்ஜ்பெர்னாண்டஸின் வார்த்தைகளில் பிரதிபலித்தது. "சிறிலங்காவிற்கு ராணுவத்தை அனுப்பியதன் மூலம் இந்தியா ஒரு வியட்நாம் மாதிரியான நிலைமையில் [illegible]." (இந்தியன்எக்ஸ்பிரஸ் [illegible])

இந்திய ராணுவத்தின் தலைவிதிபற்றி இந்திய பாதுகாப்பு படையின் ஒரு உயர் அதிகாரி பின்வருமாறு விபரித்தார்: "வாபஸ் வாங்குவதற்கு காலம் தீர்மானிப்பதில் மிக ஆபத்துக்கள் இருக்க முடியும். அது மிக சீக்கிரமாக செயல்படுமாயின் அது நிலைமையில் கெடுதலான விளைவுகளை உண்டு பண்ணலாம். மறுபடியும் மிகையான தாமதம இந்திய ஜவான்களின் (ராணுவத்தினரின்) மனோநிலையில் ஒரு வன்மையான தாக்கத்தை ஏற்படுத்தலாம் இறுதியில்பார்த்தால் அவர்கள் அவர்களுடைய நாட்டிற்காக களத்தில் போராடவில்லை. நிலைமை ஆப்கானிஸ்தானில் ரஷ்யர்களும வியட்நாமில் அமெரிக்கர்களும் எதிர்கொண்டது போன்றுமாற்றமடையலாம்" (இந்தியன்எக்ஸ்பிரஸ்,ஜூலை 19, 1989).

இந்த அக்கறைதேசிய முன்னணியின் தலைவரான வி, பி. சிங்கினுலும்பிரதிபலிக்கப்பட்டது. அவர் பிரதம மந்திரி ராஜிவ்காந்தியையும்விட அதிகமான தேசிய வெறியராக காட்டிக்கொண்டார் "திரு' பிரேமதாசாவின் கடைசி அச்சுறுத்தல் அதை தெளிவாக்கி உள்ளது- அதாவது ராஜீவ் ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தின்படி இந்திய அமைதி காக்கும் படை சிறிலங்கா அரசாங்கத்தின் அதிகாரத்தின்கீழ் போடப்பட்டுள்ளது. இப்படி இருந்திருக்குமாயின் ஒப்பந்தம் என அழைக்கப்படுவது 'உண்மையிலேயே வரலாற்று ரீதியானதாகத்தான இருக்கும்'

காங்கிரஸ் அரசாங்கத்தின் முன்னைய பாதுகாப்பு அமைச்சரான வி. பி. சிங் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், இந்தியஅரசாங்கத்திற்கும்இடையிலான நெருக்கமான உறவுகளை வெளிப்படுத்தினர். "ஒருவெளிநாட்டுக்கு இந்திய ராணுவத்தை 'இரவல் கொடுக்க' என்னநிர்ப்பந்தங்கள் அவரை அவ்வாறு செய்தது என்பதை பிரதமர் தேசத்திற்கு விளக்ககடமைப்பட்டிருக்கிறார். அவர் (திருவாளர் காந்தி) இலங்கைப் பிரச்சனை சம்பந்தமாக முன்னைய அமெரிக்க பாதுகாப்பு செயலரும்முன்னைய அமெரிக்க துணை ஜனாதிபதியும் அவரை சந்தித்துபேசியபோதுஇதைச் செய்யும்படிஊக்குவித்தார்கள் என்பதையும்கூட தேசத்திற்கு சொல்லவேண்டும்" மேலும் அவர் "இவற்றிற்கும் இலங்கையில் எமது ராணுவ நடவடிக்கை சம்பந்தமாக அமெரிக்காவில் இருக்கும் 'பெரும் ஆர்வத்துக்கும்'ஒருதொடர்பு உண்டா? எனக்கேட்டார்.

"இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் ஏற்கனவே ஒரு கடுமையான "இரத்த விலை" கொடுத்துவிட்டது. பயனுள்ளதேவையென்று தெரியக்கூடியதாக எதுவும் இல்லாமல் அங்கே இந்திய அமைதி காக்கும் படையை அனுப்பியதற்கு நாடு ஒரு உயர்ந்த பொருளாதார விலை கொடுக்க வேண்டி உள்ளது" என்றும் வி.பி.சிங் கூறினர்.

தேசிய முன்னணியின் சார்பில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் வி.பி சிங் பின்வருமாறு கூறினர். "இந்திய அமைதி காக்கும் படை பெருந்தன்மையுடனும், மரியாதையுடனும் திரும்பக் கொண்டுவரப்படவேண்டும். அரசாங்கத்தின் இலங்கைக் கொள்கை தமது உயிர்களை [illegible]

இது மீண்டும் நிரூபிப்பது பக்குவ சிந்தனையும்,நிபுணத்துவமும் இல்லாத, பிரதம மந்திரியைச் சூழவுள்ள ஒரே கருத்துக் கொண்ட ஒரு சிறு குழுவினரால் உண்டாக்கப்படும், கொள்கைகளின் அபாயமாகும்" (இந்தியன் எக்ஸ்பிரஸ் ஜூலை, 1, 1989).

ஸ்டாலினிச சி.பி.ஐ,(எம்) சி.பி.ஐ உள்ளடங்களாக 13 எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்த கருத்து: "இலங்கையில் இந்நாடு (இந்தியா) ஒரு மிக அபாயகரமான நிலைமையை எதிர்கொண்டுள்ளது (இந்தியன் எக்ஸ்பிரஸ் ஜூலை 18, 1989).

உலகத்தின் நான்காவது பெரிய ராணுவத்தின்'கௌரவத்தையும்', இந்தியாவில் ஊசலாடிக் கொண்டிருக்கும் முதலாளித்துவ ஆட்சியையும் எப்படி திறம்பட பேணுவது என்பது பற்றிதந்திரோபாய ரீதியான வேறுபாடுகள் என்னதான் இருப்பினும் இந்திய உப கண்டத்தில் இரண்டாம் உலகப் போரின் பின்பு ஏற்படுத்தப் பட்ட உடன்பாடுகளை உயர்த்திப் பிடிப்பதில்அவர்கள் ஐக்கியப் பட்டு இருக்கின்றனர்.

தமிழ்ஈழமக்களின் சுய நிர்ணய உரிமையை காலில் போட்டு மிதிக்கும் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் ஊக்குவிக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தை பலவந்தமாக திணிக்கும் ராஜிவ்காந்தியை பிரபாகரன் கண்டனம் செய்ய மறுத்தார். மேலும், அவர் தமிழ் ஈழமக்களின்ஜனநாயகப் போராட்டத்திற்கு உதவி செய்யும்படி இந்திய தொழிலாளர்களுக்கு ஒருபோதும் அழைப்பு விடவில்லை ஆனல் பதிலாக இந்தியராணுவத்தின் "அமைதி காக்கும் பணி" பற்றிய பிரமையையே ஏற்படுத்தினர்.

மாகாண சபையில் ஒரு சிறப்பு ஸ்தானம் கோரும் பேரத்தின் போதே இந்திய ராணுவத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகள் மோதலுக்கு வந்தனர். உலக முதலாளித்துவ நெருக்கடியின் தாக்கத்தின் கீழ் தமிழீழ மற்றும் சிறிலங்கா தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியப்பட்ட வர்க்கப்போராட்ட வளர்ச்சிகளை எதிர்கொண்ட வடக்கையும் தெற்கையும் சேர்ந்த வெறிகொண்ட குட்டி முதலாளித்துவ வர்க்கம்ஏதோ ஒரு வழியில் சீரழியும் சிறிலங்கா முதலாளித்துவ வர்க்கத்தின் உதவிக்கு விரைகின்றது.

தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையான, சுய நிர்ணய உரிமையை 40 வருடங்களாக மறுத்தசிங்கள இனவாத முதலாளித்துவ வர்க்கத்தின் அரவணைப்பில் இப்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்கள் இருக்கின்றனர். இவ்வாருக பிரேமதாசா ஆட்சியும், விடுதலைப்புலிகளின் தலைமையும் சேர்ந்து ஜூன் 28ல் கூட்டாக ஒரு அறிக்கை விட்டனர். "அனைத்து சமூகங்களும் குழுக்களும ஜனதிபதியைச்சூழ அணிதிரண்டு நாட்டில்இருந்து இந்தியத் துருப்புகளை) வாபஸ் பெறச்செய்ய வேண்டும். அதோடு எல்லா சமூகங்களும் குழுக்களும் அவர்களுக்குள் உள்ள எந்த ஒரு பிரச்சனையையும் கலந்து பேசி சமரசத்தின் மூலமும் உடன்பாட்டின் மூலமும் எந்த ஒரு வெளித்தலையீடும் இன்றி தீர்த்துக்கொள்ளவேண்டும்.

இந்திய ராணுவத்துடன் மோதலுக்கு செல்வதற்குமுன், விடுதலைப்புலிகள் இந்திய [illegible] முன் வந்தனர். இப்போது சிறிலங்கா ராணுவத்திடம் ஆயுதங்களை ஒப்படைக்கவிரும்புகின்றனர் விடுதலைப்புலிகளின் பிரதான ஆலோசகரான அன்ரன்பாலசிங்கம் கூறியதாவது "ஒரு குறிப்பிட்ட கால தவணையுள் எம்மை நிராயுதபாணியாக்குவது என்றபழைய தர்க்கம் தோல்வி அடைந்துவிட்டது இந்தியா இரண்டு வருடங்களாக முயற்சி செய்தது. இந்தப் பிரச்சனையை சமாதானமாக இந்தியாவுடன் பேசித்தீர்த்திருக்கலாம்,ஆனல் அவர்களுடைய நிலைப்பாடு தர்க்கம் அற்றதும் நடைமுறை சாத்தியமற்றதும் ஆகும். இரண்டு வருடங்களாகஇந்திய ஆக்கிரமிப்புப்படையினர் தமிழ் ஈழ தேசிய இனத்திற்கு எதிராக அட்டூழியங்கள் இழைத்தும், நூற்றுக்கணக்கான விடுதலைப்போராளிகளை கொன்றுகுவித்த பின்னரும், கூட பாலசிங்கம் "விடுதலைப்புலிகள் இந்தியாவிற்கு விரோதமான ஒரு சக்தி அல்ல விடுதலைப் சம்பந்தமாக டில்லியில் முழுமையான தப்பு அபிப்பிராயம் நிலவுகிறது. அங்கே ஒரு வலுவான பாகுபாடு உள்ளது" என்று கூறுகிருர். மேலும், அவர் "மக்கள் தமது சொந்த முடிவுகளை எடுக்கப்பொருத்தமான ஒரு ஜனநாயக சூழ்நிலையை இந்தியாவும், இலங்கையும் உண்டுபண்ணவேண்டும்" என்று அழைத்தார். ('இந்து' 11 ஜூலை 1989).

இரண்டு நாடுகளிலுமுள்ள தொழிலாளவர்க்கத்தின் சிறிய தேசிய இனங்களின் மற்றும் மத,மொழி சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளை காலின் கீழ் மிதிக்கும் இந்திய இலங்கையைச்சேர்ந்த பெரிய முதலாளித்துவ வர்க்கத்திற்கு இப்படியாக அழைப்பு விடும் குட்டி முதலாளித்துவ துரோகமும் அரசியல் மோசடியும், விடுதலைப் புலிகளின் குட்டி முதலாளித்துவ வர்க்க நிலைப்பாட்டையும் அதன் 'தேசிய பிரத்யேக வாதம்' எனப்படும் பிற்போக்கு அரசியல் வேலைத்திட்டத்தையும் அடிப்படையாகக்கொண்டதாகும்.

மிகத்தீவிரமான தமிழ்தேசிய இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் தேசிய இனத்தின்சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை கை விட்டது, ஏகாதிபத்திய சகாப்தத்தில் ஜனநாயக கடமைகளை நிறைவேற்ற முதலாளித்துவ தேசியவாதிகள் இயல்பாகவே இயலாதவர்கள் என்பதை நிரூபிக்கிறது. இது நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைப்பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தைச் சேர்ந்த டிராட்ஸ்கிஸ்டுகளின் அரசியல் போராட்டத்தை ருசுபடுத்துகிறது. அவர்கள் தமிழ் முதலாளித்துவ தேசியவாதிகளிடம் இருந்து தமிழ் தொழிலாளர்களின், விவசாயிகளின் அரசியல் சுதந்திரத்திற்காகவும், சிறிலங்கா தொழிலாள வர்க்கத்துடன் அவர்களின் வர்க்க ஐக்கியத்தை நிலைநாட்டவும் போராடுகின்றனர்: "லங்கா சமசமாஜக்கட்சியின் காட்டிக்கொடுப்புகள் இருந்த பொழுதிலும் முதலாளித்துவ தேசியவாதம் என்கின்ற முட்டுசந்தில் இருந்து வெளியேறி முன்னேறி செல்வதற்கான பாதை தமிழ் மற்றும் சிறிலங்காத் தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியப்பட்ட போராட்டமாகும்.இந்திய ஆக்கிரமிப்பானது தமிழ் தேசியஇனத்தின்மீதான மற்றும் சிங்கள மக்கள் மீதான ஒடுக்குமுறையின் வர்க்க அடிப்படையை அம்பலப்படுத்தியதுடன் சிங்கள மற்றும் தமிழ் பேசும் தொழிலாள வர்க்கத்தின் [illegible] இணைக்க வேண்டிய புதியதேவையை உண்டுபண்ணி உள்ளது இது ஸ்தூலமாக அர்த்தப்படுத்துவது தமிழ்ஈழம் மற்றும் சிறிலங்காவின் ஐக்கிய சோசலிச அரசுகள் என்றகொடியை உயர்த்துவதாகும்" (நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் அறிக்கை 19, நவம்பர் 1987)

அடிப்படை ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதில் தமிழ் விடுதலை போராளிகளும் பாலஸ்தீன விடுதலை இயக்கமும், நிகரகுவாவின் சான்டினிஸ்டாக்களும், அஜானியாவின் (தென் ஆப்பிரிக்காவின்) தேசிய காங்கிரசும் தோல்வி கண்டது மீண்டும் ஒருமுறை, டிராட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சி தத்துவத்தை ஊர்ஜிதம் செய்கிறது:

"ஒரு பின்னடைந்த முதலாளித்துவ வளர்ச்சி உள்ள நாடுகள் சம்பந்தமாக, சிறப்பாக காலனித்துவ மற்றும் அரைக்காலனித்துவ நாடுகளில் நிரந்தரப்புரட்சித் தத்துவம் குறிப்பிடுவது ஜனநாயகத்தையும், தேசிய முன்னேற்றத்தையும் வெற்றி காணும் அவற்றின் பணிகளின் முழுமையான உண்மையான தீர்வு, ஒடுக்கப்பட்ட தேசத்தின் தலைவனும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலமாகவே அடையக்கூடியது" (லியான்டிராட்ஸ்கி நிரந்தரப்புரட்சி, நியூபார்க் பப்ளிகேஷன்ஸ், பக்கம் 152-154).

பிரமாண்டமான நாடுகடந்த கூட்டுககம்பனிகளின் வளர்ச்சியும். பூகோள மயப்படுத்தப்பட்ட உற்பத்தி முறையும், தொடர்பு சாதனங்கள் மற்றும் போக்குவரத்தில் புரட்சிகர வளர்ச்சிகளும் முன்னெருபோதும் இல்லாத அளவில் உலகப்பொருளாதாரத்தை ஒருங்கிணைத்துள்ளது. இந்த உலகப்பொருளாதாரத்திற்கும், முதலாளித்துவ தேசிய அரசுகளுக்கும் இடையிலான மோதல் முழுமையாகவே உலக முதலாளித்துவ அமைப்பை ஆழமான நீடித்த நெருக்கடியுள் தள்ளியுள்ளது அது வரலாற்று தன்மையுடையதும், வரிசைக்கிரமமானதும் ஆகும்.

இப்படியான நிலைமைகளிலும் தொழிலாள வர்க்கப் பூகோள ரீதியாக தொடுக்கும் எதிர்த்தாக்குதலின் மத்தியிலு முதலாளித்துவத்தின் அல்லது குட்டி முதலாளித்துவத்தின் எந்த ஒரு பிரிவுகளாலும் அது பாலஸ்தீனம், நிக்கரகுவா அஜானியா அல்லது தமிழ் ஈழம் ஆயினும் சரி சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை உயர்த்திப்பிடிக்கவோ இறுதி வரை போராடவோ முடியாது.

புரட்சிகர பாட்டாளிவர்க்கத்தின் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு மட்டுமே சுயநிர்ணய உரிமையை உயர்த்திப்பிடிப்பதோடு மட்டுமல்லாது, அதற்காக போராடியும் வருகிறது. தீர்க்கப்படாத ஜனநாயகப்புரட்சியின் கடமையான சுயநிர்ணய உரிமை விவசாயிகள் கூட்டுடன் பாட்டாளி வர்க்கசர்வாதிகாரத்தின் மூலமே அடையமுடியும்.

நிரந்தரப்புரட்சி தத்துவம் பாட்டாளி வர்க்கசர்வதேசியத்தின் அடிப்படையில் தொடர்ச்சியாக உறுதியாகவும்போராடி வருவது இலங்கையில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கழகமும், இந்தியாவில் சோசலிசத் தொழிலாளர் கழகமும் ஆகும், தேசிய முதலாளித்துவங்களுக்கு பின்னால் அணிதிரளும் ஸ்டாலினிசவாதிகள், மவோவாதிகள் மற்றும் பப்லோவாதிகளின் வர்க்க சமரச கொள்கைக்கு எதிராக தேசியமுதலாளித் [illegible]

[illegible] பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியனின் தேர்தல்களின் பின்னுல்

## பகுதி-2 : டேவிட் நாத்

''பெரஸ்து ரொய்கா'' வை கொண்டு வந்ததற்கான காரணங்கள் குறித்து, மிக்கையில் கோர்பச்சேவின் முக்கிய, ஆலோசனையாளர்களில ஒருவரான, பிரபலபொருளாதர நிபுணரும், சமூக வியலாளருமான டாட்யானா சாஸ்லஸ்வ்காயா கடந்த டிசம்பரில் 'இஸ்வெஸ்தியா பத்திரிகைக்கு அளித்த முக்கிமானதொரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார் அதில் அவர் கூறுவதாவது :

மறுசீரமைப்பு, அதன் குறிக்கோளின் தீவிரவாதத்தன்மை காரணமாகவும், அதை சாதிக்க எடுத்துக் கொண்ட மார்க்கம் காரணமாகவும் ஒரு புரட்சி என அழைக்கப்படலாம். சூழ்நிலை துவங்கிய காலம் நிச்சயமாக புரட்சிக்கு முந்தைய ஒருகாலகட்டமாக இருந்ததுஅச்சமயத்தில் கீழ்த்தட்டு மக்கள் நல்ல திறமையான வேலையை செய்யவிருப்பமற்றிருந்தனர்; அல்லது செய்யமறுத்தனர் மேல்தட்டு மக்களோ, இனியும் அதை செய்யும் திறமையோடு இருக்கவில்லை. சமுதாயம் ஒரு நெருக்கடியான காலகட்டத்தை அடைந்தது, நாடு, உலகளாவிய அறிவியற் தொழிற்நுட்ப, பொருளாதார, சமுதாய மட்டத்தில் இருந்து மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது உலக முன்னேற்றத்தில் ஒதுக்கித் தள்ளப்பட்டது. அதனால் இது இயல்பாகவே மக்களிடம் திருப்தியற்ற தன்மை அதிகரிக்க வழி வகுத்தது. அது முன்னெப்போதையும் விட இப்போது மிகவும் கூர்மையான முறையில் வெளிப்படுத்தப்பட்டது.

''இதன் விளைவாக, நமக்கு முன்னால் இருந்த இரு முக்கிய தீர்வுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியருந்தது. ஒன்று. வெளிப்படையான அடக்குமுறை முறைகளுக்கு மீண்டும் செல்வது ; ஆனால் அது அவ்வளவாக செல்லுபடியாகவில்லை என்பது மிகவும் தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது.இரண்டு அனைத்து சமூக உறவுகளிலும அடிப்படையானசீர்திருத்தங்களை செய்வது அதை வேறு விதமாக கூறினுல், மறுசீரமைப்பு என்ற பெயரில் நாங்கள் இப்பொழுது செய்ய வருவது......மறுசீரமைப்பிற்கான முன்முயறசி 'மேல்டத்தில் இருந்து' எடுக்கப்பட்டதால், புரட்சிகர மக்கள் ஆயுதங்களின் மூலம் அதிகாரத்தை கைப்பற்றுவது என்ற பேச்சிற்கே இடமில்லை '' (Current Digest of the Soviet Press, 1989 ஜனவரி 18).

கோர்பச்சேவால், மக்கள் பிரதிநிதிகள் காங்கிரஸில செயலாற்ற நியமிக்கப்பட்ட டாட்யானா சாஸ்லாவ்ஸ்கயா அதிகாரத்துவத்தின்மிக உணர்வுமிக்க பிரிவுகளை அலைக்கழிக்கும் பயத்தை வெளிப் படுத்தியுள்ளார். இடது சாரி எதிர்ப்பைஒழித்துகட்டி,சோவியத்ஜனநாயகத்தைபுதைகுழிக்குஅனுப்பி, அக்டோபர் புரட்சிக்கு வித்திட்ட போல்ஷேவிக் தலைமுறையினரையே அடியோடு நிர்மூலமாக்கி, அரை நூற்றுண்டுக்கு மேலாக பின்னர், சோவியத் சமுதாயத்தின்மீது தான் கொண்டுள்ள உறுதியற்ற பிடிப்பை முன் எப்பொழுதைச்காட்டிலும் இப்பொழுது ஸ்டாலினிச அதிகாரத்துவம் நன்றாகப்புரிந்து கொண்டுள்ளது. பல பத்து ஆண்டு கால அடக்குமுறைகளுக்குப்பின்னரும்கூட ஆட்சிபீடத்தின் நெருக்கடியை கோடிட்டுக்காட்டும்வரலாற்றுப் பிரச்சனையை இன்றுவரை அதிகாரத்துவத்தால் தீர்க்க முடியவில்லை. அது ஒரு ஆளும் வர்க்கமல்ல, அப்படியென்றால், அதன் சமூக இருப்பு சொத்துக்களின் திட்டவட்டமான வடிவங்களின் அவசியமான வெளிப்பாடாக இல்லை. அல்லது உற்பத்திச்சாதனங்கள் சம்பந்தமாக ஒரு சுதந்திரமான உறவிலும் வேரூன்றி இல்லை. அதிகாரத்துவம்,உண்மையில் ஒரு 'சாதி'யாக உருவெடுத்துள்ளது 1917 அக்டோபரில் பாட்டாளி வர்க்கத்தால் நிறுவப்பட்ட தேசியமயமாக்கப்பட்ட அரசாங்கசொத்தை உறிஞ்சி வாழும் அட்டையாகவே விளங்கியது. அதனுடைய சலுகைகள் அனைத்தும் இறுதியாக அரசியல் அதிகாரத்தை ஒட்டுமொத்தமாக குவித்துவைப்பதிலேயே அடங்கி உள்ளது.

கிழக்கு ஐரோப்பாவில் மீண்டும் மீண்டும் நிகழ்ந்த உழைக்கும் வர்க்கத்தின் எழுச்சிகள் 1953ல் கிழக்கு ஜெர்மனி தொழிலாளர்களின் எழுச்சியில் துவங்கி, 1956, ஹங்கேரிப்புரட்சி, 1968 'பிரேக் வசந்தம்' பின்னர் இறுதியாக போலந்துஉழைக்கும் வர்க்கத்தினரின் 1970 மற்றும் 1980களில் நடத்திய வேலை நிறுத்தப்போராட்டங்கள் அதிகாரத் துவத்தின் குறைபாட்டை நன்றாக தோலுரித்துகாட்டிவிட்டன. 1980-81ல் போலந்தில் நிகழ்ந்த சம்பவங்களில் இருந்து, பரபரப்படைந்த சோவியத் அதிகாரத்துவம் தானுகவே சில முடிவுகளை எடுத்துக்கொண்டது. 'சாலிடாரிடி' என்ற போலந்துஇயக்கத்தின் திடீர் எழுச்சி, ஓரிரவிலேயேலட்சக்கணக்கானவர்கள் அதில் சேர்ந்ததுபோலநடைபெற்ற நிகழ்ச்சியானது, போலந்து கம்யூனிஸ்ட் கட்சிக்கு வலுவான சமுதாய அடித்தளம் இல்லை என்பதை தெள்ளத் தெளிவாகக் காட்டி விட்டது. கடைசியில் அதிகாரத்துவம தங்களை ரட்சிப்பவனாக ஜெனரல்ஜாருஜெ ஜல்ஸ்கியை தஞ்சமடைந்தது, உழைக்கும வர்க்கத்தைஅடக்க-ராணுவத் தலையீடு அறுவைச்சிகிச்சை தேவைப்பட்டது;ஸ்டாலினிச ஆட்சியைக் காபபாற்ற அது செய்த அம்முயற்சியும தோற்றுப்போயருக்கும் -சாலிடாரிடித் தலைமையின் அரசியல் திவாலானதன்மை மட்டும் இல்லாதிருச்கும் பட்சத்தில்; சாலிடாரிடி, அதிகாரத்துவத்தை புரட்சிகரமாக தூக்கி எறியப்படுவதைஎதிர்த்ததின் மூலம் போலந்து உழைக்கும் வர்க்கத்தினரின்போராட்டம் ஒரு வெற்றிகரமான முடிவை அடைவதைத் தடுத்து விட்டது.

நாளுக்கு நாள் மோசமாகி வரும் பொருளாதாரச் சூழ்நிலையால், சோவியத் அதிகாரத்துவத்தின் உச்சமட்டத் தலைமை பெரிதும் கலவரம் அடைந்தது. சீரழிந்து வரும் பொருளாதாரத்தின் தாக்கம் மக்களின் வாழ்க்கை முறையில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியது. அது இதற்கு முன் எப்பொழுதும் கண்டிராத அளவு பெரிய அளவில் ஒரு சமுதாய எழுச்சியாக வெடிக்கப்போவதை நோக்கி நகர்கிறது மேலும்சோவியத் பொருளாதாரத்தில் ஆழமாக ஊடுருவியுள்ள அமைப்பியல் பிரச்சனைகள் (structural problems) ஸ்டாலினிசத்தின் அதாவது தனி ஒரு நாட்டில் மட்டும் சோசலிசத்தை உருவாக்கும் கொள்கையின் வேலைத்திட்ட அடிப்படைகளை ஆட்டம் காணச்செய்து விட்டது. தொழிற்துறையின் ஒவ்வொரு பிரிவிலும ஏற்பட்ட முடக்கம், வேளாண்மையின் பின்னடைந்த நிலைமை, மிகக் குறைந்த அளவிலான உழைப்பு உற்பத்தித்திறன், வளர்ச்சி விகிதத்தின் தேக்கம் நுகர்பொருட்கள் அரிதாதல், உணவுப்பொருட்களில் பற்றாக்குறை போன்றவை அனைத்துமே உலகச்சந்தையில் இருந்தும், சர்வதேச உழைப்பு பகுப்பில் இருந்தும் சோவியத்யூனியன் தனிமைப படுத்தப்பட்டதுடன்தொடர்புடையது.



சோவியத் யூனியனை முதலாளித்துவ பாதையில் இட்டுச்செல்லும் கோர்பச்சேவ்

1985ல் கோர்பச்சேவை பொதுச்செயலாளராகதேர்வு செய்ததில் இருந்து அதிகாரத்துவம் உழைக்கும் வர்க்கத்திற்கு எதிரான தனது நிலையை வலுவாக்கத் துவங்கியது. கோர்பச்சேவின் திட்டங்கள ஒன்றுக்கொன்றுதொடர்புள்ள இரு காரணங்களைக் அடிப்படையாகக் கொண்டு உள்ளது. தனிச் சொத்து உடைமையை மீண்டும் புகுத்துவதின் மூலம், நகர்ப்புறங்களிலும். கிராமப்புறங்களிலும் ஒருபுதியமுதலாளித்துவ (பூர்ஷ்வா) வர்க்கம் உருவாகுவதைஊக்குவித்த, சோவியத் யூனியனுக்கு உள்ளேயே அங்குள்ள அதிகாரத்துவம் தனது சமுதாய அடித்தளத்தை விரிவாக்க முனைகிறது. சர்வதேச ரீதியாக கோர்பச்சேவ், உலக முதலாளித்துவ சந்தையோடு, சோவியத் பொருளாதாரத்தை இணைக்கமுனைந்து உள்ளார். சோவியத் அதிகாரத்துவம் சோவியத் பொருளாதாரத்திற்குள் நிலை பெற்றிருக்கும் சோசலிச போக்குகளை அடக்கி வைக்க முனையும் அதே வேளையில், பாட்டாளி வர்க்கத்தின் நிலையை அரசியல் ரீதியாக பலவீனப்படுத்த விழைகிறது, ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் கோர்பச்சேவின் திட்டங்கள், அக்டோபர் புரட்சி ஈன்றெடுத்த சொத்து உறவுகளுக்கு முழு அளவில் பேரடி கொடுக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

சோவியத் அதிகாரத்துவம் கடந்த பல பத்தாண்டுகளுக்கு மேலாக, ஸ்டாலினிசத் தனி மனிதக் கொலைக் குற்றங்கள் மற்றும் 'தனி மனித துதி' பாடுதல் காலப்போக்கின் காரணமாக செல்லாது போயிருந்தாலும்கூட அக்டோபர் புரட்சி பெற்றுக் கொடுத்த வெற்றிகளை, போல்ஷேவிசத்தைத் தொடர்ந்து தாங்கள்தான் காப்பாற்றி வருவதாக முழங்கி வருவதன் மூலம் அரசியல் அதிகாரத்தைமேலும்குவித்து வருவதை நியாயப்படுத்த துணிந்துள்ளது இத்தகைய விவாதங்களால் இனியும் பயன் ஏதும் இல்லை, கோர்பசேவின் திட்டங்கள் ஏற்கனவே முதலாளித்துவ இலக்குகளை தன்னகத்தே இழுத்துக் கொண்டுவிட்ட படியால், அவர் அதை நியாயப்படுத்த புதிய சித்தாந்த நிலைப்பாடுகளை உருவாக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார் சித்தாந்தங்களுக்கு பொறுப்பாளரான பொலிட்பீரோ உறுப்பினர் 'வாடிம்மெட்வடெவ் 'கம்யூனிஸ்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இன்றி கூறுகிறார்

''நடைமுறைச் செயல்களுக்கு தொடர்பு மேலும் மேலும் வலுவான சித்தாந்த ஆதரவு தேவைப்படும் நிலை மையில் இன்றுபோல் நிரோஷா அடைந்துள்ளது இதில் எல்லாவற்றிலும் மேலாக உற்பத்தி உறவுகளில் ஏற்பட்டதுவங்கியுள்ள முற்போக்கான மாற்றங்கள், மக்களுக்கு வேலையில் ஆர்வத்தை அதிகரிக்கச்செய்து அதற்கு ஈடாக தங்கள் நாட்டின் சமுதாய, பொருளாதாரமற்றும் அரசியலில் தாங்களே எசமானர்களாகி விடுவது 'ஆகியவற்றிற்கு இது மிகவும் பொருந்தும்.

சோசலிசம் இன்று ஒருவரலாற்று ரீதியானசவாலைஎதிர் கொண்டுள்ளது. அதற்கு இன்று பெரும் சமூக முற்போக்கான திறமையான ஒட்டுமொத்த சுத்திகரிப்பும் தேவைப்படுகிறது. இந்நூற்றாண்டின் முடிவைநெருங்கும் வேளையில், தோன்றியுள்ள நடைமுறைகளுக்கு ஏற்ற வகையில் மட்டுமல்லாது நீண்ட எதிர்கால நோக்குடனும் சோசலிசம் சம்பந்தமாக ஒரு புதியகருத்துரு உருவாக்கப்படவேண்டும். இது தான் முக்கிய கொள்கை ரீதியான பிரச்சனையாகும்'' (Soviet press, 15-2-89லிருந்து மறுபிரசுரம்).

### ஒரு புதிய சோசலிசக் கருத்தாக்கம்

முதலாளித்துவ சொத்து முறைகளை மீண்டும் ஸ்தாபித்துக்கொள்ளும் விதத்தில் ''புதிய சோசலிசக் கருத்தாக்கத்தை''உருவாக்க சோவியத் அதிகாரத்துவம் முயன்று வருகின்றது. அப்பேட்டியில் மெட்வெதேவ் மேலும் கூறுகிறார்.

''இதில் முக்கியமான வேலை என்னவெனில், பொதுச் சொத்திலிருந்து மக்கள் அன்னியப் படுத்தப்பட்ட நிலையை முடிவுக்கு கொண்டு வருவதும் சொத்து உறவுகளை புனர்நிர்மாணம் செய்வதும்தான். பல வருடங்களாக பொதுச்சொத்து வளர்ச்சி கண்ட வடிவங்கள் அதன் தனிப்பட்ட முறையல் பல வடிவங்களில் உருவாக்கப் பட்டது. அது யாருக்கும் சொந்தமானதல்ல. உற்பத்திச் சாதனங்களின் பொதுச் சொத்தின் வடிவங்கள் பல பத்தாண்டுகளாக மாறுதல் இல்லாமல் இருந்ததை நாங்கள் மாற்ற தொடங்கிவிட்டோம். இந்த மாற்றப்போக்கு திரும்பிச் செல்ல முடியாத ஒன்றாக மாறி விட்டதென நாம் நம்புகிறோம்.

''எங்களுடைய முயற்சிகள் எதிர்ப்பை உருவாக்கியது, சந்தேகத்தை கிளர்ந்தெழச் செய்தது. ஏன் குழப்பத்தைக் கூட உருவாக்கியது என்பதையும் நான் கூறியாக வேண்டும் எங்களது முயற்சிகளை ஆதாரங்களுடன் மெய்ப்பிக்க எந்த ஒரு கொள்கையும் இல்லையென்பதையும், பொதுச் சொத்து குறித்த எமது முந்தைய கண்ணோட்டங்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளத் தக்கதாய் இல்லையென்பதையும், நாங்கள் கண்டுகொண்டோம்.''

அவரது நிலைப்பாட்டில் உள்ள முட்டாள் தனமான வாதத்தை குறித்து சிறிதும் கண்டுகொள்ளாதவாறு நடிக்கும் மெட்வடேவ்; 'புதிய சோசலிசக் கருத்தாக்கம், தேசியமாக்கப்பட்ட சொத்தையும், தனிப்பட்ட சொத்தையும் பிரித்துப் பார்ப்பதில்லை' என்பதை வெளிப்படுத்திவிட்டார். அவர் கூறுகையில,

''சோசலிச சொத்துடைமை பலவேறு வடிவங்களில இருக்கிறது இதுவே இதற்கு சாதகமான அம்சமும்கூட. இது சோசலிச சொத்துடைமையை வளர்த்து கொடுக்க கூடியதாக பார்க்கிறது, மேலும் அதை பல்வேறு பகுதிகளிலும், பிராந்தியங்களிலும் உள்ள வேறுபட்ட பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப திறமையாக மாற்றவும் முடிகிறது. குருட்டுக் கொள்கைப்பிடிப்பு (Doctrinairism) இங்கே அனுமதிக்க முடியாதது, ஒருவர் மீண்டும் பழைய தவறுகளையே செய்திடக்கூடாது. அதாவது இந்த சோசலிச சொத்துடமை வடிவம் முற்போக்கானது, அதனுல் சிறந்தது, அதே சமயம் தனி நபர்சொத்துடமை மோசம் என்றெல்லாம் நிரூபிக்க முயலக்கூடாது. இப்பிரச்சனைக்கு தீர்வு காண ஒருவர் பரந்த மனப்பான்மையுடன் அதை அணுக வேண்டும்.

''ஒரு நவீன பொருளாதாரம் மிகவும் பரந்துபட்டது. பொருளாதாரத்தை நிர்வகிக்க பல்வேறுபட்ட முறைகள் உள்ளன. ஒரு குறிப்பிட்ட முறை தேர்ந்தெடுக்கப்படுவது, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின மட்டத்தைப் பொறுத்தும், பொருளாதாரத்தை சமூகப்படுத்துவதை பொறுத்தும் அமைகிறது. நமதுபொருட்செல்வத்தையும், உழைப்பு வளங்களையும் செம்மையாகவும், திறமையாகவும் பயன்படுத்த நாம் விரும்பினுல் நாம் இந்த உண்மையை ஏற்றுக்கொண்டு பொருளாதார பன்மை வாதத்தை (Fconomic pluralism) ஊக்குவிக்க வேண்டும். எந்தவொரு நிர்வகிக்கும் முறையும் அது பொருளாதார ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும் கட்டுப்படியாகும் பட்சத்தில். மக்களின் தேவைகளை முழு அளவில் பூர்த்தி செய்ய உதவக் கூடிய பட்சத்தில், மனிதனே மனிதனைச்சுரண்டும் விதத்தில் அமையாது இருக்கும் பட்சத்தில், அது சிறந்த முறையே'',

இதை வேறு வார்த்தைகளில் கூறுவோமானுல், ''சமுதாயச் சொத்துடமை' என்பது அதிகாரத்துவம் எதைக் கூறுகிறதோ அதுதான் !

### கோர்பச்சேவும் ஏனைய மயமாதலும்

கொள்கை வடிவிலான இத்தகைய முத்தான 'கண்டுபிடிப்பு'களுக்கான உத்வேகம் கோர்பசேவிடம் இருந்தே பெறப்பட்டுள்ளது. அவர் ஜனவரியில் மத்தியக் கமிட்டியிடம் ''சோசலிசத்தின் புதிய முகத்

★6ம்பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியனின்

தை விரிவாக்கும் முயற்சியை நாம் தொடர வேண்டும்'' என்று கூறியுள்ளார். அவர் இதில் முதன்மையான பாத்திரம் வகிக்கிறார். பெரஸ்துரொய்காவின் நோக்கம் குறித்து கூறுகையில், ''இது உற்பத்திச் சக்திகளில் இருந்து மனிதன் அந்நியப்படுதலுக்கு எதிரான அடியாகும்; இது கடு உழைப்பாளியிடம் ஒரு வளர்ச்சியடைந்த உடைமையுரிமை உணர்வை மீண்டும் உருவாக்குவது ஆகும் இது அவனது தனிப்பட்ட திறமைகளைவெளிக் கொணருவதாகும். ''Current Digest of Soviet press 1-2-89)

கோர்பச்சேவிற்கு ''அந்நியமாதல்'' என்றபதம் கற்கண்டு மாதிரி. அவர் அதை நீண்ட நேரத்திற்கு விளக்கிக்கூறாத பேச்சு ஒன்றைக்கூட காண இயலாது. இளம் மார்க்ஸ் 1840களில் ஆழமாகஉபயோக படுத்திய இந்த தத்துவ வார்த்தையை கோர்பச்சேவ் அடிக்கடி உபயோகிக்கிறார், ஆனால் விஞ்ஞான சோசலிசத்தை நிறுவிய அந்த மேதையின் கண்ணோட்டத்திற்கு ஒரு சிறிதும் ஒட்டாத முடிவுகளை அடைய கோர்பச்சேவைப் பொறுத்த வரை - அவர் கண்டிப்பாக ஒரு மேதை அல்ல, அதிகாரத்துவத்தின் உட்சண்டை என்ற உலகத்தை தவிர்த்து - அந்நியமாதல் என்பது மனிதன் அவனது சொத்தில் இருந்து பிரிக்கப்படும் போது தோன்றுவது. அந்நியமாதலின் மிகக் கொடுமையான வடிவம் நிலத்தில் தனிச் சொத்துடமை மறுக்கப்படும்போதும் உழவன்விவசாய தொழிலாளியாக மாறுதலடையும்போதும் ஏற்படுகிறது என்று கோர்பச்சேவ் அடித்து கூறுகிறார். கூட்டுப்பண்ணைகளை குறைந்தபட்சம் 50 வருடங்களுக்கு குறையாத குத்தகை என்ற அடிப்படையில் தனி நபர் உடைமையான ''கூட்டுறவு''களாக மாற்றுவதன் மூலம் இதை வெற்றி காணவேண்டும் என்கிறார்.

1988 அக்டோபரில் நடந்த சோவியத்யூனியன்கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழுவிடம் அவர் இவ்வாறு கூறினார். ''கூட்டுப் பண்ணைகளிலும் அரசுப்பண்ணைகளிலும் மக்கள் நிலத்தில் இருந்தும் உற்பத்தி சாதனங்களிலிருந்தும் அந்நியபட்டுவிட்டனர். பொருளாதாரத்தின் இதர கிளைகளைவிட கிராமப்புறங்களில் இந்த அந்நியமாதல் மிகவும் வெளிப்படையாகத் தெரிந்தது, மக்கள் பண்ணைகளுக்கு ஒப்பந்த கூலிகளாக வேலை செய்ய அழைத்து வரப்பட்டனர். வாழ்க்கையை ஓட்டுவதற்காக அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைநேரத்தில் ஏதேதோ செய்து நேரத்தை ஓட்டிக்கொண்டிருக்கின்றனர். ஏதோ ஒரு உத்வேகம் அவர்களுக்கு இருந்ததை மறைக்க முடியாது. ஆனால் உண்மையான விவசாயிகள் எப்படி இருக்க வேண்டுமோ அவ்வாறு விவசாயத் தொழிலாளர்கள் இல்லை. நிலம், இயற்கை மற்றும் அதில் நடைபெறும் காரியங்களினால் நாம் வாழும் உலகம் உருப்பெறுகிறது. அதற்கு நிலத்தை உணர்வு பூர்வமாக புரிந்திருப்பது மிகவும் அவசியம். நீங்கள் ஒரு பண்ணையில் வேலைசெய்வதாய் இருந்தால் உயிரினங்கள்பற்றி அறிந்திருக்க வேண்டும்.''

''கிராமப்புறங்களில் வளர்ந்தவர்களுக்கு இயற்கையின் மத்தியில் மற்றும் அப்பிரதேச தாவர, மிருகங்கள் மத்தியில் வாழ்ந்த நினைவிருக்கும். இது ஒருவிவசாய மனோபாவத்தையும் அதற்கேற்ற வாழ்க்கை முறையும் வளர்க்க ஊக்குவிக்கிறது. உற்பத்திச் சாதனங்களில் இருந்தும், நிலங்களில் இருந்து மக்களை அந்நியப் படுத்தி, நிலத்தின் அதிபதிகளாக இருந்தவர்களை வாடகைக் கூலிகளாக மாற்றி விட்டோம். Soviet press 1988 Dee15-30லிருந்து மறுபதிப்பு)

கோர்பச்சேவ் தனது வலது சாரி திட்டத்தை, போலி தத்துவார்த்த மெருகேற்றி ஸதாபிக்கமுயல்வது, மார்க்சிசத்தை முழுமையாக தவறாகப் திரித்துப் புரட்டுவதாகும். மார்க்சிய அகராதிப்படி, அந்நியமாதல் அதாவதுபேதப் படுத்தப்பட்ட உழைப்பு என்பது தனிச் சொத்துடமையோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையது, உற்பத்திச்சக்திகள் மற்றும் வேலைப்பகுப்பின் வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தின் போது, மனிதன் அந்நியமாகி விட்டான்; அதாவது அவனது உழைப்பின் உற்பத்திப்பொருளிலிருந்து தனிப்படுத்தப்பட்டு விட்டான்மார்க்ஸ்தன்னுடைய 1844ஆம் வருட வெளியீடான பொருளாதார மற்றும் தத்துவ கைப்படிவங்களில்இதுகுறித்து மிகவும்கவித்துமாககுறிப்பிட்டு உள்ளார் அவர், இந்த அந்நியமாதல் தனிச்சொத்துடமை தோன்றியவுடன்மிகவும்இறுகி விட்டது, இந்த வரலாற்று ரீதியான மிக அவசியமான சமூக உறவு உற்பத்திச்சக்திகளின் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி மட்டத்திற்கு ஏற்ப அமைந்து உள்ளது. மனிதன் அவனே உருவாக்கிய உற்பத்திச்சக்திகளினால் எவ்வாறு அடக்கி ஆளப்படுகிறான்என்பதற்கான உன்னதமான உதாரணமே தனிச்சொத்துடமையின் வரலாற்று ரீதியான வளர்ச்சியாகும் இந்த உற்பத்திச் சக்திகள் மனிதனின் ஆளுமை மீறி தனித்துவமாக இயங்கி, அவனது வாழ்க்கையின் நியதிகளை நிர்ணயித்து வருவதால், அது வேறு ஏதோ பெரிய சக்தியின் வெளிப்பாடாகவும் அதன் கட்டளைகளுக்கு தான் கீழ்ப்படிய வேண்டியவனாக இருப்பதாகவும்அவனுக்குதோன்றுகிறது. சொத்தின் படிப்படியான வளர்ச்சி, முதலாளித்துவ சொத்துடமையாக குவிகிறது. குவிந்து இந்த அந்நியமாதலை பலப்படுத்துகிறது. மனித சமுதாய வரலாறு, நீண்ட காலமாகவே மனிதனை கீழ் நிலைப்படுத்தியுள்ள நிலைவரை மனித சமூக வரலாறுமிகஅதிகமான பயங்கரமான சமூக வடிவங்களை எடுக்கிறது. இருந்த போதிலும் முதலாளித்துவ வளர்ச்சி மற்றும் எவ்விதச் சொத்தையும் உரிமை கொண்டாடாதபாட்டாளிவர்க்கத்தின் தோற்றம் ஆகியவற்றிலேயே, கம்யூனிசப்புரட்சி மூலமாக தனிச் சொத்துடமையை அழிப்பதின் மூலமாக, மனிதனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தையும், மொத்த மனித இனத்துக்காக அர்ப்பணிப்பதன்மூலமாக அந்நியமாதலை நடைமுறையில் மீறி வருவதற்கான வரலாற்று பாதை ஒன்று தீர்மானிக்கப் பட்டுவிட்டது,


மார்க்ஸைதவறாகபடித்தோ அந்நியமாதலின் வரலாற்று மற்றும் தத்துவார்த்தமுக்கியத்துவம் பிழையாக புரிந்து கொள்ளப்பட்டோ பெரஸ்துரொய்கா தீட்டப்பட்டதாக நாம் கூறுவதாக இதற்கு அர்த்தம் கற்பித்துக்கொள்ளக் கூடாது, கோர்பச்சேவின் கொள்கைகள் பொருளாதார நலன்களில்ஆழமாகவேரூன்றி உள்ளது. சோவியத்தலைவரின் கொள்கைக்கட்டுமானங்களின் உண்மையான ஆதாரங்கள் இவைதான். ஆனால் துல்லியமாக இந்தப் பொருளாதார நலனும் அதனிலிருந்து உதித்தெழுந்த வடிவங்களும் உள்ள உறவே கோர்பசேவின் சித்தாந்ததீர்மானங்களுக்கு அடித்தளமாக விளங்குகின்றன, அந்நியமாதலையும் தனிச்சொத்து உடமை மறுக்கப்படுவதற்கு தொடர்புபடுத்துவதன் மூலம், முழுமையாக முதலாளித்துவத் தனமாக ஒரு சித்தாந்த நிலைப்பாட்டை கோர்பச்சேவ் எடுக்கிறார்உண்மையில்'இந்தநிலைப்பாடு, பாரம்பரியமாகவும் ஆழமாகவும் முதலாளித்துவாதிகளின் வர்க்க உணர்வுகளோடு வேர்விட்டு இருந்ததாக, மார்க்சும் எங்கல்சும் 1845லிலேயே இதற்கு எதிராகவிவாதிக்கிருக்கிறார்கள்.வரலாற்றின்பொருளாதாய கருத்தமைவை பற்றி திட்டமிட்ட முறையில் எடுத்துரைத்த முதல் புத்தகமான ஜெர்மன் சித்தாந்தம் என்னும் நூலில், முதலாளி தன் தனித்துவத்திற்கான உண்மையான அடித்தளம் அவனது சொத்துடைமைதான் என்றும் தனிச் சொத்துடமையை முழுவதுமாக ஒழித்துக்கட்டுவது மனித இயல்பிற்கு எதிரிடையானதென்றும் உறுதியாக நம்பினான் என்று மார்க்சும் எங்கல்சும் கூறியுள்ளனர்.

''ஆனால், முதலாளித்துவத் கோட்பாளர்கள் முன் வந்து இந்த வலியுறுத்தலுக்கு ஒரு பொதுவான விளக்கத்தை அளிக்கும்போது முதலாளியின் சொத்தை அவனது தனியியல்புகளோடு ஒப்பிட்டு அதை நியாயப்படுத்த ஒரு வாதத்தை முன் வைக்கும்போது, இந்த, அபத்தம் புனிதமானதாகவும் தெய்வத் தன்மையுடையதாகவும் மாறுகிறது.'' என்று மார்க்சும் எஸ்கெல்சும் கூறுகின்றனர்

கோர்பச்சேவும் அவரதுகூட்டமும் விடுக்கும் அனைத்து பகிரங்க வேண்டுகோள்கள் மற்றும் அறிக்கைகள் இத்தகைய புனிதத்துவம் மற்றும் தெய்வத்தன்மையையும் அத்துடன் பிற்போக்குத்தனமான அபத்தங்களை உள்ளடக்கியுள்ளது என நாம் கூறலாம். ஒரு சமூக சாதியாக உருவெடுத்து உள்ள அதிகாரத்துவம் இன்று அறிவியற் சோசலிசத்தின் சித்தாந்த அடித்தளங்களிலிருந்து மட்டும் அல்லாமல்,அக்டோபர் புரட்சி ஈன்றெடுத்த வெற்றிகளில் இருந்தும் அந்நியப் பட்டுள்ளது என்பதைஅவர்கள் இதன் மூலம் மெய்ப்பிக்கின்றனர். சோசலிசத்திற்கு எதிரான அந்நியப்பட்டுபோயுள்ள அதிகாரத்துவத்தின்நம்பிக்கை துரோகம்தான்கோர்பச்சேவின் திட்டங்களின் ஒவ்வொரு அம்சத்திலும் வெளிப்படுகிறது. ஆகவே, நிலங்களில் தனிச் சொத்துடமையை மீண்டும் கொண்டு வருவதற்கான நோக்கம் விவசாயத தொழிலாளிக்கு மீண்டும் அந்நாட்டு தாவரம், மிருகங்கள் மீது அன்பை ஏற்படுத்த வேண்டும். என்பதல்ல. மாறாக இலாப வெறியை அவர்களிடம் வளர்த்து, மறுபடி நிர்மாணிக்கப்பட்ட விவசாயிகள் என்ற வடிவில் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ சொத்துடமையாளர்களைக்கொண்ட ஒரு சமூக அடித்தளத்தை உருவாக்குவதாகும். அதிகாரத்துவம், உழைக்கும் வர்க்கத்திற்கு எதிரான போராட்டங்களில் இவர்களைநம்பி களத்தில்இறங்கும்.

இக்குறிக்கோள், கோர்பச்சேவ் ஆதரவு கல்விக் கழகத்தினர்சமீபத்தில்நடத்தியவட்ட மேசை மாநாட்டிலவ்வியுறுத்த பட்டது. அதில் சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்கமிட்டியின் சமுதாய மற்றும் பொருளாதாரத்துறையின் ஆலோசகரான V. பாஷ்மாசினிகோவ் கூறினார். ''முற்போக்கான விவசாயச் சீர்திருத்தத்திற்கான அவசியம் குறித்து இன்று மேலும்மேலும் நிபுணர்களும் அறிஞர்களும், பேசி வருகிறார்கள், அதன் சாராம்சம், ''உழுபவனுக்கே நிலத்தை அளி'' என்ற கோஷத்தில் நன்றாக வெளிப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமெனில் விவசாயி பங்குதாரனாக மாற வேண்டும்! அனைத்து விவசாய பொருளாதார ஆய்வு நிறுவனத்துறையின் தலைவரான V. யுருன் பேசுகையில் குத்தகைச் சட்டத்தின் முன்னுரையில்; விவசாயிகளை ஒருவாக்கம் என்ற நோக்கில் அரசியல் புனருத்தாரனம் செய்யவேண்டிய ஒரு பிரிவை தெளிவான வார்த்தைகளில் விளக்கப்பட வேண்டும் என்பதில் நான் முழு உடன்பாடு கொண்டுள்ளேன்'' என்று முழங்கினார், (Current Digest மார்ச் 15, 1989).

சாற்றுகிறது. சோசலிசத்
தோல்வியை அல்ல. சோவி
விவசாயத்தின் தோல்வி
அல்ல. சோவியத் விவசா
தின் தீவிரப் பின்னடை
ஏன் சோவியத்பொருளாதா
தின் ஒட்டு மொத்த பின்ன
வின் வரலாற்று ரீதிய
காரணம், தனி ஒரு நாட்
சோசலிசத்தை தீர்மானிக்
கொள்கையை உறுதியா
பற்றிக்கொண்டிருந்த ஸ்ட
னிசத்தின் கொள்கைகள்த
துளிக்கூட மார்க்சிய அ
தளம் இல்லாத இந்த
போக்குத்தனமான கோட்ட
1920களின் மத்தியில் இரு
உலக சோசலிசப் புரட்சிே
திட்டத்தை ஒட்டு மொத்தம
ஒதுக்கித்தள்ளுதலுக்கு. சே
யத் அதிகாரத்துவம்
நியாயமான கற்பிக்க உ
து. ஸ்டாலினைப்பொறு
வரை புரட்சிக்த முந்ை
சோவியத்யூனியனில் இரு
பெறப்பெற்ற சமுதாய மற்
பொருளாதாரப்பின்னடை
வெற்றி காண சோவியத் யூ
யன் உலக பொருளா
வளங்களில் இருந்து எதை
பெறத் தேவையில்
என்பதே.



கார்ல் மார்க்ஸ் : ''அந்நியமாதல் தனிச்சொத்துடமை யின் தோற்றத்தில் ஸ்தூலமாக்கப்பட்டது''

விவசாயிகளுக்கு நிலத்தை திருப்பிஅளிக்கவேண்டும்என்ற எல்லையற்ற வேண்டுகோள்களுக்குப் பின்னால் சோவியத் விவசாயத்தின் நெருக்கடியை, கிராமப்புறத்தில் முதலாளித்துவ உறவுகளை புதுப்பிப்பதன் மூலம் வெற்றி காணலாம். என்ற பொய்யானசுயநலமான பிற்போக்குத்தனமான யூகம் உள்ளது. முதலாளித்துவ பொருளாதார நிபுணர்களின் அனைத்து வாதங்களையும் ஏற்றுக் கொண்டுள்ள கோர்பச்சேவும் அவரது கூட்டமும், வேகமான விவசாய வளர்ச்சியின் சாவி தனிநபர் லாப ஈட்டலில் இருப்பதாக எடுத்துரைக்கின்றனர்.

## ஸ்டாலினிசத்தின் தோல்வி

சோவியத் யூனியனில் விவசாயம் ஒரு மோசமான நெருக்கடியில் சிக்கி உள்ளது என்பது பற்றி இரண்டாவது அபிப்பிராயமே கிடையாது, ஆனால் இந்த உண்மை ஸ்டாலினிசத்தின் தோல்வியையே பறை

ஆனால் சோசலிச
வளர்ச்சிக்கு எப்பொழு
மிக உன்னதமான தெ
வளர்ச்சி முன் அவ
ஆனது என்றே மார்
கூறி வந்துள்ளது. உல
யில் முதலாளித்துவம் அ
துள்ள உச்சகட்ட வளர்ச்
சோசலிசம் அதன் தொட
புள்ளியாக கொள்ளவேண
ஆனால் சோசலிசத்தை
எழுப்புவதற்கு தேவை
வளங்களை ரஷ்யாவிற்கு
யே கண்டுபிடிக்கலாம் எ
ஸ்டாலினிஸ்ட்களின்
பாடு. விவசாயத்தைபொ
வரை இந்தக்கோட்பாடு
கர மோசமான விளைவு
தோற்றுவித்துள்ளது.
களின் முதல் பகுதியில்
பண்ணை நடவடிக்கைக
ஏற்பட்ட படுதோல்விக்கு
ணம், தேவையான தெ
வளர்ச்சி இல்லாமல் வி
உற்பத்தியை ''சமூ
படுத்த'' முயன்றது
ஏராளமான உயிர்ச்
களுக்கு பிறகு சாதிக்க
கூட்டுப் பண்ணை முறை
கும் விவசாய வளர்ச்சி.
வான தொழில் வளர்

www.padippakam.com



# ...தர்தல்களின் பின்னால்!

...ட்டத்தாலும், அதனுடன் ...ணைந்த கட்டமைப்பு மற்றும் ...த்தியாலும் பெரிதும் பாதிக்கப் ...ட்டது. இது இன்று வரை ...ளர்ச்சியடைந்த ஏகாதிபத் ...ப நாடுகளுக்கு பின்னால் ...ங்கோ இருந்து வருகிறது.

ஆகவே சோவியத் விவ...யத்தின் எதிர்காலம், ...சோவியத் யூனியனுக்குள்ளே ...சோசலிசத்திற்கு ஏற்பட்டுள்ள ...விதியோடு பின்னிப் ...ணைந்துள்ளது. சோவியத் ...பொருளாதாரத்தின் அனைத்து ...ரிவுகளின் இசைவான வளர்ச் ...க்கு உலகப் பொருளாதார ...ளங்கள் மற்றும் சர்வதேச ...ழைப்புப் பிரிவுகளை அணுக, ...சோவியத் யூனியனுக்கு தங்கு ...டை ஏதும் இருக்கக்கூடாது. ...இதற்கு ஏகாதிபத்தியத் ...ற்கு எதிரான சர்வதேச ...ட்சிகர போராட்டத்தில், ...னைத்துலக தொழிலாள வர்க் ...ர்க்கத்துடன் சோவியத் ...ட்டாளி வர்க்கம் முதலில் ...ணையவேண்டும்.

இந்த முன்னோக்கு சோவியத் ...திகாரத்துவத்தால் பெரும் ...ழிக்கு ஆளானது. அதனு...டைய வரலாற்று இருப்பு முழு...தும், டிராட்ஸ்கியால் நிரந் ...ர புரட்சிக் கோட்பாடு என்ற ...ரியியல் ரீதியான வடிவத் ...தில் கொடுக்கப்பட்ட, உலக ...சோசலிசப்புரட்சிக்கு எதிராக ...தொடுக்கப்பட்ட கொடூரமான ...போராட்டங்களுடன் பிணைந்து ...ள்ளது. அதற்கு மாறாக, ...கோர்பச்சேவின் தலைமையி ...லான சோவியத் ஸ்டாலினிச ...அதிகாரத்துவம், சோவியத் ...பொருளாதாரத்தின் முரண் ...பாடுகளை எதிர் புரட்சி நட...வடிக்கைகள் மூலம் தீர்க்க ...முயல்கிறது. அதாவது, ...உலக ஏகாதிபத்தியத்தின் ...கட்டமைப்புடன் சோவியத் ...யூனியனை இணைப்பதின் மூல...மும், சோவியத் விவசாயம் ...மற்றும் சோவியத் தொழில் ...துறையில் முதலாளித்துவ ...உறவுகளை புகுத்துவதன் மூல...மும் அதைச் செய்யப் பார்க் ...கிறது.

கோர்பச்சேவின் முதலாளித் ...துவ திட்டங்கள் கூட்டுப்பண்ணை...களை நிர்மூலமாக்குவதையும், ...கூட்டுறவுகளை எண்ணிக்கை ...பற்ற முறையில் வளர்த்தெடுப் ...பதன் மூலம் அரசு தொழிற் ...துறையை முடமாக்குவதையும் ...முக்கிய குறிக்கோளாக்கொண்டு ...உள்ளன. முதலாளித்துவ ...நாடுகளில் பெரும் நிறுவனம் ...(Corporation) என்றழைக்கப் ...படுவதற்கு சோவியத் அதி...காரத்துவம் தேன் குழைத்து ...தடவிய வார்த்தைதான் கூட்டு...றவுகள். கடந்த வருடத்தில் ...மட்டும் சோவியத் யூனியனில் ...உள்ள கூட்டுறவுகளின் ...எண்ணிக்கை 8000த்திலிருந்து ...48000 ஆயிரமாக வளர்ந்து ...உள்ளது. அதில் வேலை செய்து ...வந்தவர்களின் எண்ணிக்கை ...சுமார் 1000 அதிகரித்து ...உள்ளது.

கூட்டுறவு இயக்கத்தின் ...வளர்ச்சிக்கு, இனியும் சோசலி...ஸ்ட்டுகள் என்று வேஷமிட்டுக் ...கொண்டிராத சோவியத் ...பொருளாதார நிபுணர்களில், ...பெரும்பாலோரிடம் இருந்து, ...ஆரவாரமான வரவேற்பு ...கிடைத்துள்ளது. லாஸ் ஏஞ் ...சல்ஸ் டைமஸ் பத்திரிகை சமீ...பத்தில் "பிரபல அறிவாளர் ...ஒருவருடன்" நடத்திய விவா...தத்தை பிரசுரித்தது. அதில் ...அவர் "சோவியத் சமுதாயத் ...தின் இறுதி இலட்சியம் ஏதோ ...ஒரு சோசலிச வடிவமாக ...இருக்கும்பட்சத்தில்கூட, நாடு ...முதலாளித்துவ கட்டத்தை ...முதலில் கடந்து தான் அதை

அடைய வேண்டும் என்பது தவிர்க்க இயலாதது" என்று குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து பொருளாதாரத்தின் மத்திய போர்டின் ஐக்கிய அமைப்பின் கீழுள்ள வளர்ச்சி மையத்தின் ஆய்வு இயக்குனரும், பொருளாதார நிபுணருமான G.L. ஃபாக்டர், கூறுகிறார். தேவைக்கு அதிகமாக தேசியமயமாக்கப் பட்டிருந்த பொருளாதாரத்தில் சமுதாயத்தின் பொருள்கள் மற்றும் சேவைகளின் தேவை யைபூர்த்திசெய்ய இயலாது என்பது இன்று கண்கூடாக தெரிகிறது. நமது தேசிய பொருளாதாரத்தை உயர்த் துவதற்கு கூட்டுறவுத் துறை (தனிநபர்களையும் சேர்த்து சுமார் 25% முதல் 30% வரை அதிகமாக உற்பத்தி செல்ல வேண்டும் என்று கணிக்கப் பட்டுள்ளது.'(Current Digest ஜனவரி, 25. 1988)

இனியும் தனிப்பட்ட கூட்டுறவுகள், அரசுக்கு சொந்தமான தொழிற்துறைக்கு உதவிகரமாக இருக்கும் சிறு இணைப்பல்ல என்பது இந்த அறிக்கையில் இருந்து தெள்ளத் தெளிவாகப் புரியும். மாறாக, மிகக்குறைவான உற்பத்தித் திறனுடன் இயங்கும் அரசின் தொழிற்துறையை ஒழித்துக் கட்டுவதும் மிகவும் நவீனமான மற்றும் திறமையான தொழிற்சாலைகளை இலாபம் ஈட்டும் கூட்டுறவுகளாக மாற்றுவதும்தான், அதிகாரத்துவத்தின் திட்டங்களின் நோக்கமாகும்.

இந்த நோக்கங்களை சாதிப்பதற்காக, கோர்பச்சேவ் அரசாங்கம், ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கும் சோவியத் யூனியனின் அரசுசார்புடைய மற்றும் கூட்டுறவு அமைப்புகளுக்கும் இடையே நேரிடை பரிவர்த்தனைகளுக்கு விதிக்கப் பட்டிருந்த கட்டுப்பாடுகளை அறவே தளர்த்தப்பட்டதன் மூலம், அந்நிய வியாபாரத் தில் அரச ஏகபோகத்தை நீக்கியுள்ளது. சோவியத் யூனியனின் அமைச்சர்கள் சபையால் நிறைவேற்றப்பட்டு, 1989 ஜனவரி 1 முதல் அமுலுக்கு வந்துள்ள தீர்மானத்தின்படி, உலகச்சந்தையில் போட்டியிடத் தகுதியுள்ள அனைத்து சோவியத் நிறுவனங்களுக்கும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வியாபாரத்தில் இறங்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்மானம் கூறுவது: "நிறுவனங்கள், குழுமங்கள், உற்பத்தி கூட்டுறவுகள் மற்றும் இதர அமைப்புகள், தேவையெனில், அந்நிய வியாபார நிறுவனங்களை, பொருளாதாரத் தேவையின் அடிப்படையில் இதற்கென உருவாக்கியோ, அல்லது வேறு அந்நிய பொருளாதார அமைப்புகளுடன் ஒப்பந்த முறையிலோ, ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தை கவனிக்கலாம். அப்படி செய்யும்போது மிகச் செம்மையான ஏற்றுமதி—இறக்குமதி நிலையை அடையும் நோக்குடன் இயங்கவேண்டும்; அந்நியச் செலாவணியைப் பொறுத்தவரை சுய—பொருளாதார பூர்த்தியோடும், போட்டா முதலை மீண்டும் எடுக்கும் நோக்குடனும் அவை செயல்பட வேண்டும்! அவர்களது செயல்பாடுகளுக்கு அரசு எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது என்பதை நினைவில் வைத்துக் கொண்டு மேற்கொண்டு போகவேண்டும்"
(Current Digest, ஜனவரி 25, 1989)

இந்தத் தீர்மானம் சோவியத் தொழிற்துறையை அடியோடு வெட்டிச் சாய்க்கவும், மத்தியப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை முறித்து போட்டு அந்த அந்நிய மூலதனத்தின் கூட்டுறவுடன் போட்டியிடும் உள்ளூர் நிறுவனங்களை தோற்றுவிக்கவும் ஒரு சட்ட ரீதியான அடித்தளத்தை அமைத்துவிட்டது மேலும், முன்பு சில்லறை ஊழல்களால் ஏற்பட்ட பயன்களைக் காட்டிலும் மிக அதிகமான அளவில் செல்வத்தை பெருக்க சோவியத் அதிகாரத்துவத்திற்கு சாத்தியக்கூறுகளை திறந்துவிட்டுள்ளது எனபதுகண்கூடு.

முக்கியமான மத்திய திட்டம் தனது பொருளாதார பொருத்தத்தை இழந்தவுடன் (அதன சட்டப்பிரம்பாகம் பற்றி குறிப்பிடத் தேவையில்லை) உள்ளூர் தொழிற்துறையிலுள்ள மிகவும் வளர்ச்சியடைந்த, அதிக லாபம் ஈட்டும் ஏகாதிபத்திய நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் நிதித்தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முனையும். அரசின் பல்வேறு துறைகளில் இன்று பொறுப்பாயுள்ள அதிகாரத்துவத்தின் தேவையான கணக்குகளைப் போட்டு மத்திய திட்டத்தில் இருந்து விலகுவதன் மூலமும் அரசு தொழில்நிறுவனங்களை தங்களுக்கு கீழுள்ள கூட்டுறவுகளாக மாற்றுவதன் மூலமும் தங்களது சொந்த நலன் நன்றாக கவனிக்கப்படுமாறு பார்த்துக் கொள்வார்கள். கோர்பச்சேவின் அதிகாரத்துவத்திற்கு எதிரான போராட்டத்தை வைத்து பார்க்கும்போது, இத்தகைய சூழ்நிலையில் அவர்கள் சுதந்திரமாக தங்கள் தொழில்முனைவர்களாகவும்; தரகு முதலாளிகளாகவும் மாறிக் கொள்வார்கள்.

## கூட்டுறவுகளுக்கு தொழிலாளர்களிடம் எதிர்ப்புணர்வு

அந்நியப் பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய தீர்மானம் அமுலாகும் முன்பே, அரசு தொழிற் துறையை, கூட்டுறவுகளின் வளர்ச்சி பாதிக்கத் துவங்குவது தொழிலாள வர்க்கத்தின் பார்வைக்கு வராமல் இல்லை. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் ஒரு கூட்டத்திற்கு சில தொழிலாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர், அதைப்பற்றிய தகவல் 'பிராவ்தா' சமீபத்தில் வெளியிட்டிருந்தது. அழைக்கப்பட்டிருந்தவர்கள் மிகவும் முன்னுரிமை பெற்ற தொழிலாள குழுக்களின் பிரதிநிதிகளாகத்தான் இருக்கவேண்டும் என்றாலும் பெருந்தொகைய டால், கூட்டுறவு இயக்கம் குறித்து பொது மக்களிடம் பரவலாக காணப்படுகிற எதிர்ப்பு உணர்ச்சியை அவர்கள் மேம்போக்காக பிரதிபலித்தனர் என்றுதான் கூறவேண்டும்.

"போல்கோகிரேடு இரும்பு கம்பி தொழிற்சாலையில் பணிபுரியும் A.ye. அலிபெரன்கோ திறமையான, இளமையான தொழிலாளர்கள் தங்களது வேலையை விட்டு விட்டு, கூட்டுறவுகளில் பணிபுரிய போய்விடுவது பல தொழிலாளர்களுக்கு வேதனையாக இருக்கிறது என்று கூறினார். கூட்டுறவுகளை குறித்து அவரது கருத்துகளை தெரிவிக்

கையில் சமுதாயத்திற்கு இது கட்டாயமாகத் தேவைப்படுகிறது என்றாலும் அதன் வளர்ச்சி, சமுதாய நிதி மற்றும் தராதரத்தை கண்டிப்பாக பாதுகாக்கும் விதத்தில் அமையவேண்டும் என்றார்... ... ... ...

"தற்போது அவரது ஆலையில் வேலை செய்துவரும் தொழிலாளர்களுக்கு கூட்டுறவுகளில் பணிபுரிய 800 முதல் 1500 ரூபிள்கள் வரை தரத்தயாராக இருக்கிறார்கள், அவர்கள் தற்போது இந்த 500 ரூபிள்கள்தான் சம்பாதித்து வருகிறார்கள்" என்று அவர் உதாரணத்தோடு மேலும் கூறினார்.

"தொழிலாளர்களின் பார்வையில், நியாயமற்ற முறையில் ஒரு சில தொழிலாளர்கள் மிக அதிக கூலி பெறுவது, சமுதாய நீதிக்கொள்கைக்கு முரண்பாடானதாகும், நேர்மையான தொழிலாளர்களை கோபமடையச் செய்கிறது

மாஸ்கோ நகர சிலுக்கே, உற்பத்தி அமைப்பின் முதன்மையான ஆடைபணி உற்பத்தியாளராக விளங்கும். ye.K. மால்கோவா இவ்வாறு கூறுகிறார். "கூட்டுறவுகளைப் பற்றி பலரும் நிறையவே கூறியாகிவிட்டது. ஆனால் ஒரு விஷயத்தைப்பற்றி எவரும் எதுவும் கூறவில்லை. மக்கள் கூட்டுறவுகள் குறித்து மிகவும் அதிருப்தியுடன் இருக்கிறார்கள் ஏனெனில் முதலில் இருந்தே அரசு நிறுவனங்களிலும் கூட்டுறவுகளிலும் வேலை செய்பவர்கள் சமமற்ற நிலையில் அமர்த்தப்பட்டனர். அரசு நிறுவனங்களில் இருந்து பலர் வெளியேறினர். இதன் விளைவாக நமது தொழிற்சாலை தனது உயிர்நாடியை அதன் சிறந்த திறமையான தொழிலாளர்களை இழந்து வருகிறது. கூட்டுறவு குறித்து மற்றொரு விஷயம் அவர்கள் சந்தையில் பொருட்களைக் கொண்டு வந்து குவிப்பார்கள் என்று எதிர்பார்த்தோம் ஆனால் அதிகமான பற்றாக்குறையுடைய பொருட்களின் விலை மாற்றங்களும் எங்களுக்கு சில சமயங்களில் கிடைக்கிறது. நாங்கள் இவை குறித்து எங்களது கண்களை மூடிக்கொள்ளாமல் போவதில்லை தேர்தல்கூட்டங்களில் தொழிலாளர்கள் இதைக்குறித்து பேசுகின்றனர். கூட்டுறவுகளுக்கு பொருட்கள் மற்றும் தொழில் நுட்ப விநியோகங்கள் சம்பந்தமாக உத்தரவாதம் இல்லாததன் காரணத்தால் சந்தையில் உள்ள சிறு விற்பனையாளரிடம் இருந்து பொருட்கள் மாயமாய் மறைந்து விடுகின்றன. (Current Digest March 15, 1989).

கடந்த சில மாதங்களில், கூட்டுறவுகளின் நடைமுறைகளுக்கு எதிராக மக்கள் திரண்டெழுந்த சம்பவங்கள் குறித்து சோவியத் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன 'பெரஸ்துரொய்கா' வந்ததிலிருந்து சோவியத் பொருளாதாரத்தின் நிலையும், தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கை தரமும் மோசமாகிக்கொண்டு வருவதற்கு இவைகள் தாம் பொறுப்பாகும். அரசுடைமையான தொழிற்துறையிடம் இருந்து குறைந்த விலைக்கு வாங்கி அதை அதிக விலைக்கு விற்பதாக கூட்டுறவுகள் மீது இடைவிடாத குற்றச்சாட்டு உள்ளது. கூட்டுறவுகளின் இந்த சமூகவிரோத நடத்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட சொல்

கூட உருவாகிவிட்டது. அது தான் கூட்டுச் சுயநலம் அத்தன்மையை 'பிராவ்தா' கூட கண்டிக்க வேண்டியதாகிவிட்டது,

"கூட்டுறவுடன் தொடர்புடைய ஒரு புதிய கூட்டுச் சுயநலம் தற்போது தோன்றி கொண்டிருக்கிறது. உதாரணமாக மிக அபூர்வ மூலிகைச் செடிகளை, மிக வேகமாக மறைந்து வரும் செடிகள் என குறிக்கப்பட்டவை உட்பட வெளிநாட்டு மருத்துவ நிறுவனங்களுக்கு விற்க முன்வந்துள்ளன. கூட்டுறவு உறுப்பினர்கள் தொலைதூர கிராமங்களுக்குச் சென்று, அரசு கொடுப்பதை காட்டிலும் அதிக விலை கொடுத்து மூலிகைகளை வாங்கி விடுவதால் ஏற்கனவே மிகவும் குறைவாக உள்ள மருந்தகங்களின் கையிருப்பு இன்னும் சுருங்கி விடுகிறது. கூட்டுறவுகள் மிஞ்சி மிஞ்சிப்போனால், அவைகளை நகர்புறத்தில் கொள்ளை லாபத்திற்கு விற்பனை செய்யும் மிக அரிதான மூலிகைகளை வெளிநாடுகளில் நல்ல விலைக்கு விற்பது மூலம் அவை தங்களது சொந்த மக்களிடமே திருடுகின்றன. ஆனால் இதைவிடவெல்லாவற்றையும் தூக்கி சாப்பிடுகிறாப் போல ஒரு சம்பவம் நிகழ்ந்து உள்ளது. இது மூலிகை மற்றும் நுண் உயிரியல் துறை அமைச்சகத்திடம் ஒரு வெளிநாட்டு நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது. அதாவது ஒரு கூட்டுறவு, பணம்கொடுத்து தானம் செய்யப்பட்ட இரத்தத்தை விற்பதற்கு முன் வந்துள்ளது".

Current Digest, மார்ச் 8, 1988).

## அக்டோபர் புரட்சி

கூட்டுறவு இயக்கம், கொள்ளைக் கும்பலின் நடவடிக்கை அதிகாரிகள் ஏற்றதாத்தையும் கூட உருவாகியுள்ளது. இது குறித்து இஸ்வெஸ்டியா பத்திரிக்கையில் ஒரு தகவல் வந்து உள்ளது. பணம் பிழிந்தும் கூட்டங்கள், அந்நியப் பணம் புழங்கும் கூட்டுறவுகளில் நுழைவதற்கும், வெளிநாட்டு நிறுவனங்களுடன் கூட்டு நடவடிக்கையில ஈடுபட்டு வரும் கூட்டுறவுகளுக்குள் புகுவதற்கும் ஏற்ற வழிகளைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். (I bid).

கூட்டுறவுகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக பரவலாக தோன்றியுள்ள சமுதாய எதிர்ப்புணர்வு கோர்பச்சேவ் மற்றும் அவரது பங்காளிகளுக்கு, கடுமையான ஏமாற்றத்தை தோற்றுவித்துள்ளது சோவியத் யூனியனுக்குள் மீண்டும் முதலாளித்துவத்தை புகுத்துவதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் எதிராக இயங்கும் உழைக்கும் வர்க்கத்தின ஆழமாக வேரூன்றிய எதிர்ப்புணர்ச்சியை சோவியத் அதிகாரத்துவம் எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது பல பத்தாண்டு கால ஸ்டாலினிசப் பொய்களாலும், திரித்துகூறல்களாலும் அரசியல்ரீதியாக எப்படியெல்லாமோ குழப்பப்பட்டு இருந்தாலும்; லட்சக்கணக்கான தொழிலாளர்களின் அடி மனத்தில் இன்னும் அக்டோபர் புரட்சி அணையாமல் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது, சமீபத்

★8ம்பக்கம் பார்க்க

www.padippakam.com



தில் மக்கள் பிரதிநிதிகள் காங்கிரஸின் ஒருஉறுப்பினர் பதவிக்கு சோவியத் தலைவரால் சிபாரிசு செய்யப்பட்டவரும் கோர்பசேவின் முதன்மையான பொருளாதார ஆலோசகருமான L I. அல்பால்கினுக்கும் காம்சோமால்ஸ்கயாபிராவ்தாவின் வர்ணனையாளரான அலெக்சாண்டர் அஃபனஸ்யெவிற்கும் இடையில் நடைபெற்ற கருத்து பரிமாற்றம் கோர்பச்சேவின் பரிவாரங்கள் உழைக்கும் வர்க்கம் மீது எவ்வளவு தூரம் வெறுப்பு கொண்டுள்ளது என்பதை விபரிக்கிறது.

குறிப்பிடத்தக்க இந்த பரிமாற்றத்தில் அஃபனஸ்யெவ் முதலாளித்துவ வியாபாரத்தை மீண்டும் கொண்டுவருவதற்கு சமுதாய ஆதரவு அவ்வளவாக கிடைக்கவில்லை என்று குறைபட்டு கொண்டார்.

கூட்டுறவுகளைதொடங்கஅனுமதியளிக்கும் புதிய சட்டங்களை பற்றி குறிப்பிடுகையில், அவர் ''கதவிற்கு மறு பக்கத்தில் முதலாளிகளும், தொழில்முனைவோரும் கூட்டம் கூட்டமாக தட்டிக் கொண்டிருப்பதாக நினைத்து நாம் அந்த அடைத்திருந்தகதவை உடைத்தெறிந்தோம். ஆனால் அதை ஒரு சில சென்டி மீட்டர் தள்ளி பார்த்தால், அங்குஅந்தமக்கள் இல்லாததைத்தான் காண்கிறோம்.'' என்று துக்கமாகக் கூறினார்.

'' மகிழ்ச்சியற்ற தனது சகாவுடன் சேர்ந்து இசக்கப்பட்டு, அல்பால்கின் ''அவைகள் இருக்கின்றன. ஆனால் வெகு சிலவே இவ்வளவு பெரிய நாட்டிற்கு மிகக் குறைந்த எண்ணிக்கையில் '' என்று கருத்து தெரிவித்தார். அவர், பின்னர் ''நாம் தேர்ந்தெடுத்து உள்ள பாதையில் நடைபோட, எவ்வளவு காலம் தேவை என்பதையும், என்னென்ன வழிகள் தேவைப்படுகின்றன என்பதையும், சேர்ந்து நாம் கவனிக்க வேண்டும்: உயிர் நாடியான சமூகப்பிரிவுகள், மற்றும் நிலத்தை மீண்டும் தூக்கி நிறுத்த முனையவேண்டும்....... முக்கியமாக மக்கள்.. — ஒரு கலாச்சாரப்பிரிவு இது 'மாற்றம்' என்ற காற்றில் அடித்து இறையப்பட்டு விட்டது. நாம் பரவலான கல்விமுறை, சமுதாயத்தின் அடுத்து பகுதியிலும் விவசாயி முதல்விரிவுரையாளர் வரை, பரவலான கலாச்சார முறை கிடைக்கசராசரிதிறமைகளுக்கு மேலாக இருப்பதற்கு எதிராக, காலங்காலமாக ஆரோக்கியமற்ற உள்ளுணர்வின் மேல் நிறுவப்பட்ட வாழ்கைக்கு எதிராக தேவைக்கும் அதிகமாக நீண்ட காலமாக போராடி விட்டோம்.''

ரஷ்யப் புரட்சியிலிருந்து தப்பியோடி அமெரிக்காவில் முதலாளித்துவ தனி நபர் வாதத்தின் கம்யூனிச விரோத குருவாக செயலாற்றும்)அயன் ரான்டால் தொகுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தப் மிற்போக்கு தனிமொழியால் ஈர்க்கப்பட்ட அபனஸ்யெவ் சோவியத்யூனியனின் சாதனைகள் குறித்து தனது அதிருப்தியை வெளிபடுத்தினார்: '' இன்னும் சுமார் 20 வருடங்களில், எவ்வித சந்தேசத்திற்கும் இடமில்லாமல், நமது உறுதியான வெற்றிகள் நாகரிகத்தின்கழிவு எனபதைத் தவிர வேறுஎதுவும் இல்லை என்பது நமக்கு புரியத் துவங்கும் ''.

'' இதற்கு ஒரே ஒரு தீர்வு தான் இருக்கிறது'' என்று அல்பால்கின் அபனஸ்யெவ் விடம் கூறினார் மேலும் அவர் கூறியதாவது ''முழுதும் வேறுபட்ட லட்சக்கணக்கான டணியாட்கள் தேவை. எப்படி இருந்தாலும் இது வெட்கக் கேடானது. ரஷ்யா திறமையான கைத்திறனாளர்களுக்களுக்கும் உடமைகளை நிர்வகிக்கிற உணர்வுள்ள மக்களுக்கும் பெயர் போனது; ஆனல அங்கே திறமையான கைத்திறனாளர்களையும் உடமைகளை நிர்வகிக்கிற உணர்வுள்ள மக்களையும் கொண்ட ஒரு சமூகத் தட்டு இல்லை. மிகப் பரந்து பட்ட அளவில் தரம் என்டதே இல்லை. நான் இங்குபொருளாதார நிபுணர்கள், நிதி வல்லுனர்கள் மற்றும் மேலாளர்களையும் கூட குறிப்பிடுகிறேன்''.

பின்னர்அபனஸ்யெவ் தனது கசப்புணர்ச்சியை இவ்வாறு வெளியிடுகிறார். '' இந்தச் சண்டைகள், இந்ததிட்டமிட்ட பறிமுதல்கள் மிகத் துல்லியமானநாட்காட்டியைப்போன்று கடந்த வருடத்தில் ஏற்பட்ட காயங்கள் ஆறும் முன்பு மீண்டும் அதனைத் திறக்கின்றன. டேர் கம்யூனிச காலகட்டத்தில் போது முடுக்கி விடப்பட்ட '' இயந்திரம் '' இன்னும் மிக அரிதான இடைபதித்தலுடன் காலம் தவறாது அது தோன்றியவாறாக உடமையை நிர்வகிக்கும் மனோ பாவத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் போது ஒருவர் எவ்வாறு சமூக வார்ப்பை தட்டி எழுப்புவது பற்றி பேச முடியும்? ''. ஒரு இயந்திரத்தை எதிர்கொள்ள மற்றொரு இயந்திரத்தால் தான் முடியும்''என்றுஅல்பால்கின் பதிலிறுத்தார். ஆனால், அந்தோ! இந்த அமைப்பு வெறும் நிர்வாக இயந்திரம் மட்டும் அல்ல, கோடிக்கணக்கான மக்களின் தொழிலாளர்கள், கூட்டுப்பண்ணை விவசாயிகள், வேளாண்மை பொருளாதார வாதிகள், பொறியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும்நிர்வாகத்தினர் மத்தியில்வளர்ந்துவிட்ட ஒரு சிக்கல் நிறைந்த உறவாகும் நிர்வாகத்தினரை நான் வேண்டுமென்றே கடைசியில் போட்டுள்ளேன், அதுதான் சரி எப்படி இருந்தாலும் பரந்து பட்ட சமுதாயஆதரவில்லாமல் சக்தி வாய்ந்தபிரமாண்டமான சமப்படுத்தும் உளவியலில் தனமில்லாமல், பழமை வாதம் மேல் மட்டத்தில் வெகு காலம் நீடித்திருக்க முடியாது''.

பின்னர் அபனஸ்யெவ்அடித்துக் கூறினார். '' ஒரு சித்தாந்தம் உளவியலாக உருமாறி உள்ளது'' '' இந்த உட்பார்வையினால் பெரிதும்கவரப்பட்ட அல்பான்கின் இந்தச் சொற்களை எதிரொலித்தார், '' ஒரு சித்தாந்தம் உளவியலாக மாறியுள்ளது''.

நாட்டை விட்டோடிய இரு பிரபுக்கள் காலியான புட்டிகளுக்கு முன் உட்கார்ந்து போதையுடன் சோகக்கதைகளைபரிமாறிக்கொள்ளுவதைப் போல் பெரஸ்த்துரோய்காவிற்காக பேசும் இரு முன்னணி பேச்சாளர்கள், வயதான ரஷ்யத்தாயின் தலைவிதி குறித்தும் அதன் இழந்துபோன திறமையான கைத்திறனாளர் மற்றும் உடமையை நிர்வகிக்கும் உணர்வு குறித்தும் புலம்பினர். இறுதி முத்தாய்ப்பாக உண்மையான பிரச்சனை ரஷ்ய மக்கள்தான் என்று அவர்கள் முடிவுக்கு வந்தனர். அக்டோபர் புரட்சியின் லட்சியங்கள் அவர்களின் ஆழ்மனத்தில் ஊடுருவியுள்ளனர். அவர்கள் முதலாளித்துவத்தின் 'சமூக வார்ப்பு' மீண்டும் உதிக்கஅனுமதிக்க மாட்டார்கள், இது பெரஸ்த்ரோய்க்காவின்கறுப்பு நூற்றுவர் சித்தாந்தத்தை கிளர்ந்தெழச் செய்கிற கம்யூனிசஎதிர்ப்பைதூண்டி விடுகிற மனநிலை திரிந்த கருத்துப் பரிமாற்றமாகும். தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக மிகப் பிரமாண்டமான அளவில் வன்முறையை ஏவும் அமைப்பு பெரஸ்த்ரோய்க்கரவின் எதிர்ப்புரட்சிக் குறிக்கோள்களை அடைய தேவைப்படும் நாள் தொலைவில் இல்லை என்பதை அதிகாரத்துவம் அங்கீகரித்து உள்ளது என்பது இந்தவிவாவதத்தில் கவனிக்கப்பட்டது. அந்த இரு குறிக்கீட்டாளர்களும் ஒப்புக்கொண்டபடி: ஒரு இயந்திரத்தை எதிர்கொள்ள ஒரு இயந்திரத்தால் தான் முடியும்''. (தொடரும்)

# இந்திய - இலங்கை ஒப்பந்தம்

★சென்ற இதழ் தொடர்ச்சி

-நந்சிங்

இத்தொடரின் முற்பகுதியில் அமெரிக்கா பிரதிநிதிகள் சபையின் துணைக்குழுவின் தலைவரான ஸ்டீபன் சோலாஸிடம் இருந்து நாம் மேற்கோள் காட்டியது இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரதான தூண்டுதலாளர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளே என தீர்க்கமாக நிரூபிக்கின்றது.

இது 1947 ஏகாதிபத்திய உடன்பாட்டின் மூலம், ஏகாதிபத்தியம் நியமித்துச் சென்ற, இந்தப் பிராந்தியத்தின் போலீஸ்காரன் பாத்திரத்துடன் முழுமையாகப் பொருந்துமாறு செய்யப்பட்டதாகும், இந்திய முதலாளித்துவம் பலவீனமாக இருந்ததால். இந்த எதிர்ப்புரட்சிகர பாத்திரத்தை போலியான 'ஏகாதிபத்திய எதிர்ப்பு' மற்றும் மூர்போக்கு முகமூடியை அணிவதன் மூலம் தொடர்ந்து மறைத்து வருகிறது

அபிவிருத்தியடைந்து வரும் ஏகாதிபத்திய நெருக்கடியானது, போருக்குப் பிந்தைய கால உடன்படிக்கையை மேலும் மேலும் ஆட்டம் காணச் செய்வதோடு இந்திய முதலாளித்துவத்தினது எதிர்ப்புரட்சிகர பாத்திரத்தைமேலும் மேலும் அப்பட்டமாக்கி வருகிறது.

1971ல் பங்களாதேசத்தில் இந்திய முதலாளித்துவத்தின் தலையீடானது. இந்த வளர்ச்சிப் போக்கில் ஒரு தீர்க்கமான அம்சமாகும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் இலங்கைப்பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், 1971ல் பங்களாதேஷில் இந்திய முதலாளித்துவத்தின்எதிர்ப்புரட்சிகர பாத்திரத்தை அம்பலப்படுத்துவதன் மூலம் இந்திய முதலாளித்துவத்திற்கு எதிரான பாட்டாளி வர்க்க சுதந்திரத்தினை மீண்டும் உறுதிப்படுத்தியது,

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தோழர் கீர்த்திபால சூரிய பிரகடனப்படுத்தியதாவது. ''இந்திய அரசாங்கத்தின் தலையீடானது. எதிர்ப்புரட்சிகர ஒன்றாகும், பங்களாதேஷ்போராட்டத்திற்கு ஆதரவளித்தல் என்று நயவஞ்சக பறைசாற்றிக் கொண்டு அழமாய்அபிவிருத்தி அடைந்து வரும் ஒன்றுபட்ட புரட்சிகர வங்கத்தினை அழித்து கிழக்கு எல்லையோரத்தில், பொம்மை ஆட்சியை உடைய வீரியமற்ற பங்களாதேஷினை நிறுவுவதற்காகும். (போர்த் இன்டர்டேஷனல், மறு பிரசுரிப்பு மார்ச் / 1987 பக்கம் 60).

நான்காம் அகிலத்தின் அனைதுலககுழுவின் மைய தலைவர்களாக முன்னர் இருந்தவர்களும், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் பிரிட்டிஷ் பகுதியான,அப்போதைய S. L. L. ன் தலைவர்களான ஜி. ஹீலி, எம். பண்டா, மற்றும் C. ஸ்லாற்றர் ஆகியோர் நா. அ. அ. குழுவிற்குள் பு. க. க.வின் நிலைப்பாட்டை விவாதிப்பதற்கு மறுத்ததன் மூலம், இந்திய முதலாளித்துவத்தின் எதிர்ப் புரட்சிகரபாத்திரத்தை சரியாக மூடி மறைத்தனர். இந்திய முதலாளித்துவத்தின் துரோகத்தை பாதுகாக்க பண்டா கூறியதாவது :

''இந்திய முதலாளித்துவ அரசு பங்களாதேஷிற்கு இராணுவம் மற்றும் பொருளாதார உதவி அளிப்பதற்கு நாம் விமர்சனத்துடன் கூடிய ஆதரவை வழங்குகிறோம்''. பண்டா புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்திற்கு விடுத்த கடிதத்தில் மேலும் கூறுகிறார். '' கிழக்கில் பாக்கிஸ்தான் தோல்வி அதன் பின் பங்களாதேஷில் என்ன நடந்தாலும் இதுஉலக ஏகாதிபத்தியத்திற்கு ஒரு தோல்வியாகும். (அதே.... பக் 36).

16 வருடங்களுக்குப்பின்னர் இப்போது இந்திய முதலாளித்துவம் சிறீலங்காவில்இராணுவரீதியாகத் தலையீடு செய்து உள்ளது. எதிர்ப் புரட்சிகர மற்றும் துரோகமான தாக்குதல்களுக்கு கொஞ்சம் கூட குறைவானதல்ல. இதற்கு அவர்கள் ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தைக்காத்தல் என்ற பொய்யான சாக்குகளைப் பயன்படுத்தினர். 'யாகியாகானிடமிருந்து பங்களாதேஷ் மக்களைக் காப்பாற்றல்'' என்று 1971ல் கோரியதைப் போல், இப்பொழுது அவர்கள் ''ஜெயவர்த்தனே துருப்புக்களிடம் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாத்தல்'' எனும் பாசாங்கைப் பயன்படுத்துகின்றனர்.

ஆனால் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூன்று மாதத்திற்குள், அவர்கள் ஜெயவர்த்தனே தொடுத்ததாக்குதல்களை விட மிசக் காட்டு மிராண்டித்தனமாக தாக்குதல் தொடுத்து ஆயிரக்கணக்கில் தமிழர்களை கொன்று குவித்ததுடன்,யாழ்ப்பாண நகரையே அழித்து பெரும் மக்கட்தொகுதியினரை வீடற்றவர்களாக ஆக்கியதன் மூலம் அவர்கள் தங்களுடைய எதிர்ப்புரட்சிகர பாத்திரத்தை வெளிப்படுத்தினர். ஏறக்குறைய ஒரு வருடம் கழித்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தினைத் தொடர்ந்து தாக்கி வருவதுடன், சாவு எண்ணிக்கை 2,500க்கும் மேல் அதிகரித்துள்ளது. அதுவும் அதிகாரப்பூர்வ தகவலின்படி.

### ஒடுகாலிகளின் இரட்சிப்பு

மக்களைப் பாதுகாக்க உறுதிபூண்டிருப்பதாக, மக்களின் மேல் கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டு மிராண்டித்தனமான அவர்களின் இராணுவ ஒடுக்குதலில், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குஎதிரான தேசங்களது நடவடிக்கை என்று 1971ல் நடித்ததைப்போல நடிப்பது கடினம் என்று இந்திய முதலாளித்துவம் கண்டுகொண்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முழு ஆதரவுடனேயே இந்தியத் தலையீடானது என்பது, எள்ளளவும் சந்தேகத்திற்கு இடமில்லாமல், நாம் இந்தக் கட்டுரையின் சென்ற தொடரில் மேற்கோள்காட்டிய சபையின் துணைக்குழுவின் விவாதத்தில் நிரூபிக்கப்பட்டு உள்ளது.

எப்படி ஸ்டாலினிஸ்டுகளும, சமசமாஜ சீர்திருத்தவாத துரோகிகளும தொழிலாளவர்க்கத்திற்குள் இருந்து கொண்டு, இந்திய முதலாளித்துவத்தின் குற்றத்தைமறைப்பதில் இந்திய முதலாளித்துவத்துடன் ஆற்றிய முக்கியத்துவம் பற்றி நாம் இதற்கு முன்னர் தொடக்கத்தில் விவரித்திருந்தோம்.

இது போதாதென்று, இந்திய முதலாளித்துவத்திற்கு நவசமாஜக்கட்சி முதல் சிறிலங்காவில்பப்லோவாதிகளின் பிரதிநிதியாக தலைமை வகிக்கும் சோசலிச ஐக்கிய முன்னணி வரையிலான பல்வேறு வண்ணங்களிலான மத்தியவாதிகள் இந்திய முதலாளித்துவத்திற்கு ஆஜரானார்கள்.

உலகக் கட்சியின் மேல் ஹீலி, பண்டா, ஸ்லோட்டர் ஆகியோர்செலுத்தியசந்தர்ப்பவாத மேலாதிக்கத்தை, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் பெரும்பான்மை முறியடித்த பின், 1985–86ல் நான்காம அகிலத்தின் அனைத்துலகக் குழுவிலிருந்து முறித்துக்கொண்டு வெளியேறிய இவர்கள் மீண்டும் ஒருமுறை இந்த கொலைகார வேலையைப் பாதுகாப்பதில் முன்னணியில் நின்றார்கள், ஆனால் இந்த வேலை அவர்களால் தங்களது கழ்வசுற்றும் வேலையை மறைவாகச் செய்யமுடியவில்லை. அவர்களது கேடான அயோக்கியத்தனங்கள், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் நனவுபூர்வமான போராட்டத்தினால் அம்பலப்படுத்தப்பட்டதனால், அவர்களால் சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் குரலை அமுக்கமுடியவில்லை. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவில் பிளவானது, அவர்களது முகமூடியைக்கிழித்து எறிந்தது இந்த ஜாலவித்தைக்காரர்களின் தசாப்தகால பாசாங்குகள் முடிவுக்கு வந்தன. சிறிலங்காவில் இந்திய முதலாளித்துவத்தைப் பாதுகாக்க பலதரப்பட்ட கூட்டத்தை அணிதிரட்டியவர்களுள் மிகவும் அருவருக்கத்தக்கவர் எட்மண்ட் சமரக்கொடியாவார். அவர் சிறிலங்கா தொழிலாள வர்க்க இயக்க வரலாற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட தீர்க்கமான கட்டத்தில் மிகக்கேவலமான பங்காற்றிய முதிர்ந்த திருத்தல்வாதியாவார்.

### சமரக்கொடியின் துரோகப்பங்கு

தமிழீழவிடுதலைப்போராட்டத்திற்கும் பு. க. கவிற்கும் எதிரான சதித்திட்டம் இறுக்கமாகும்போது, அதனை அம்பலப்படுத்தும்வேளையில் சமரக்கொடி தனது சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் வெளியிடும் விசடத்துணுக்கு வெளியீட்டுடன் வந்து, சர்வதேச திருத்தல்வாத வட்டாரங்களில், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை தாக்குவதற்கா அவற்றை விநியோகித்தார். இது 1987 ஜூன் துவக்கமாகும். அதாவது ராஜீவ்காந் தமிழ்விடுதலைப்போராட்டத்தை ஒடுக்க ராணுவத்தை செய்வதற்கான தயாரிப்ட் யாழ்தீபகற்பத்திற்குஉணவு

படிப்பகம்

www.padippakam.com



# இந்திய - இலங்கை ஒப்பந்தம்.

— நந்சிங்

பொட்டலங்கள் போட்டபொழுதாகும்.

இந்த ஒத்திகையின் மூலம் இந்திய முதலாளித்துவம் ஒரே கல்லில் இரண்டுமாங்காய்களை வீழ்த்த விரும்பியது. (i) தமிழ் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான இந்தியத் தலையீடு ஏகாதிபத்திய நகல்திட்டத்தை கொண்டது என்பதை ஏற்க மறுத்த ஜெயவர்த்தனேமந்திரி சபையிலுள்ள பிடிவாதப் போக்குடையபிரிவினரிடம், இந்தியத் திட்டங்கள் ஏகாதிபத்தியத்தின் முழு ஆதரவைப் பெற்றவை என்பதைப் பதிய வைத்தல் (ii) 'தருமசிந்தனை' என்ற பாசாங்கு செய்வதின் மூலம், தமிழ் தேசியஇனத்திற்கு எதிராக உண்டுபண்ணப் பட்ட எதிர்ப்புரட்சிகர வேலைத்திட்டம் சம்பந்தமாக தமிழ் தேசிய இனத்தையும், தொழிலாள மற்றும் ஒடுக்கப்படும் மக்களையும் ஏமாற்றல்,

மீண்டும் ஒருமுறை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இதனை இந்திய முதலாளித்துவத்தின் பிற்போக்குத் தலையீடு என சரியான்வாறு கண்டித்தது.

**உண்மையில்,** தமிழ் விடுதலைப் போராட்டத்திற்கான மனிதாபிமான உதவி என்று கூறப்படுவது, ராஜிவ்காந்தி— ஜெயவர்த்தனே ஒப்பந்தத்திற்கு இரு மாதங்களுக்கு முன்பும் யாழ்ப்பாணத்தில் இந்தியஇராணுவத்தின்காட்டுமிராண்டித் தாக்குதலுக்கு 5 மாதங்களுக்குமுன்னருமாகும். அதுவே இப்பொழுது தமிழ்ப் பிரதேசம் முழுவதும் கொலை, கற்பழிப்பு, சூறையாடல் போன்றவற்றை ஏற்படுத்தியதுடன், மக்கள் தொகையில் ¾ பகுதியினரை வீடு, வாசல்களை இழக்கச் செய்தது, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் விடுத்த எச்சரிக்கையினை ஊர்ஜிதம் செய்கிறது.

இந்த சூழ்நிலையில் இது கூடிய முக்கியத்துவத்தைப் பெறுவதாக இருக்கிறது. இந்த வேளையில் ஏகாதிபத்திய ஏஜெண்டுகளான ஸ்டீபன் சோலாஸ் உட்பட, தமிழ் ஈழ தேசத்தின் மீது இந்திய முதலாளித்துவ ஒப்பந்தத்தைத் திணிப்பதற்கு ஓடி ஆடி ராஜதந்திர வேலையில் ஈடுபட்டனர்.

யாழ் தீபகற்பத்தில்இந்தியா உணவுப்பொட்டலம்போட்டது தொடர்பான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் நிலைப்பாட்டைப்பற்றி எட்மண்ட் சமரக்கொடி கூறியதைப் விரிவாகப்பார்ப்பது மிக முக்கியம் வாய்ந்ததாகும். அவர் கூறுகிறார் : ''புரட்சிகர மார்க்சிஸ்டுகளாகக் கோரிக் கொள்பவர்கள் 'விடுதலைப் போராட்டத்தில் தமிழ்ப்போராளிகள் ஈடுபட்டிருக்கையில், அவர்கள் நலனுக்காக இந்திய முதலாளித்துவம் செயல்படும்போது. இந்திய முதலாளித்துவத்தின் தலையீட்டை எதிர்க்கக் கூடாது''.

இருந்தபோதிலும் ந. ச. ச. க. மற்றும் ஸ்டாலினிச கட்சித் தலைவர்களான போலி மார்க்சியவாதிகள்சிங்களஇனவாதத்திற்கு சரணாகதி அடைந்தனர். அவர்கள் இந்திய நடவடிக்கை தொடர்பாக அனுமதிப்பதற்கு அல்லது மறுப்பதற்கு' வெளிப்படுத்திக்கொள்ள அவசரப் பட்டார்கள். அவர்கள் பிற்போக்குத் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்தியா வான்வழியாக உணவுப் பொட்டலத்தைப் போட்டதைக் கண்டிக்கும் பொழுது, அவர்கள் சிங்கள இன வாதத்திற்கு அடிபணிந்ததை, தோழர் கீர்த்தி பாலசூரியாவும், பு. க. க தலைவர்களும் விரிவாக விளக்கிக் கூறினார்கள்''.

இந்திய முதலாளித்துவத்தின் நடவடிக்கைகளை ஆதரிக்குமுகமாக, சமரக்கொடியால் 1971 நிகழ்ச்சிகளை உதவிக்கு அழைத்துக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் தலைமையில் அப்பொழுதிருந்த ஓடுகாலிகள், பங்களாதேஷில் இந்தியத்தலையீடு தொடர்பான பு. க. கவின் நிலைப்பாட்டை வெளியிடாதவாறு தடுத்து விட்டார்கள்.

''1971ல் பங்களாதேஷ் விடுதலைப்போராட்டத்தின் போது, முஜீபுர்ரஹ்மான்மற்றும் கிழக்குப்பாக்கிஸ்தானின் அவாமி லீக் கட்சித் தலைவர்களின் வேண்டுகோளின் பேரில், இந்திய அரசாங்கம் கிழக்குப் பாக்கிஸ்தானுக்கு படைஅனுப்பிய பொழுது சொன்னதைப் போன்ற கட்டுக்கதையையே கீர்த்திபாலசூரியா கூறுகிறார்'' என்றார் சமரக்கொடி.

**இக்கடைசிப்பகுதி,** பிரிட்டன் தொழிலாளர்கள் புரட்சிக்கட்சியை வழிநடத்தி சென்றவர்களும் 1985-86ல், உலக டிராட்ஸ்கிஸ இயக்கமான, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவில்இருந்து பிரிந்து சென்றவர்களுமான மைக்கேல் பாண்டா, கிளிஃப் சுலோட்டர் மற்றும் ஜெர்ரி ஹீலி ஆகிய ஓடுகாலிகளின் பங்கு பற்றி ஆராய்கிறது.

பங்களாதேஷில் இந்தியத் தலையீடு குறித்தும், அதற்கு எதிராகபுரட்சிகரகம்யூனிஸ்ட் கட்சியின தெளிவான பாட்டாளி வர்க்கப் புரட்சிகர நிலைப்பாடு குறித்தும் முன்பே குறிப்பிட்டு இருந்தோம். 1971ல் இந்திய பூர்ஷ்வாவடம் சரணடைந்த பண்டாவைக் குறிப்பிட்டு 1987 இந்திய ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த எட்மண்ட் சமரக்கொடி முயல்வதுகுறிப்பிடத்தக்கது. 1987 தமிழ் ஈழம் 1971 பங்களாதேஷின் வரலாற்றுத் தொடர்ச்சியை பிரதிநிதித்துவப் படுத்துகிறது.

இவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும, இத்துணைக்கண்டத்தில் ஏற்கனவே நிலையற்று இருக்கும் தேசிய முதலாளித்துவத்தின் ஆட்சியை நிலைகுலையச்செய்யக்கூடிய, நீண்டகாலத்திட்ட விடுதலைப்போராட்டத்தை தடுக்க, ஏகாதிபத்தியங்களுக்காக இந்திய முதலாளித்துவவாதிகள் திட்டங்களில் இறங்கினர். இவ்விரண்டுசமயங்களிலும் திரிபுவாத, ஸ்டாலினிச, திருத்தல்வாத பண்டா போன்ற சக்திகள், இந்திய ராணுவத் தலையீட்டை நியாயப்படுத்த அதற்கு போலியான ஏகாதிபத்திய எதிர்ப்பு மூலாம் பூசி உதவினர்.

ஆனால் தமிழ் ஈழத்தில் இந்தியத்தலையீடு, இந்திய முதலாளித்துவ வாதிகளுக்கும், அதன் உதவியாளர்களுக்கும் ஒரு பேரிடியாக மாறியுள்ளது. மக்களிடம் ஓரளவு மதிப்பு பெற்றிருந்த முஜிபுர் ரஹ்மான் போன்ற ஒரு பிரதிநிதி பங்களாதேஷில் இருந்ததுபோல் இல்லாமல், தமிழ் விடுதலைப் போராட்டத்தில் இருந்த சீர்திருத்த வாத முதலாளித்துவக் கட்சியான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, ஏற்கனவே தன் செல்வாக்கை அறவே இழந்து விட்டிருந்தது.

மக்களிடம் செல்வாக்கு பெற்றிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டனர். ஆனால், தங்களது ஆக்கிரமிப்பாளர்களை எதிர்ப்பதில்ஈழத்தமிழ்மக்கள் காட்டிய மூர்க்கத்தினால், தமிழீழ விடுதலைப் புலிகளால், இந்திய ஆளும் வர்க்கத்தின் நல்லநோக்கம்குறித்துமாயையான கருத்துக்களைக் கொண்டிருந்தபோதிலும், தங்களது ஆயுதங்களைக் கீழே போட ஒப்புக்கொள்ள முடியவில்லை. இந்திய முதலாளித்துவத்தின் மீதான தங்களது நம்பிக்கையை அப்படியே தக்கவைத்துக் கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களதுகாலைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு இருந்தனர்.

இதனால் இந்திய முதலாளித்துவத்திற்குதற்போதைய தாக்குதல் அவசியமாகப் போய்விட்டது. இது இந்திய ஆளும வர்க்கத்தின் எதிர்ப்புரட்சி குணாம்சத்தையும், திரிபுவாதிகள் மற்றும ஒடுகாலிகளின் இரட்டைவேடத்தையும் தொலுரித்து காட்டியது.

பண்டாவின் 'புதிய கண்டுபிடிப்பான சிறிலங்கா நண்பர் சமரசக்கொடி, இந்திய முதலாளித்துவம் சிறிலங்காவில் நடத்த தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கும் படுகொலையை மூடிமறைக்க, 1971ல் பண்டா அருளிய வேதவாக்கை மேற்கொள் காட்டிக் கொண்டிருக்கும போது. பண்டாவும், டோரன்ஸூம், தமிழ் விடுதலைப் புலிகளுக்கு தங்கள் ஆதரவை அளிக்கும் போர்வையில், அதன் தன்மையை வெகு அருகில் அணுகினர். அவர்கள் தேசிய பூர்ஷ்வாக்களின் முற்போக்கு குணாம்சத்தை பற்றி பொய்கள் புனைந்து, இந்திய முதலாளித்துவக் கழுதகளிடம் தமிழீழ விடுதலைப் போராட்டம் கொண்டிருந்த மாயைக்கு பலம் சேர்த்தனர்.

இந்த கொடுமையான காரியத்தில் கிளிஃப் சுலோட்டரின பங்கும் உண்டு. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுடனும், தமிழ் விடுதலைப் போராட்டத்தின் இதர தலைவர்களின் வெளிப்படையான ஆதரவுடனும், இந்திய இராணுவம் யாழ்ப்பானத்தில் தோண்டிக் கொண்டிருக்கையில். கிளிஃப் சுலோட்டர், இந்திய முதலாளித்துவம் தமிழ் மக்களுக்கு தேவையான அளவு கொடுக்கவில்லை என்பதுதான் சிக்கல் என்று, ஈழம் மற்றும் சர்வதேச தொழிலாள வர்க்கத்திடம் கூறிக்கொண்டிருந்தார்.

அவர் என்ன கூறினார் என்பதை அவதானிப்போம் : தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை விட்டுவிட்டால் கூட இதுதமிழ்சுயாட்சிக்கும் வெகு கீழே உள்ளது; ஆனால் தமிழ் நிலங்களை இராணுவம் விழுங்கி அதில் சிங்களர்களை குடியமர்த்துவது தடுக்கப்படுகிறது. அதே சமயம் கொள்கையளவில் தமிழர்களின் உரிமை ஏற்றிருப்பினும் உண்மையில் இந்தியதுருப்புகளின் இருப்பு சிங்கள பிற்போக்கின் இன வெறியர்கள் மற்றும் புத்த பிக்குகளின் தலைமையில் ஒரு வன்முறையான எதிர் வினையை தோற்றுவித்துள்ளது. (Workers Press Aug. 8, 1989, No 86)

இந்தியத் தலையீடு அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்டது ) என்று நாம் : முதல் கட்டுரையில் பார்த்தோம் இந்தத் தலையீடு துவங்கிய 80 நாட்களுக்குள் தமிழ் மக்கள் கொலை செய்து - குவிக்கப்படும்போது பிற்போக்கான சிங்கள இன வெறியர்களின் எதிர்ப்பையும் மீறி. தமிழ் மக்களின் உரிமையை பாதுகாக்கவே அது உள்ளதாக Workers Press முழக்கமிடுகிறது.

இந்தியக் கொலையாளிகளின் கரங்களில்சிக்கிஆயிரக் கணக்கில் அநியாயமாக பலியாவது இந்த அப்பாவி தமிழ் மக்கள்தான். இந்தப் பொறுக்கிக் கூட்டங்கள் வகித்த பாத்திரம்மிகததெளிவானது; அனைத்துலகக்குழுவிலிருந்து பிரிந்து வந்த ஆறு மாதத்திற்குள், சுலோட்டரின் Workers Press, தனது சுதந்திரத்திற்காக போராடிக் கொண்டிருக்கும் அப்பாவியான, தவறிழைத்து விட்ட ஒரு நாட்டின் இரத்தத்தால் அபிஷேகம் செய்யப்பட்டது.

**இந்திய** ஆக்கிரமிப்பாளனுக்காக ஒப்பனை வேலை செய்து கொண்டிருந்தசமரக்கொடியின் இதழ் தனது முதல் பக்கத்தில், சமரக்கொடி தனது திருத்தல்வாத சகாக்களான, இத்தாலிய கோர் மற்றும வார்காவுடன் சேர்ந்து புரட்சிகர தொழிலாளர்கட்சியின் அனைத்துலக மறுஇணைப்பிற்கான அறைகூவலை ஏற்று, அதற்குபாடுபடுவதாக கூறியுள்ளார்.

சுலோட்டர், மரீனோவுடன் சேர்ந்து செய்த சதியை சரியான நேரத்தில், நான்காம் அகிலத்தின் அனைததுலகக் குழு தலையிட்டு நிறுத்தியது. 1987 மே 6ல் தொழிலாளர் புரட்சிக் கட்சி உறுப்பினர்களுக்கு, இந்த உருவாக்கம் பற்றி, வொர்க்கர்ஸ் லீக் என்ன சொல்ல நினைத்தது என்பதை நாம் நினைவு கூர்வோம்.

தொழிலாளர் புரட்சிக் கட்சி ஐக்கியமாகலாம்என்று தீர்மானித்திருந்த, லத்தீன் அமெரிக்காவிலுள்ள MASன் நம்பிக்கைத் துரோகம் குறித்து வொர்க்கர்ஸ் லீக் கூறியது. '' கடந்த மாதம் அர்ஜெண்டினாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள், MAS வுடன தொழிலாளர்புரட்சிக் கட்சியின் கமிட்டியின் அரசியல் பின் விளைவுகள் எவ்வளவு விபரீதமானவை என்பதை வெளிபடுத்திவிட்டது. ஒரு சில மாதங்களுக்குமுன்புதான், உங்களது புதிய அரசியல் சகா, கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸிற்கு வாழ்த்துக்களை தெரிவித்து அதன் ''தைரியத்தைப் பாராட்டி அதே சமயம் கம்யூனிஸ்ட்கட்சியுடன்தங்களது கூட்டு ஒருவித தவிர்க்க முடியாத ஆயுதமாக விளங்குவதாக பெருமைப் பட்டுக் கொண்டது ''

'' ஆனால் இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பு, ஒரு சில மணி நேரத்திற்குள்ளாக இந்தகூட்டைதிவாலாக்கியது எதிர்பார்த்தபடி, ஸ்டாலினிஸ்ட்கள், அரசிற்கு தங்களது விசுவாசத்தைஅதிகார பூர்வமாக அறிவித்து, பாசிச அதிகாரிகளுடன் அல்போன்சின் பேச்சு வார்த்தை நடத்துவதை ஆதரித்து உள்ளனர். இந்த வெளிப்படையான நம்பிக்கைத் துரோகம், மரீனோவாதிகள் ஸ்டாலினிஸ்ட்டுகளுக்கு நற்சாட்சி பத்திரம் வழங்கியவேளையில் நடந்தது. MASன் அரசியல் வழியை விமர்சிக்க இந்த உண்மையே போதுமானது. மக்கள் இயக்கத்திற்குள் நுழைகிறோம் என்ற போர்வையில், தொழிலாளர் புரட்சிக்கட்சி அர்ஜெணடினா மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் இழைக்கும் செயலில் நேரடியாக பங்கேற்றுக் கொணடிருக்கிறது.

வொர்க்கர்ஸ் லீக்கின் டிராட்ஸ்கிஸ்டுகள் மற்றும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினரால், ஈவிரக்கமின்றி தாக்கப்பட்ட இந்த நம்பிக்கைத் துரோகிகள் உலகெங்கும் உள்ள பிற்போக்குவாதிகளின் கேவலமான செயல்களைச் செய்து கொண்டு இருக்கின்றனர். 1987 அர்ஜெண்டினா - கலகமும், தமிழ் ஈழத்தில் இந்திய ஆக்கிரமிப்பும் இவர்களது வேஷத்தை கலைத்துவிட்டது.

இப்பொழுது ICFIலிருந்து தனியாகத் தொகுக்கப்பட்டுள்ள, ஓடுகாலிகளான ஹீலி, பண்டா டாரன்ஸ், சுலோட்டர் ஆகியோரின் தனிப்பட்ட நடவடிக்கைகள் எதுவாக இருந்த போதிலும், தெற்கு ஆசியாவிலுள்ளதிராயுதபாணியான மக்களுக்கு எதிரான எதிர்ப் புரட்சித்திட்டத்திற்காக தங்களுக்கு தாங்களே பாராட்டி கொண்டஏகாதிபத்தியங்கள் கேபிட்டல் ஹில்லிலுள்ள மாநாட்டு அறையில்கூடியபோது அதனுடன் அவர்களும் பங்கெடுத்துக்கொண்டனர்.

இதைநாம்எழுதிக்கொண்டு இருக்கும்போது, ஸ்டீபன் சோலார்ஸ், பர்மாவிலுள்ள அப்பாவி மக்களுக்குஎதிரான ஏகாதிபத்தியத்தின்சதிக்காக அங்கு பயணம்செய்துகொண்டிருக்கிறார். பர்மாவிலுள்ள அப்பாவி மக்களுக்குஎதிரான சதியை மூடி மறைக்க முற்போக்கான முதலாளித்துவம் என்ற போர்வையில், இந்த திரிபுவாதிகளை, ஏகாதிபத்தியம் உபயோகிக்கும்.

1985ன்பிளவாலும்அதற்கு பின்பு, திரிபுவாதத்தின் எல்லாவடிவங்களுக்கும்எதிரான நான்காம்அகிலத்தின் அனைத்துலகக்குழுவின், போராட்டத்தாலும் நான்காம் அகிலத்தின் குரல், தற்போது உலகெங்கும் உள்ள உழைக்கும் மக்களைச் சென்றடையும்.

'' உலக முதலாளித்துவச் சிக்கலின் புதிய சட்டம், தேசிய நாடுகளின் சார்புத் தன்மையின் குறிக்கோளில் உலக பொருளாதாரத்தின் வளர்ச்சியில்ஏற்படும் சீர்செய்யமுடியாத முரண்பாட்டினால், நிரப்பப்பட்டுள்ளது. இதுதான் உலக அளவில் உழைக்கும் வர்க்கம்புரட்சிகரமாகதிரண்டெழுவதற்கான உந்து சக்தி ........ நான்காம்அகிலத்தின் வரலாற்றின் ஒரு புதிய அத்தியாயம் துவங்குகிறது. இந்த முன்னோக்குடன் தீர்மானமாக இயங்கும் அனைத்துலக ஆர்வலர்களை ஒருங்கிணைக்க வேண்டிய பொறுப்பு நான்காம் அகிலத்தைச் சார்ந்தது ஆகும் வரப்போகும் உலகப் புரட்சியின்வெற்றிக்குஉழைக்கும் வர்க்கத்தைத், நான்காம் அகிலத்தின் கொடியின் கீழ் அணிவகுக்கச் செய்யவேண்டும். (Perspectives Resolution Aug 88 of I C F I).

1947ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளும், தேசியமுதலாளித்துவவாதிகளும் ஸ்டாலிஸ்டகளின்ஒத்துழைப்போடு நிறுவிய அரசியல் அமைப்பில் தோன்றியுள்ள ஆழமாகிக் கொண்டிருக்கும் விரிசல்களை, தமிழ் ஈழ நாட்டின் இரத்தத்தால அடைக்க பழுமுச்சோடு மேற்கொள்ளப்பட்டமுயற்சிதான, இந்திய-இலங்கை ஒப்பந்தம். இதை ஒட்டவைக்க ஓடுகாலிகள எவ்வளவு தான் முயன்றாலும், முதலாளித்துவத்தின் உலகச்சிக்கல், உளுததுக் கொண்டிருக்கும் இநத அமைப்பின் பிளவை மேலும் விரிசலாக்குகிறது.

இந்த உபகண்டத்தின்பாட்டாளி வர்க்கம் முழுவதும், நான்காம அகிலத்தின்கொடியின் கீழ் ஐக்கியப்பட்டால் தான், பாட்டாளி வர்க்கச் சாவாதிகாரம் இந்த உபகண்டத்தில் சாத்தியம். இதற்கு, இந்திய உபகண்டதில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும், நான்காம் அகிலத்தின பிரிவு ஒன்றைக் கட்டி எழுப்புவது மிகவும்அத்தியாவசியமாகும்.

(முற்றும்).

www.padippakam.com



# சோவியத் பத்திரிகையில் டிராட்ஸ்கியின் கடிதங்கள் வெளியீடு!

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் வளர்ச்சி கண்ட அதிகாரத்துவபோக்குகளையும் உள் கட்சி ஜனநாயகம் அதிகப் படியாக நசுக்கப்படுவதையும் விமர்சனம்செய்து கம்யூனிஸ்ட் கட்சியின் அனைத்து உள்ளூர் கிளைகளுக்கும் லியான்டிராட்ஸ்கி 8 டிசம்பர் 1923ல் எழுதிய கடிதத்தை சோவியத் யூனியனில் இளைஞர்களின் மாதப் பத்திரிக்கையான 'மொலடாய் கம்யூனிஸ்ட்' (Molodoi kommunist) வெளியிட்டு உள்ளது.

இது கடந்த 60 வருடங்களுக்கு மேலாக முதன் முதலில் வெளியிடப்படும் டிராட்ஸ்கியின் முக்கியமான அரசியல் வேலையாகும். இந்தவெளியீடு ஸ்டாலினிச ஆட்சியின் ஆழமாகிச்செல்லும் நெருக்கடியின் பிரதிபலிப்பையும், டிராட்ஸ்கியின் எழுத்துகள் சம்பந்தமாக பொதுமக்கள் மத்தியில் இருக்கும் ஆர்வத்தையும் நசுக்க அது இயலாது இருப்பதையும் எடுத்துக்காட்டுகிறது,

இந்த உண்மை மேலும் நிருபிக்கப்பட்டது, அதாவது பரந்தளவில் விற்கப்படும் இளைஞர் வார இதழான கொம்சமோல்க்ஸ்கயா பிராவ்டா) (Komsomolskaya Pravda)



லியான் டிராட்ஸ்கி

அண்மையில் வரலாற்று அறிஞர் வி. பிலிக் உடன் நடத்திய நீண்ட பேட்டியை வெளியிட்டது. அதில் பிலிக் அக்டோபர் புரட்சியில் லெனினுக்கு அடுத்த மிகப்பெரும் தலைவர் என்று டிராட்ஸ்கியை பாராட்டியதுடன், அவரது அரசியல் வரலாற்றையும்விடாப்பிடியாக பேசினர்.

பிலிக்கின் அறிக்கைகள் சம்பந்தமாக பேட்டியாளர்வெளிப் படையான அவரது குரோதத்தை வெளிப்படுத்தியபொழுதிலும், அந்த இளைஞர்பத்திரிகை பேட்டியைபிரசுரிக்கதீர்மானித்தது. ஏனென்றால் டிராட்ஸ்கி ''என்ற பெயர் இன்றும் கூட இளைஞர்கள் மத்தியில் ஒரு ஆர்வம் மிக்க விவாதத்தை உண்டு பண்ணுகிறது''.

டிராட்ஸ்கியின் இந்தக் கடிதம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது சோவியத் அதிகாரத்துவத்திற்கு எதிரான வெளிப்படையான போராட்டத்தின் தொடக்கத்தை குறிக்கிறது.

1923ன் பிற்பகுதியில்பொருளாதார வேலைத்திட்டம் மற்றும் கட்சி அமைப்பு சம்பந்தமாக மத்திய குழுவினுள்ளும் அரசியல் குழுவினுள்ளும் ஒரு கசப்பான மோதல் ஏற்பட்டது சோவியத் ஆட்சியை ஸ்திரப்படுத்துவதில் புதிய பொருளாதாரக் கொள்கையின் தொடக்க வெற்றிகள் கட்சித் தலைமையின் பெரும்பான்மையினரால் விமர்சனம் இல்லாது வரவேற்கப்பட்டது அத்துடன் அது முதலாளித்துவ சந்தையின் தொடர்ச்சியான ஆதிக்கம், மற்றும் நகரங்களிலும் நாட்டுப்புறத்திலும் வளர்ச்சியடையும் முதலாளித்துவ சக்திகளின் அபாயம் பற்றிய டிராட்ஸ்கியின் கூர்மையான ஆய்வைகுரோதத்துடன் அணுகியது.

பொருளாதார திட்டமிடலை அறிமுகப் படுத்துவதையும், அரசு தொழிற்துறையின் நிலையை பலப்படுத்துவதையும் வலியுறுத்தி வந்த டிராட்ஸ்கி, புதிய பொருளாதாரக் கொள்கையின் (NEP) நீடிப்பினால் சோவியத் யூனியனுள் தொழிலாள விரோத சக்திகளின்பலம் அதிகரிப்பதற்கும், கட்சிஅமைப்புசீரழிவடைவதற்கும் இடையிலான உறவை உணர்ந்தார்.


1923 இலையுதிர் காலத்தில், தலைமையின் அதிகாரத்துவ முறைகளுக்கு எதிராக நேரடியான போராட்டத்தை அங்கீகரிக்கும் அடிப்படையில் கட்சி ராஜ்யத்தினுள் ஒரு முன்னேற்றத்திற்கும்டிராட்ஸ்கிபோராடினர். ஒரு குறிப்பிடத்தக்க அழுத்தத்தின் கீழ் அரசியல் குழுவின் பெரும்பான்மையினர் ஸ்டாலின், சினோவியேவ், காமனேவ் - கட்சித் தலைமையின் நடைமுறைகள் சம்பந்தமாக ஒரு ''புதிய பாதை''க்கு அழைப்பு விடும் தீர்மானத்திற்கு தயக்கத்துடன் ஆதரவளித்தனர்.

டிராட்ஸ்கியின் கடிதம் கட்சி ஊழியர்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி பீதியுற்ற இந்த மூன்று தலைவர்களும், டிராட்ஸ்கியை மதிப்பிழக்கச் செய்யும் நோக்கத்துடன் பொய்களையும். திரிபுகளையும் அடிப்படையாகக்கொண்டு இழிவான பிரச்சாரத்தை தொடங்கினர்.

65 வருடங்களுக்கு பின்பும் கூட டிராட்ஸ்கியின் டிசம்பர் 1923 கடிதம் சோவியத் தொழிலாள வர்க்கத்தின் மற்றும் அறிவு ஜீவிகளின் முன்னேறிய பகுதிகள் மத்தியில் மிக ஆழமான தாக்கத்தை உண்டு பண்ணும். இது டிராட்ஸ்கியை அரசியல்புனருத்தாரணம் செய்யவும், வரையறை இன்றி டிராட்ஸ்கியின் எழுத்துகள் அனைத்தையும் வெளியிடக்கோரும் கோரிக்கைகளையும் அதிகப்படுத்தும்.

## இந்தியா-சிறிலங்கா-தமிழ் ஈழத் தொழிலாளர்களின் சர்வதேச வர்க்க ஐக்கியத்தை பேணு!

★4ம் பக்கத் தொடர்ச்சி



ஜே. வி. பி. பாசிஸ்டுகளால் கொலைசெய்யப்பட்ட பு. க. க. தோழர் கிரேசனுக்கு மரியாதை செலுத்த சோசலிசத் தொழிலாளர் கழகம் பெரியார் திடலில் நடத்திய கூட்டம்

துவம் குட்டி முதலாளித்துவ ஸ்டாலினிசவாதிகளிடமிருந்து அரசியல் சுதந்திரத்துடன் தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டவும், விவசாயிகளின் ஆதரவுடன் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்காகவும் சோசலிசத் தொழிலாளர் கழகம் போராடுகிறது. இந்த சகாப்தத்தில் சுயநிர்ணய உரிமை உள்ளிட்ட தீர்க்கப்படாத ஜனநாயக கடமைகளை, சோசலிசப்புரட்சியுடன் ஒன்றிணைந்த ஒரு பகுதியாகவே வென்றெடுக்க முடியும்.

இந்திய முதலாளித்துவத்தின் 'நமது கௌரவத்தையும், பெயரையும், கொடியையும் பேண என்ற பேரினவாத வெறிச்சுக்கலுக்கு எதிராக மூர்க்கமாக போராடும்படி இந்தியாவிலுள்ள தொழிலாளர்களை சோசலிசத் தொழிலாளர் கழகம் அழைக்கிறது. இந்திய முதலாளித்துவத்தின் யுத்தத்திற்கு ஒரு அவுன்சு ஆதரவு வழங்கப்படுமாயினும்கூட அது தொழிலாள வர்க்கத்திற்கு அரசியல அழிவை கொண்டு வருவதுடன், அதன் மீது தாக்குதல்கள் தொடுப்பதற்கும் வழி வகுக்கும். ஆளும் இந்திய முதலாளித்துவ வர்க்கம் அதன் கௌரவத்தையும், கொடியையும் பேணுதல் என்ற சாக்கில் அதன் பிரதான எதிரியான இந்திய தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக அரசஇயந்திரத்தை பலப்படுத்தும். இந்தியத் தொழிலாள வர்க்கம், விலைவாசி ஏற்றத்திற்கும், ஆலை மூடல்களுக்கும், ஆட்குறைப்புகளுக்கும், தொழிற்சங்க உரிமைகள் மீதானதாக்குதல்களுக்கும் எதிராக நாடு பரந்த அளவில் போராட்டங்களுக்கு தயாராகிறது.

ஸ்டாலினிச சி.பி.ஐ.(எம்), சி.பி,ஐ. தலைமைகள் முதலாளித்துவ கட்சிகளுடன் உறவை துண்டித்து, சுதந்திரமாக காலவரை அற்ற பொதுவேலை நிறுத்தத்தின் மூலம் காங்கிரஸ் அரசாங்கத்தை தூக்கி வீசி, சோசலிச வேலைத் திட்டங்களையும் தீர்க்கப்படாத ஜனநாயக கடமைகளையும் நிறைவேற்ற சபதம் செய்யும் தொழிலாளர் விவசாயிகள்அரசாங்கம் அமைக்கப்போராடும்படி கோர வேண்டும் அந்த அரசாங்கம் அனைத்து அடிப்படை தொழிற்துறைகளையும், வங்கிகளையும் நஷ்டஈடின்றி தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கும் நிலங்களை தேசியமயமாக்கி ஏழை விவசாயிகளுக்கு பகிர்ந்து அளிக்கும் நாட்டுப்புற கடன்களை தள்ளுபடி செய்யும்; தமிழ் ஈழ தேசிய இனம் உள்ளடங்கலாக, உபகண்டத்தில் உள்ள ஏனைய அனைத்து ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யும்.

உபகண்டத்தில் ஏகாதிபத்தியம், தேசிய முதலாளித்துவம், மற்றும்ஸ்டாலினிசவாதிகளின் இணைந்த சூழ்ச்சிகளின் மூலம், திணிக்கப்பட்ட முறைதவறிய வகுப்புவாத அரசு அமைப்புகளை தகர்த்து எறிந்து, உலக சோசலிச குடியரசிற்கான போராட்டத்தின் பகுதியாக இந்திய உபகண்டத்தில் சோசலிச குடியரசுகளின் ஒன்றியம் அமைத்தல் என்ற முன்நோக்கில் சோசலிசத் தொழிலாளர் கழகம் போராடுகிறது.

சோசலிசத்தொழிலாளர் கழகத்தின் சர்வதேசிய வேலைத் திட்டத்துடன் உடன்படும் ஒவ்வொரு வர்க்க நனவுள்ள தொழிலாளியையும் போராளியையும், சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் இணைந்து சோசலிசப்புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின்குழுதியாக அதனைக் கட்டி எழுப்புமாறு அழைக்கிறோம்.

# சைதாப்பேட்டையில் தொழிலாளர்களுக்கு எதிரான பழிவாங்கல்களை தோற்கடி! தொழிலாளர்களை அணிதிரட்டு!

சைதாப்பேட்டையில் யூனிட் 28 டிவிசன் 139ல் பணிபுரியும் உசிரிபட்டி ராமையா, சின்னன் நரசையா ஆகிய இரு தொழிலாளர்களும், தொடர்ச்சியாக அதிகாரிகளினால் பல்வேறு விதமாக துன்புறுத்தப்பட்டு வருவதை எதிர்த்து போராட அனைத்து நட்புரத தொழிலாளர்களின் பலத்தையும் அணி திரட்டவேண்டும். தனது மேலதிகாரிகளின் சட்டங்களை மீறினர், அவரது மேலதிகாரியுடன் தன்னை முறையில் நடந்து அவமரியாதையான வார்த்தைகளை பேசினர் பாதுகாப்புக்குழு (செக்சேஷன்) தொழிலாளர்கள் அவர்களது வேலைகளை செய்ய விடாது தடுத்தார் என்ற பொய்க்குற்றச்சாட்டுகள்உசிரிபாட்டி ராமையா மீது சுமத்தப்பட்டு, 24-06-89ல் உ. ராமையாவை வேறு டிவிசனுக்கு இடமாற்றம் செய்யும் சார்ஜ்ஷீட்டை ஏற்றுக்கொள்ளுமாறு மேலதிகாரி (CI) உ. ராமையாவை பணித்தார். அப்போது தான் வேலையில் செய்ததவறு என்ன என்று விளக்கும்படி உ. ராமையா மேலதிகாரியை கேட்ட போது அதற்கு அவர் பதில் அளிக்க மறுத்ததுடன், அந்த இடத்திலிருந்து உ. ராமையா உடனடியாக வெளியேற மறுப்பின் அவரை காவல் நிலையத்தில் பிடித்துக் கொடுப்பேன் என்றும் மிரட்டினர். மேலும் ஜூன் 24இலிருந்து ஜூலை 23 வரை அவரது வழமையான வேலைகள் செய்வதிலிருந்து தடுத்து வைக்கப்பட்டார்.

அதன்பின் ஐக்கிய சங்கத்தின் தலையீட்டின் காரணமாக உ. ராமையா மீண்டும் ஜூலை 24 இலிருந்து வழமையான வேலையைத்தொடர அனுமதிக்கப்பட்ட போதிலும், ஜூலையில் 24 நாட்களும், ஆகஸ்டில் 10 நாட்களுமாக மொத்தம் 34 நாட்களுக்கான சம்பளம் பிடித்தம் செய்யப்பட்டு, பழிவாங்கப்பட்டார். இதுவரையிலும் அந்தச்சம்பளம் வழங்கப்படவில்லை. இது கார்ப்பரேசன் அதிகாரிகளின் பழி வாங்கும், பயமுறுத்தும் வேலை தொடர்ச்சியாக எடுத்துக் காட்டுகிறது.

அதேபோல் அதே டிவிசனில் பணிபுரியும் சின்னன் நரசையா என்ற தொழிலாளியும் தொடர்சியாக துன்புறுத்தப்பட்டு வருகிறார். வேலைக்கு வந்தாலும் ஆப்சென்ட் போடுதல், அதிக வேலை வாங்கல் மூலம் அதிகாரிகளினால் பழிவாங்கப்படுகிறார். தொடர்ந்து 4 மாதங்களாக, கைத்தறி துணி (கோஆப்டெக்ஸ்) வாங்கியதாக பொய் கூறி, ஒவ்வொரு மாதமும் அவரது சம்பளத்தில் 100ருபா பிடித்தம் செய்யப்பட்டதை சி. நரசையா மேலதிகாரிகளுக்கு முறையிட்ட பொழுதிலும் பலன் கிடைக்கவில்லை. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவர் மே மாதச்சம்பளம் வாங்காமல் விட்டார். அதற்கு அடுத்த மாதத்திலிருந்து 100 ருபா பிடித்தம் செய்யப்படுவதுநிறுத்தப்பட்டபோதிலும் அதற்கு முன்பிடித்தம் செய்தபணத்தையும், மே மாத சம்பளத்தையும் இதுவரை திருப்ப கொடுக்கவில்லை.

தொழிலாளர்களில் ஒருவர் மேல் தொடுக்கப்படும் தாக்குதல் அனைத்து தொழிலாளர்களின் மீதான தாக்குதலாகும். எனவே இத்தொழிலாளர்களின் பிடித்தம்செய்யப்பட்ட சம்பளப்பணங்களை உடனடியாக வழங்கக்கோரி - 139 டிவிசனைச் சேர்ந்த தொழிலாளர்களும் ஏனைய தொழிலாளர்களும் போராட வேண்டும். - ஆசிரியர் குழு

படிப்பகம்

# சென்னை துப்புரவு தொழிலாளர்களின் போராட்டம்!

12ம் பக்கத் தொடர்ச்சி

இன்று தொழிலாள வர்க்கத்தின் எந்த ஒரு பிரிவினரின் முக்கியமான கோரிக்கைகளையும் பூரணமாக வென்றெடுக்க நடத்தும் போராட்டம். முதலாளித்துவ சுரண்டல் அமைப்பை தூக்கி வீசி தொழிலாள வர்க்கத்தின்சர்வாதிகாரத்தின் மூலம் உழைக்கும் வர்க்கத்தின் தேவையின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட சோசலிசப் பொருளாதாரத்திற்காக போராட வேண்டியதன அவசியத்தையும் முன் வைத்துள்ளது. இதற்காக தொழிலாளவர்க்கத்தின் முழு வர்க்க பலத்தையும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் அணிதிரட்டி போராட, உலக டிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்டு இந்தியாவில் சோசலிசத் தொழிலாளர் கழகம் போராடுகின்றது. அதன் தொழிற்சங்கப்பிரிவான சோசலிசத் தொழிலாளர் அணி பின்வரும் வேலைத் திட்டங்களை வைத்து துப்புரவுதொழிலாளர்களை அணிதிரட்ட போராடுகின்றது.

1. வாரத்தில் இரு நாள் விடுமுறைக்கு போராடு!
2. முன் அறிவிப்பின்றி தற்காலிகவேலை நிறுத்தம்செய்வதை உடனே நிறுத்து!
3. ஏனைய தொழிலாளர்களுக்கு உள்ளது போன்று பண்டிகை மற்றும் தேசிய விடுமுறைகளுக்குபோராடு!
4. கால்நடைகள் மூலம் குப்பை அகற்றுவதை நிராகரி! மினிலாரிகளை பயன்படுத்து!
5. தற்காலிக தொழிலாளர்கள் அனைவரையும் நிரந்தரம் செய்!
6. வேலையின்போதுஉடல் நலகேடு ஏற்படாமல் தடுக்க மருத்துவவசதிகளை உறுதி செய்! அதற்கு அவசியமான அணிகளை (கையுறை, பூட்ஸ், மழைக்கோட்டு போன்றவை) வழங்கு!
7. அனைத்து தொழிலாளர்களுக்கும் வீட்டுவசதியை உறுதி செய்!
8. விலைவாசி ஏற்றத்திற்கு தகுந்தவாறு சம்பளஉயர்வுவழங்கு!
9. அனைத்து ஆலைகளையும் டெப்போகளையும், டிவிசன்களையும், வங்கிகளையும்தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரப்போராடு!
10. வேலைப்பளு அதிகரிப்பை தோற்கடி! வேலை அதிகரிப்புக்கு ஏற்ப புதிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்து!
11. அனைத்து விதமான லஞ்சத்தையும் ஒழி!
12. மேற்கூறிய கோரிக்கைகளுக்காகபோராட சென்னை மாநகராட்சி துப்புரவு தொழிலாளர்களை காலவரையற்ற பொதுவேலைநிறுத்தத்தில் இறக்கு!
13. அதற்கு ஆதரவாக ஏஐடியுசி, சிஐடியுவை மாநில அளவிலும், நாடுபரந்த அளவிலும் பொதுவேலை நிறுத்தத்தில் இறக்கு!
14. சிபிஐ(எம்), சிபிஐதலைமைகள்முதலாளித்துவ கட்சிகளுடன் உறவை துண்டித்து சோசலிச மற்றும் தீர்க்கப்படாத ஜனநாயக வேலைத் திட்டங்களை நிறைவேற்றப் போராடும் ஒரு தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கம் அமைக்க போராட நிர்ப்பந்தி!
15. 40 வருடங்களுக்கு மேலாகதொழிற்சங்கஜனநாயக நெறிமுறைகளைகொன்று தொழிலாளர்களை கோரமாக சுரண்டுவதற்கு உடந்தையாக செயல்பட்டு வருபவர்களை சங்கத்திலிருந்து வெளியேற்று!
16. உடனடியாக சங்க பொதுச் சபையை கூட்டி தேர்தலை நடத்து!
17. கழகத்தின் ஒவ்வொரு டிவிஷன் மற்றும் டெப்போ கிளைக் கூட்டங்களை உடனடியாக கூட்டு!
18. பாட்டாளி வர்க்க ஜனநாயகமும் பாட்டாளி வர்க்க சர்வதேசியமும் ஓங்குக!

# ஸ்டாண்டர்டு தொழிலாளர்களுக்கு புதிய வேலைத்திட்டம்

12ம் பக்கத் தொடர்ச்சி

நாடுமுழுவதும் தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக மூர்க்கமான தாக்குதல் கொடுத்து வரும் முதலாளித்துவஅரசைத் தூக்கி வீசி, தொழிலாள விவசாய அரசாங்கத்தினை அமைக்கும் சோசலிச வேலைத் திட்டத்தை நிராகரிப்பதன மூலம், உலக ஏகாதிபத்தியத்தினதும், இந்திய முதலாளித்துவத்தினதும் நம்பகமான முதல் தர ஏஜெண்டுகளாக தொழிலாள வர்க்க இயக்கத்துக்குள் இருந்துகொண்டுவேலை செய்து வருகிறார்கள்.

கதவடைப்புகளை முறியடிக்க அனைத்துத் தொழிலாளர்களையும் அணிதிரட்டுவது 'ஆகாசக் கோட்டை' என்று கூறும் கோபு, ஜனார்த்தனங்களின் AITUC CITU தொழிற்சங்கங்கள், ஆகஸ்ட் 30 ஒரு நாள் பந்திற்கு' அணி திரட்டவில்லையா? தாங்கள் திட்டமிட்டுத் தொழிலாள வர்க்கத்தைக் காட்டிக்கொடுக்கும் ஒருவேலையாகவே 'தொழிலாளிவரமாட்டான்' என்று தொழிலாளிமேல் பழி போடுகின்றனர்.

## தொழிற்சங்கத்தில் அரசியல் கூடாதாம்

தொழிலாளர்கள் CPI (M) CPI ஸ்டாலினிசத் தலைமைகளை, முதலாளித்துவக் கட்சிகளுடனான உறவைத் துண்டித்துக் கொண்டு ஒரு தொழிலாள விவசாய அரசாங்கம் அமைக்கப் போராடுமாறு நிர்ப்பந்திக்க வேண்டும். AITUC, CITU, தலைமைகள் அகில இந்திய அளவில் தொழிற்சங்கங்களின் மாநாட்டைக்கூட்டி ஒரு காலவரையற்ற பொது வேலை நிறுத்தத்தின் மூலம் முதலாளித்துவ அரசாங்கத்தைத் தூக்கிவீசி தொழிலாளர்-விவசாய அரசாங்கம் அமைக்கப் போராட வேண்டும் என்று நாம் கேட்கும் பொழுது, தொழிற்சங்கத்தின் அரசியல் பேசக்கூடாது என்கின்றனர்.

ஆனால் கம்யூனிசத்தின் மூலவர்களான கார்ல்மார்க்சும், எங்கெல்சும் என்ன கூறுகிறார் என்பதைக் கம்யூனிஸ்ட்கட்சி அறிக்கையில் பார்ப்போம்.

**"வர்க்கப் போராட்டம் ஒவ்வொன்றும் ஓர் அரசியல் போராட்டமாகும்"**

(கம்யூ. அறிக்கை பக்கம் 58.)

ஆனால் இதே ஸ்டாலினிசத் தலைமைகள் 30ந் தேதி பந்தில் வி. பி. சிங் கருணாநிதி, ராமராவ், தேவிலால் முதலாளித்துவக் கட்சிகளுடன் உறவை வைத்துக்கொண்டே, ராஜீவின் முதலாளித்துவக் கட்சியை அகற்றி தேசிய முன்னணி முதலாளித்துவக் கட்சியை அரியணை ஏற்றுவதற்காக, நாடு முழுதும் உள்ள தங்களுடைய AITUC, CITU வினை ஒரு நாள் பந்திற்கு ஈடுபடச் செய்தனர். இப்போது சங்கம் அரசியலில் ஈடுபடவில்லையா? இவர்கள் கோருவதெல்லாம் தொழிற்சங்கம் முதலாளித்துவ வர்க்கததிற்குசேவகம்செய்யும் மக்கள் முன்னணிக்கூட்டு அரசியல் நடத்தலாமாம். தொழிலாள வர்க்கம் ஆட்சியதிகாரத்திற்குச் செல்ல வைக்கும் 'மார்க்சிய அரசியல்கூடாதாம். தங்களது வர்க்கக்கூட்டு அரசியலை மூடிமறைக்கவே' தொழிற்சங்கத்தில் அரசியல் கூடாது என்று கோபு, தங்கமணி, ஜனார்த்தனங்கள் கூறிவருகின்றனர்.

## தொழிலாளர்களைக் கண்டு அஞ்சும் ஸ்டாலினிச அதிகாரத்துவம்

BIFR அழைப்பின் பேரில் டெல்லி சென்று வந்து, பேச்சு வார்த்தை பற்றிய விபரங்களை அறிவிப்பதற்காக (12-7-89) அன்று மாலை 4 மணிக்கு கூட்டம் நடைபெறுவதாகக் கூறிவிட்டு பின்னர் அந்தக்கூட்டத்தை காலை 10 மணிக்கு என மாற்றினார்கள். தங்களது காட்டிக்கொடுப்புகளைப்பற்றிய கேள்விக்கணைகள் முன்னால் நின்று பிடிக்க முடியாதென்பதாலும்அம்பலப்போட்டுபோவதால் ஏற்படும் ஆபத்துகளைத் தவிர்க்க வேண்டுமெனபதாலும், பிரதானமாக முதலாளிகளுக்கு முண்டு கொடுக்கும் தங்களது கைங்கரியத்திற்கு, ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிலாளர்களினால் தடை வந்துவிடக்கூடாதே என்ற எண்ணத்தினாலும் அப்படிச் செய்தார்கள்.

1—7—89 அன்று கூடியதற்குப்பின் இதுவரை செயற் குழுவைக் கூட்டாமலேயே, மறியல் போராட்டம்பற்றி அறிவிப்புச் செய்கின்றனர். போராட்டக் குழுவினை செயற்குழுவைக் கூட்டி, செயற்குழு ஒப்புதல் பெறவேண்டும் என்ற தொழிற் சங்க விதிமுறைகளையும் தூக்கி வீசிவிட்டு அனுமதேய 40 பக்க நோட்டுப் புத்தகங்களில் (மினிட் புத்தகத்தை ஒளித்து வைத்துவிட்டு) செயற்குழு உறுப்பினரின் ஒப்புதல் கையெழுத்தைப் போட்டுவிட்டுச் செல்லுமாறு செய்வதெல்லாம் தங்களது திட்டமிட்ட காட்டிக் கொடுத்தலுக்கு செயற்குழுவிற்குள் உள்ள எதிர்ப்புகளைத் தவிர்ப்பதற்காகத்தான்.

எனவே தோழர்களே! ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிலாளர்கள் உட்பட அனைத்துத்தொழிலாளவர்க்கத்திற்கும் எதிராக தொடுக்கப்பட்டிருக்கும் கதவடைப்பு, ஆட்குறைப்பு, சம்பள வெட்டுக்கள் இவற்றுக்குஎதிராகஅனைத்துத் தொழிலாள வர்க்கத்தையும் அணிதிரட்டி ஒரு காலவரையற்ற பொதுவேலை நிறுத்தத்தினூடாக முதலாளிகளுக்கு ஒரு பைசாகூட நஷ்டஈடின்றி, ஸ்டாண்டர்ட் மோட்டார் உட்பட அனைத்துத் தொழிற்சாலைகளையும் வங்கிகளையும் தொழிலாள வர்க்க ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கும் வேலைத் திட்டத்தைக் செயற்படுத்தும் புரட்சிகர டிராட்ஸ்கிசத் தலைமையைக் கட்டி அமைக்க வேண்டும். இதன்பொருள் இன்னொரு தொழிற்சங்கம் அமைக்கவேண்டும் என்பதல்ல அவ்வாறு எவரேனும் முயற்சிப்பின் அதனை தொழிலாளர்கள் முழுமையாக நிராகரிக்க வேண்டும். மாருக சங்கத்திற்குள் சோசலிச வேலைத்திட்டத்திற்காகப்போராடும் புரட்சித் தலைமையைக் கொண்டு வர வேண்டும்.

இதற்காகப் போராடும் டிராட்ஸ்கிச சோசலிசத் தொழிலாளர் அணி பின்வரும்கோரிக்கைகளை முன் வைக்கிறது

★ ஆலையின அனைத்துக் கணக்குப் புத்தகங்களையும் தொழிலாள வர்க்கத்தின் பரிசிலனைக்குத் திறக்கப்போராடு!

★ முதலாளித்துவ IDBI அறிக்கையை நிராகரி!

★ ஆட் குறைப்பையும், சம்பள வெட்டையும் V.R.S. எனும் பெயரில் திணிக்கப்படும் மறைமுக ஆட் குறைப்பையும் முறியடி!

★ ஆலையில் உள்ளிருப்புப் போராட்டத்தைநடத்தும் தொழிலாளர் களால் தேர்ந்தெடுக்கப்படும் தொழிலாளர்க்கு விரோதமாக செயற்பட்டால் உடனே திரும்ப அழைக்கவுமான'ஆலைக்குழுவைத் தேர்ந்தெடு!


★ AITUC, CITU உட்பட்டஅனைத்துதொழிற்சங்கங்களின் மாநாட்டைக்கூட்டி, ஆலை மூடல், ஆட்குறைப்பு, சம்பள வெட்டுக்களை முறியடிக்க ஒரு காலவரையற்ற அகில இந்திய பொது வேலை நிறுத்தத்தில்இறங்கும்படி AITUC, CITU தலைமைகளை நிர்ப்பந்தி

★ ஸ்டாலினிச CPI CPI (m) கட்சித் தலைமைகளை முதலாளித்துவக் கட்சிகளுடனான உறவைத் துண்டித்துக் கொண்டு, ஒரு தொழிலாளர் விவசாய அரசாங்கம் அமைக்கப் போராடும்படி நிர்ப்பந்தி!

★ துரோகத் தலைமைகளை தூக்கி எறிந்து சோசலிசவேலைத்திட்டத்திற்காகப்போராடும்டிராட்ஸ்கிச சோசலிசத் தொழிலாளர் அணியைக் கட்டி எழுப்பு!

★ உலக சோசலிசப் புரட்சிக்காகப் போராடும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தை (SLL) கட்டி எழுப்பு!

# சாலை மறியலில் பாலாஜி கேஸ் சிலிண்டர் தொழிலாளர்கள்




பாலாஜி கேஸ் சிலிண்டரில் அடிப்படை உரிமைகளுக்காக போராடிய 'குற்றத்துக்காக' வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் 5 வருடங்கள் கழிந்திருப்பினும் தமது போராட்டத்தை உறுதியாக தொடர்ந்து முன்னெடுக்கத் தயார் என்பதை நிரூபிக்கும் முகமாக, ஆகஸ்ட் 25ல் திருவான்மியூர் பாலவாக்கத்தில் உள்ள மார்கெட் பகுதியில், மாமல்லபுரம் நெடுஞ்சாலையில், காலை 9 மணியிலிருந்து 10½ மணிக்கு போலீசார் அப்புறப்படுத்தும் வரை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

250தொழிலாளர்கள்பங்கு கொண்ட இந்த சாலை மறியப் போராட்டத்தை பாலாஜி கேஸ் சிலிண்டர் தொழிலாளர் சங்கம் ஏற்பாடுசெய்தது 'பகுதியிலுள்ள அனைத்து இளைஞர்களுக்கும் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கும் வேலை கொடு' "பாலாஜி கேஸ் தொழிலாளர்சங்கத்தை அங்கீகாரம் செய்" அரசே ஆலையை ஏற்று நடத்து." சோசலிசம்வெல்க, முதலாளித்துவம்ஒழிக"போன்ற பலகோஷங்களை மறியலில் ஈடுபட்ட தொழிலாளர்கள்எழுப்பினர்.

தமது இழந்த வேலைகளை மீண்டும் பெற்றுக்கொள்ளும் போராட்டத்தை, மீண்டும் பொது மக்கள் நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

(தொடரும்)

www.padippakam.com



# சென்னை துப்புரவு தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை வெல்ல ஏஐடியுசி, சிஐடியுவின் முழு பலத்தையும் அணி திரட்டப் போராடு!

சென்னை மாநகராட்சி அதன் 300 ஆண்டு நிறைவை கோலாகலமாக கொண்டாடும் அதே சமயம் அதில் பணியும் 6,000 துப்புரவு தொழிலாளர்கள் வாரம் ஒருநாள்கூட விடுமுறை இல்லாதவர்களாக வருடம் 365 நாட்களும் வேலை செய்ய வேண்டிய கொத்தடிமைகளாக நடத்தப்படுகின்றனர் இப்படியாக தொடர்ந்து கோரமாக சுரண்டும் முதலாளித்துவ அமைப்பு முறைக்கும் அதன் ஏஜண்டுகளான கார்ப்பரேசன் நிர்வாக அதிகாரிகளுக்கும், அதேபோல் இதற்கு உடந்தையாக 40 வருடங்களுக்கும் மேலாகசெயற்படும் கார்ப்பரேசன் லேபர் யூனியனின் துரோக ஸ்டாலினிசத்தலைமைகளுக்கும் எதிராக துப்புரவுதொழிலாளர்கள் கிளர்ந்தெழ தொடங்கி இருக்கின்றார்கள்.

துப்புரவு தொழிலாளர்களின் பெரும்பான்மையினர் மத்தியில் இருக்கும் கல்வி அறிவின்மையை மேலும் சுமக்குசாதகமாக்கிக்கொண்டு அதிகாரிகளும் அதற்குஒத்துழைக்கும்தொழிற்சங்கத் தலைமையும், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும், வேலை நிலைமைகளையும் பன்மடங்கு மோசமாக்கி உள்ளது. போக்குவரத்து



சென்னை துப்புரவு தொழிலாளர்கள்

சாதனங்களும் தொழில்நுட்பங்களும்மிகவும் வளர்ச்சியடைந்த இன்றைய காலகட்டத்திலே முறையாக தீனிகூட போடாத எலும்பும் தோலுமான கால்நடைகளை பயன்படுத்துவதாலும், மேலும் வண்டி ஓட்டும் வேலையையும்குப்பை அகற்றும் வேலையையும் ஒரே தொழிலாளியேசெய்யவேண்டி இருப்பதாலும் அது அத் தொழிலாளிக்கு பெரும் கஷ்டத்தை உண்டுபண்ணுவது மட்டுமல்லாமல் அதன்விளைவாகபொது மக்களிடமிருந்து அனுவசிய மான அவச் சொற்களையும் கேட்க வேண்டிய நிலைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இன்றைய உலக முதலாளித்துவ நெருக்கடி, உலகளவில் தொழிலாளர்களின் வேலைகளில் அழிப்பையும், வேலைப்பளு அதிகரிப்பையும், வாழ்க்கைத் தரசீரழிவையும் உண்டுபண்ணி வருகிறது, முதலாளித்துவ வர்க்கமும் சுரண்டப்படும் தொழிலாள வர்க்கமும் தீரா பகை கொண்டவர்க்கங்களாக போராட்டத்தை நடத்துகின்றன. நீண்ட காலத்திற்கு முன்பே ஸ்தாபனமயப்படுத்தப்பட்டு போர்க்குணமிக்க போராட்டங்களின் மூலம் தொழிலாள வர்க்கத்தின் ஒரு கணிசமான பகுதியினர் வென்றெடுத்த அடிப்படை உரிமைகள் யாவும் துரோக ஸ்டாலினிச மற்றும் இடைநிலை வாத தொழிற்சங்கத் தலைமைகளின் காட்டிக்கொடுப்புகளின் காரணமாக படிப்படியாக பறிக்கப்பட்டு வருகின்றன. அனைத்துத் தொழிலாளர்களின் வேலைகளை பாதுகாப்பதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் நடைமுறை சாத்தியமில்லை என்றவாறு தொழிலாளர்கள் மத்தியில் முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகளாக செயற்படும் ஸ்டாலினிச சி. பி. ஐ (எம்), சி.பி.ஐ. யுசிபி தலைமைகளும். மாவோவாத இந்திய மக்கள் முன்னணி போன்ற தலைமைகளும் முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடிக்கு திவால்நிலைக்கு தொழிலாளர்களை 'பலி' கொடுக்கின்றனர்.

இவ்வாறான நிலைமைகளிலேயே போராட்டக்களத்தில் குதித்து புதிய உரிமைகளை வென்றெடுக்க சென்னைத்துப்புரவு தொழிலாளர்கள் நடத்தும் போராட்டமும், போராடிப் பெற்றஉரிமைகளைதொடர்ந்து பேணுவதற்காக தொழிலாள வர்க்கத்தின் ஏனையபகுதியினர் நடத்தும் போராட்டமும் ஒன்றிணைகின்றன.

ஏ ஐ.டி.யு.சி, சி.ஐ.டி.யு, தொழிற் சங்கத் தலைமையின் அரசியல் குருக்களான ஸ்டாலினிச சி பி ஐ, சி.பி ஐ (எம்) தலைமைகள்என்னவிலைகொடுத்தும் இன்று மரண வேதனையில் மூச்சு திணறும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு உயிர் கொடுக்க அயராது உழைக்கின்றனர், தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களினால் வெறுக்கப்பட்டு நிராகரிக்கப்படும் டாட்டா பிர்லாக்களின் ராஜீவ்காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி பிரதிநிதிகளுக்கு பதிலாக, வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி அமைப்பைச்சேர்ந்த பிரதிநிதிகளை ஆட்சியில் அமர்த்தி முதலாளித்துவ ஆட்சியைத் தொடர்ந்து பேணும், அவர்களுடைய அரசியல் வேலைத்திட்டங்களின் காரணமாக சோசலிச வேலைத்திட்டத்திற்கு மற்றும் தொழிலாளர்களின் ஆட்சி அதிகாரத்திற்காக போராடுவது 'ஆகாசக்கோட்டை' என்று கூறுகின்றனர்.

11ம் பக்கம் பார்க்க

# ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளர்களுக்கு புதிய வேலைத்திட்டம் அவசியம்!

ஒரு வருட சம்பளம் கொடுக்காமல் கடந்த 7 மாதங்களாக கதவடைப்புச் செய்யப்பட்டு, பட்டினி போடப்பட்டுள்ள ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிலாள வர்க்கத்திற்கு ஆதரவாக முழு தொழிலாள வர்க்க பலத்தையும் அணி திரட்டி, முதலாளி முத்தையாவினதும் முதலாளித்துவ அரசாங்கத்தினதும் கூட்டுத் தாக்குதலை முறியடிப்பதற்குப் பதிலாக, சங்கத்தலைமையில் வீற்றிருக்கும் ஸ்டாலினிச AITUC தலைமை கோபுக்களும், C ITU தலைமை ஜனார்த்தனங்களும் தொடர்ந்து தொழிலாள வர்க்கத்தினை சோர்வடைச் செய்யும், விரக்தியடையச் செய்யும் வழியில் போராட்டத்தை திசைதிருப்பி பட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதைக்கண்டு கொதித்தெழும் தொழிலாள வர்க்கத்தைக் கண்டு அஞ்சி, இந்தத்தலைமைகள் முறைப்படி செயற்குழு, பொதுச்சபைகளைக் கூட்டாமலும், கூட்ட நேரங்களை திடீரென மாற்றியும் தொழிலாள வர்க்க பலத்தின் முன் முகம் கொடுக்கமுடியாமல் தவிர்த்து வருகின்றனர் கோபு, ஜனார்த்தனம் ஸ்டாலினிசத் தலைமைகள், தாங்கள் முத்தையாவுக்குச் சாதகமான IDBI அறிக்கைக்குத்துணை போவதையும், உண்ணாவிரதப் போராட்டங்களில் தொழிலாளர்களை திசை திருப்புவதையும், (V.R.S திட்டம்)தானாக (?) ஒய்வு பெறும் திட்டம் எனும்பேரில் ஆட்குறைப்புக்கு தயாராக இருப்பதையும், முழு தொழிலாள வர்க்கபலத்தையும்திரட்டாமல் இருப்பதையும் விமர்சிக்கும் எந்த ஒரு தொழிலாளியையும் சங்க ஒற்றுமைக்குஎதிரானவர்கள் எனவும்அவர்கள்பேச்சைக் கேட்காது, ஒற்றுமையைக் காக்கவேண்டும் என்றும் தவறு மல் முழங்கி வருகின்றனர். இவர்கள் கோருவது எல்லாம் காட்டிக்கொடுப்புக்கு மௌனமாக ஒத்துழைக்க வேண்டுமென்பதோ தலைவர்களை விமர்சித்தால் ஒற்றுமை குலைந்து விடும் என்று கூறிக்கொண்டே ஒவ்வொரு போராட்டங்களிலும் ஒன்றன்பின் ஒன்றாக காட்டிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்

BIFR சங்கத்தை பேச்சு வார்த்தைக்கு அழைத்தது. IDBI ஸ்டாண்டர்ட்மோட்டார் நிர்வாக அதிகாரிகள் கொடுத்த தகவல் புள்ளி விவரங்களின் அடிப்படையில்,நலிவுற்றதாகக் கூறும்' ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலையை நிலைநிறுத்த 10 ஆண்டுகளாகும் பிடிக்கும் என்றும் அதற்காக ஒரு ஐந்து வருட திட்டம் ஒன்றை தயாரித்து அளித்து உள்ளது

சங்கத்தலைமைகள் முதலாளி முத்தையாவுக்குச் சாதகமான IDBI அறிக்கைக்கு எதிராக எந்த ஒரு வேலைத்திட்டமும் வைக்காமல், இவ்வறிக்கைபற்றிய பேச்சுகளில்,டெல்லிக்குச் சென்று கலந்துகொண்டனர்.

IDBI ஸ்டாண்டர்ட் மோட்டார் ஆலையை நிலைநிறுத்த எடுக்கப்பட வேண்டியதாகக் கூறும் அனைத்து நடவடிக்கைகளும் தொழிலாள வர்க்கத்தைப் பலியிட்டு ஏற்படுத்தக் கூடியவையாகும்.

LCV வேன் சந்தையின் கூடுதல் பகுதியைக் கைப்பற்றுவது எனும்போது சந்தையில் ஏனைய கம்பெனிகளது வேன்களோடு போட்டியிட்டு வெல்ல வேண்டுமானால், உற்பத்தித் திறனைக்கூட்டல் எனும் பெயரில்தொழிலாளர்களின் வேலைப் பளுவைக்கூட்டல், ஆட்குறைப்புச் செய்தல், நவீனஎந்திரமயமாக்கல் இவற்றைச் செய்ய வேண்டும். இதற்கான அனைத்துச் செலவினங்களையும் தொழிலாள வர்க்கத்தின் தலைமேல் சுமத்தியும் அதனைக் கசக்கிப் பிழிவதன் மூலமும் நிறைவேற்ற வேண்டும் என்று IDBI கோருகிறது.

அக்டோபர் 1, 1989ல் ஆலை திறக்கப்பட வேண்டுமானால் பின்வரும் வகையில் தொழிலாள வர்க்கம் தன்னைப் பலியிட்டு, முதலாளி முத்தையாவுக்கு உதவவேண்டும் என்று வரிசையாக விளக்கியுள்ளது.

1991-1992ல் LCV உற்பத்தி 6000 வருமளவுக்கு செய்தால் தான் கம்பெனி தூக்கி நிறுத்தப்பட்டது என்றுஅர்த்தமாம். அந்த வகையில் இதற்கான மூலதனச்செலவுக்கு 7.4 கோடி வேண்டுமாம். சரக்கட்டுபாடு மற்றும் இதர சாதனங்களுக்காக 6 62 கோடி தேவைப்படுமாம். இதனைத் தொழிலாளர்களிடம்(உள்ளிருந்தே இருந்து எடுக்கப்படுமாம். தொழிலாளர்களது எண்ணிக்கையில் 1200 பேர்களைக் குறைக்க வேண்டுமாம். கதவடைப்பு நாட்களில் சம்பளம் கிடையாதாம் Feb 7, 1994 வரை, கதவடைப்புச் செய்யப்பட்ட Feb, 7, 1989 அன்று இருந்த அதே சம்பளம் தான். விலைவாசி உயர்வுக்கு ஏற்றவாறு சம்பளத்தைஉயர்த்தல் என்ற பேச்சுக்கே இடம் இல்லையாம். 19 கோடிக்கு மேல்பெறுமானமுள்ள ஸ்டாண்டர்ட் 2000ஐ 10 கோடிக்கு விற்றால்தான், கம்பெனியை தூக்கி நிலைநிறுத்தத் தேவைப்படும் 25 கோடியை ஈடுகட்ட முடியுமாம். இல்லையெனில் 36. 04 கோடி தேவைப்படுமாம். மேலும் 3 டன்னுக்குக் குறைவான 89 wheel base உற்பத்தி செய்யத் தேவைப் படும் 900 மனித உழைப்பு நேரத்தை 580ஆகக் குறைத்த தன் மூலமும், 3 டன்னுக்கு மேற்பட்ட 100 wheel Baseஐ தயாரிக்க ஆகும் தற்போதைய நேரம் 500MHலிருந்து அதனை 350 MHஆகக்குறைக்க வேண்டும் என்றும் இதன் மூலம் தொழிலாளர்கள் வேலைப் பளுவைக் கூட்டவேண்டும் என்றும் கூறுகிறது. முழுத் தொழிலாள வர்க்கத்தையும்ஆலையிட்டகரும்பாய் பிழிய உடன்பட வைக்கும் இந்த IDBI அறிக்கையை முற்றாக நிராகரித்தல் வேண்டும்.

## கோபுவும், V. R. S. திட்டமும் :

இந்த அறிக்கையில் 1200 பேரை குறைக்கவேண்டும் என்பதில் தாம் ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டோம் என்று கூறும் AITUC கோபு, (VRS) தானாக (?) வந்து ஓய்வு பெறும் திட்டத்தைப்பற்றிக் கூட, குறிப்பிடவில்லையேஎன்று பேசியுள்ளார். V. R. S திட்டம் எனும் இந்த மறைமுக ஆட்குறைப்புக்கு கோபு, ஜனார்த்தனம் தலைமைகள் உடந்தையாக உள்ளதால்தான், டெல்லிக்கூட்டத்தில் தொழிலாளர் நல(?) ஆணையர் மலைச்சாமி 'தான் அறிந்த வகையில் 600 பேராவது V.R.S. திட்டத்தின் பயன்பெற விரும்புகின்றனர், அந்த வகையிலாவது ஆட்களைக் குறைக்கமுடியும் என்று, கூறியபொழுது, இடையே தலையிட்டு அதனை மறுத்துப் பேசாது மௌனமாய் அங்கீகரித்திருக்கின்றனர்இந்தஸ்டாலினிசத்தலைமைகள், தொழிலாளர்களின் வர்க்கபலத்தைக் குறைப்பதற்கு முதலாளிகளுடன் எந்த வகையிலும் ஒத்துப் போகத் தயாராய் உள்ளனர் என்பதையே இதுகாட்டுகிறது.

உலக முதலாளித்துவநெருக்கடியின்விளைவாக, எல்லாநாடுகளிலும் ஆலைமூடல்கள் ஆட்குறைப்புக்கள், கதவடைப்புகள் முதலாளித்துவத்தால் தொழிலாள வர்க்கத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டு வருகிறது. இந்தியாவைப் பொறுத்தமட்டில் 600க்கு மேற்பட்ட ஆலைகள் கதவடைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், 1,80,000 தொழிற்சாலைகள் நலிவுற்ற நிலையிலும், ஆட்குறைப்பு, சம்பள வெட்டுக்கள் தொடரப்பட்டும் வருகின்றன.

இந்நிலையில் ஊழலில் புளுத்துப்போனதிவாலானராஜீவின் முதலாளித்துவ காங்கிரஸ் அரசாங்கத்தை வெளியேற்ற, சென்ற30ம் தேதி பாரத்பந்த்ஐ முன்நின்று நடத்திய ஸ்டாலினிச CPI(m) CPI கட்சிகள் டாட்டா, பிர்லா, அம்பானி முத்தையாக்களின் ஏஜெண்டான ராஜீவின் முதலாளித்துவ அரசுக்கு மாற்றாக, டாட்டா பிர்லா, அம்பானி வகையறாக்களின் மற்றொரு ஏஜெண்டான வி.பி,சிங் தலைமையிலான முதலாளித்துவ தேசிய முன்னணியையே ஆட்சியில் கொண்டு வரத் துடிக்கின்றனர்.

●11ம் பக்கம் பார்க்க

## B & C மில் 2ம் பக்கத் தொடர்ச்சி

தின்கீழ் தேசியமயமாக்கு!

∴ B&C, ஸ்டாண்டர்டுமோட்டார்ஸ், மாதவரம் பால் பண்ணை, மின்சார ஊழியர் மற்றும் அனைத்து தொழிலாளர் போராட்டங்களையும் ஐக்கியப்படுத்து!

∴ போராட்ட நிதியைதிரட்டு

∴ சிபிஎம், சிபிஐ தலைமைகள் முதலாளித்துவ கட்சிகளுடன் உறவைத்துண்டித்து, சோசலிச வேலைத்திட்டங்களை நிறைவேற்றும் ஒரு தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கம் அமைக்க போராடும்படி நிர்ப்பந்தி!

**ஸ்டாலினிச சி. பி. எம். சி. பி. ஐ. தலைமைகளை முதலாளித்துவ கட்சிகளுடனான அவற்றின் உறவுகளைத் துண்டித்து, தொழிலாளர்கள், விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கப் போராடும்படி நிர்ப்பந்தி!**

சோசலிசத் தொழிலாளர் கழகத்திற்காக S. சக்தி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும் கொண்டு S. சுந்தரம் அவர்களால் சுந்தரம் பிரிண்டிங் ஒர்க்ஸில் அச்சிடப்பட்டது. தொடர்புக்கு : S. சக்தி, தபாற் பெட்டி எண். 968 பெரம்பூர் பேரக்ஸ், சென்னை-12.

Printed in Germany
Neue Arbeiterpresse, Alfredstr. 71, D – 4300 Essen 1, West-Germany

படிப்பகம்